Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1325)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 25 சனிக்கிழமை (07.04.2012) பக்கங்கள் 20 ஓசை – 190













# மனம்மாறும் கூட்டமைப்பு



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக, அதிகாரப் பகிர்வு முயற்சிகள், வெளிப்படைத் தன்மை, ஒத்துப்போகும் நிலை குறித்து அரசு நல்லபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதாகக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளதாகவும், தற்போதைய நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போக்கில் மாற்றம் தென்படுவதாகவும், பிரித்தானிய நாடாளுமன்றின் இலங்கை நட்புறவுக் கழகத்தின் ஸ்தாபகரான நேஸ்பி பிரவுமைக்கல் மொரிஸ் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரை நான் அண்மையில் சந்தித்தேன். யாழ்ப்பாணத்தில் அரசினால் சில நல்ல வேலைகள் செய்யப்படுவதாக அவர் ஏற்றுக்கொண்டார். இருப்பினும் சிவில் நிர்வாகம் மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டுமென அவர்கள் விரும்புகின்றனர். அவர், 13 ஆவது திருத்தத்தை தனது இலக்காக வைத்திருப்பதாகவும் எனக்கு மிகத் தெளிவாக கூறினார்.

சகல கட்சிகளும் 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளதால் நாடாளுமன்ற தெரிவுக்குழு. தேவையற்றது என த.தே. கூட்டமைப்பு தலைவர் கருதுகின்றார்.

கடினமான தீர்மானங்களை எடுக்க

19 ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் நடவடிக்கை வட, கிழக்கில் இல்லை



வடக்கு மற்றும் கிழக்கில் புலிகளின் நடவடிக்கைகள் காணப்படுவதாக வெளியான செய்திகளில் உண்மை யில்லை. உள்ளார்ந்த பாதுகாப்பிற்கு தேவையான அனைத்து பொறிமுறைகளையும் படையினர் மேற்கொண்டுள்ளனர் என்று இராணுவத் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## மந்திரவாதிகளைப் போல செயற்படும் அமைச்சர்கள்

ஆளும் கட்சியின் அமைச்சர்கள் மந்திரவாதிகளைப் போன்று செயற்பட்டு வருவதாக ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான வித்தைகளை காண்பிக்கின்றார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பந்துல குணவர்தன, 2500 ரூபாவைக் கொண்டு ஒரு மாதம் சீவிக்கக் கூடிய மந்திரத்தை கற்றுத்தருகிறார். மற்றுமொரு மந்திரவாதியான விமல் வீரவன்ச, அமெரிக்கப் பொருட்களை நிராகரித்து காலனித்துவ ஆதிக்கத்தை முறியடிக்கும் வித்தையை கற்றுக் கொடுத்துள்ளார்.

மின் குமிழ்களை மக்கள் இரவு நேரத்திலேயே அதிகம் பயன்படுத்துவதாகவும், மின் குமிழ்களின் தேவை உண்மையில் இரவு நேரத்திலேயே காணப்படுகின்றன. இவ்வாறான ஓர் நிலைமையில் மற்றுமொரு மந்திரவாதியான அமைச்சர் சம்பிக்க ரணவக்க இரவு 8 - 10 மணி வரை மின் குமிழ்களை அணைக்குமாறு கோருகின்றார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 17 பணியாளர் கொலை விசாரணை குறித்து கேள்வி

பட்டினிக்கு எதிரான இயக்கம் என அழைக்கப்படும் சர்வதேச உதவி முகவரகத்தின் பிரெஞ்சுக் கிளையுடன் இணைந்து பணியாற்றிய 17 ஊழியர்கள் மூதூரில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையை முன்னெடுப்பதில் புதிய இராஜதந்திர முன்னெடுப்புகளை பிரெஞ்சு தூதரகம் ஆரம்பித்துள்ளது.

இந்த சம்பவம் நடைபெற்று ஆறு வருடங்கள் கடந்துள்ள போதிலும் கொலைகள் தொடர்பான விசாரணையின் தற்போதைய நிலைபற்றி பேசுவதற்காக பிரெஞ்சு தூதுவர் கிறிஸ்ரைன் றொபிக்கொன், சட்ட மா அதிபரை சந்தித்துள்ளார்.

மாவிலாறு துருசுகளை விடுலைப் புலிகள் மூடியதைத் தொடர்ந்து ஆரம்பித்த யுத்தத்தின் ஆரம்பக்கட்டத்தில் இந்த உதவி நிறுவன பணியாளர்கள் கொல்லப்பட்டனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் பீரிஸ் மாலைதீவிற்கு

மாலைதீவில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் இலங்கையின் உயர்மட்ட இராஜதந்திரியொருவர், விஜயம் செய்யும் முதல் சந்தர்ப்பமாக இது கருதப்படுகின்றது. கடந்த பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி முஹமட் வாஹீட் ஹசன் மாலைதீவின் ஜனாதிபதியாகப் பதவியேற்றார். ஜனாதிபதி வாஹீட், வெளிவிவகார அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் உள்துறை அமைச்சர் ஆகியோருடன் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார். இருதரப்பு உறவுகள் மற்றும் அண்மைய அரசியல் நிலைமைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளது. மாலைதீவு விஜயத்தை முடித்துக்கொண்டு அமைச்சர் பீரிஸ் நாளை நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## காணாமற்போன விநாயகர் விக்கிரகம்

யாழ். வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பகுதியில் சரித்திரப் பிரசித்திபெற்ற கௌத்தந்துறைப் பிள்ளையார் ஆலயத்தில் உள்ள விநாயகர் விக்கிரகம் கொள்ளையர்களால் திருடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்றைய தினம் வழமை போல முற்பகல் 11.00 மணியளவில் ஆலயக் குருக்கள் பூஜை செய்வதற்காக ஆலயத்திற்குச் சென்றுள்ளார். அங்கே ஆலயத்தின் கதவு உடைக்கப்பட்டிருந்ததைக் கண்ட குருக்கள் அதிர்ச்சியடைந்துள்ளார். அதன் பின்னர் ஆலயத்தின் உள்ளே சென்று பார்த்தபோது பெறுமதிவாய்ந்த ஐம்பொன்னாலான விநாயகர் விக்கிரகம் திருடப்பட்டதை அவதானித்த ஆலயக் குருக்கள் உடனடியாக ஆலய நிர்வாக சபையினருக்கு அறிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். நகர சூழலில் கொள்ளை



யாழ்.நகரை அண்டியுள்ள இரண்டு பிரதேசங்களில் கடந்த புதன் கிழமை இரவு பல இலட்சம ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன. குறித்த சம்பவங்கள் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, இரவு கொட்டடி பகுதியில் வீட்டின் ஜன்னல் கம்பிகளை அறுத்துக்கொண்டு உள்நுழைந்து பின்னர் கதவுகளைத் திறந்து கொண்டு முழுமையாக உள்ளே வந்த 4 பேர் கொண்ட கொள்ளையர் குழுவினர் வீட்டில் தனித்திருந்த முதியவரை ஆயுதமுனையில் அச்சுறுத்தி வீட்டிலிருந்த 30 பவுண் நகை மற்றும் பெறுமதியான பொருட்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். அதிக மக்கள் நடமாட்டமற்ற

19 ஆம் பக்கம் பார்க்க

## கைதடியில் அமையவுள்ளது அருங்கலைகள் பயிற்சிக்கூடம்



கைதடியில் புதுப்பொலிவுடன் புனரமைக்கப்பட்டு வரும் பனை வள ஆராய்ச்சி நிலையத்திற்கு முன்பாக அமையப் பெறவுள்ள விற்பனைக் காட்சிக்கூடத்தை அமைப்பது மற்றும் தேசிய அருங்கலைகள் பேரவையின் பயிற்சிக் கூடத்தை அமைப்பது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆராய்ந்தறிந்து கொண்டார். கைதடிப் பகுதிக்கு நேற்றைய தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் புனரமைக்கப்பட்டுவரும் பனை வள ஆராய்ச்சி நிலையத்தின் புனரமைப்புப் பணிகள் குறித்துக் கேட்டறிந்து கொண்டதுடன் வளாகத்தில் பயன்தரு மரங்களை நடுகை செய்வது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் துறைசார்ந்தோரிடம் பணிப்புரை வழங்கினார்.

இதனிடையே பனைவள ஆராய்ச்சி நிலைய வீதிக்கு மறுபுறமாக பனை அபிவிருத்திச் சபையின் விற்பனை மற்றும் காட்சிக் கூடங்களை அமைப்பது தொடர்பிலும் அதற்கு அண்மையாக தேசிய அருங்கலைகள் பேரவையின் பயிற்சிக் கூடமொன்றை அமைப்பது தொடர்பில் ஆராய்ந்த அமைச்சர் அது தொடர்பிலுள்ள இடர்பாடுகள் தொடர்பிலும் விரிவாக ஆராய்ந்தறிந்து கொண்டார். இதன்போது துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.

# தரமான மருத்துவ சேவை யாழ். குடாவுக்குத் தேவை

## பிரிட்டிஷ் எம்.பி.யிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையின் வைத்திய சேவையை தரமுயர்த்துவதற்கு உதவி புரிய வேண்டுமென பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் லோர்ட்ஸ் நெசபியிடம் யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவ சங்கத் தலைவர் எஸ்.ரவிராஜ் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கின் மருத்துவ சேவையில் மாபெரும் பணியாற்றிவரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினரும் அவரது பாரியாரும் விஜயம் மேற்கொண்டு வைத்தியசாலையைப் பார்வையிட்டனர்.

வைத்தியசாலையில் காணப்படும் குறைநிறைகளைக் கேட்டறிந்த வேளையில் இருதய சுற்று சிகிச்சைப் பிரிவு அவசியமான தேவையாக காணப்படுமிடத்து அதற்கான கோரிக்கையை எழுத்துமூலம் தருமாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக சாதகமான பதிலைப் பெற்றுத்தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.

இலங்கையில் காணப்படும் வைத்தியசாலைகளில் 7 வைத்தியசாலைகளில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொண்டபோதிலும், யாழ். போதனா வைத்தியசாலையில் எந்தவிதமான அபிவிருத்திப் பணிகளும் இடம்பெறவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

விபத்து பிரிவு, நரம்பியல் பிரிவு, சிறுநீரகப் பிரிவு, முக மாற்று அறுவை சிகிச்சைப் பிரிவு போன்ற சிகிச்சைப் பிரிவுகள் இல்லாமை பற்றியும், வறியவர்கள் எதிர்நோக்குகின்ற பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (எஸ்)

# குடும்பஸ்தர் திடீர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் நஞ்சருந்திய மையால் குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார். கொக்குவில் பொற்பதி வீதியில் நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதேயிடத்தைச் சேர்ந்த கந்தசாமி ஸ்ரீஸ்கந்தா (வயது - 54) என்ற குடும்பஸ்தர் கடந்த ஒரு வருடமாக மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

நேற்று முன்தினம் இரவு மது போதையில் வீட்டிற்கு வந்தவர் படுக்கைக்குச் சென்றுள்ளார். அதிகாலை 4.00 மணியளவில் படுக்கையறையில் பார்த்தபோது இறந்த நிலையில் இருந்துள்ளார்.

கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முடிந்த பின்னர் சடலத்தினை பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (எஸ்)

# முளைகொள்ளும் விஷமத்தனம்

(திருநெல்வேலி)

தமக்கு வேண்டாதவர்களின் வீடுகள், வர்த்தக நிலையங்களின் முன்பாக கழிவுப் பொருட்கள் மற்றும் மிருகங்களின் எச்சங்கள் போன்றவற்றை இரவில் கொண்டு வந்து இரகசியமாகக் கொட்டிவிட்டு தப்பிச்செல்லும் சில விஷமிகளின் செயற்பாடுகள் பற்றி பொதுமக்கள் மத்தியில் பெரும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மறைமுகமாகப் பயமுறுத்தும் வகையிலும் மனதளவில் அவர்களை கிலிகொள்ள வைக்கும் முறையில் மேற்கொள்ளப்படும் இவ்விஷமிகளின் இந்நடவடிக்கை உரியவர்களால் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என பொது மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கல்வியங்காடு பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு முன்னால் சாம்பல், பூசனிக்காய், பூக்கள் போன்ற பொருட்கள் இரவோடிரவாகக் கொண்டுவந்து கொட்டப்பட்டிருந்தன. கொட்டப்பட்டிருந்த சாம்பல் சுடலை சாம்பல் என கூடியிருந்த சிலரால் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து வர்த்தகர் பெரும் கலவரமடைந்தவராகக் காணப்பட்டார்.

இதே பகுதியில் அழகாக மை பூசப்பட்டிருந்த வீடு ஒன்றின் வெளிப்பக்கமும் அதன் முன்பக்க மதிலும் கழிவு ஒயில் ஊற்றப்பட்டு அசிங்கப்படுத்தப்பட்டிருந்தது.

இதேமாதிரி கொக்குவில் பகுதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட சனசமூக நிலையம் மற்றும் முன்பள்ளி மதிலும் கழிவு ஒயிலால் அபிஷேகம் செய்யப்பட்டிருந்தது.

கொக்குவில் பகுதியிலுள்ள மற்றுமொரு அரச உத்தியோகத்தரின் வீட்டுக்கு முன்னால் இறாலின் கழிவுகள் மற்றும் எச்சங்கள் கொட்டப்பட்டிருந்தன.

யாழ். குடாநாடு பலவிதமான சீரழிவுகளால் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இதுபோன்ற சீர்கெட்ட நடவடிக்கையினாலும் பொதுமக்கள் பல துன்பங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# வரம்பு மீறும் தொழிலாளர் கண்காணிப்பது யார்?



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் புதிய கட்டட வேலை செய்யும் ஊழியர்கள் கட்டடத்திற்கு முன்னால் இருக்கும் மர நிழலின் கீழ் இளைப்பாற இருக்கும் போது அவ்வீதியூடாக செல்லும் பெண்களுடன் சேஷ்டை புரிவதாக பலர் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியில் இளைப்பாறும் இளைஞர்கள் பெண்களை தகாத வார்த்தைகளால் அழைப்பதுடன், சகிக்க முடியாத வார்த்தைப் பிரயோகம் மேற்கொள்வதாகவும் அதனால் தாம் அவ்வீதியில் பயணிப்பதற்கு அசௌகரியப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலைப் பகுதியில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுவதனால் வைத்தியசாலைக்கும் அவப்பெயர் ஏற்பட்டுள்ளது.

எனவே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது தவிர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் பொலிஸாரும் கவனத்தில் கொள்ள வேண்டும் என பலர் கோரிக்கை விடுக்கின்றனர். (எஸ்)

# கடற்கலங்கள் அத்துமீறல்

(பூநகரி)

பூநகரி கிராஞ்சி கடற்பகுதியில் மீனவர்களின் 4 வலைகள் சேதமாக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிக்குள் பிரவேசித்த சுமார் 25 கடற்கலங்கள் இந்த வலைகளை சேதப்படுத்தியுள்ளன. இதனால் இங்கு தொழிலில் ஈடுபட்டு வந்த 15 குடும்பங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது. சுமார் இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் சேதமாகியுள்ளன.

# ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு துரித கற்றல் கருத்தரங்கு



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய ஆரம்பக் கல்விப் பாடசாலைகளில் உரிய வகுப்புக்களிற்குரிய கற்றல் தேர்ச்சிகளை அடையாத மாணவர்களிற்கென யுனிசெவ் அனுசரணையுடன் நடைபெற்று வரும் துரித கற்றல் கற்பித்தல் செயற்திட்டம் தொடர்பான கருத்தரங்கு நடைபெறவுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

துரித கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்குப் பொறுப்பாகவுள்ள (தரம் - 3,4,5) ஆசிரியர்களுக்கான இந்தக் கருத்தரங்கு கோட்ட ரீதியாக பின்வரும் ஒழுங்கில் காலை 8.00 மணி முதல் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

உடுவில் கோட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கு இராமநாதன் கல்லூரியில் இன்று நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் கோட்ட ஆசிரியர்களுக்கு மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயத்தில் இன்று நடைபெறவுள்ளது.

தெல்லிப்பளை கோட்ட ஆசிரியர்களுக்கு இராமநாதன் கல்லூரியில் நாளை நடைபெவுள்ளது.

சங்கானை கோட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கு மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயத்தில் நாளை நடைபெவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட அந்தந்தப் பிரிவுகளிற்குப் பொறுப்பான ஆசிரியர்களை தவறாது கருத்தரங்கில் கலந்துகொள்ளச் செய்யுமாறு அதிபர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (06)

# ‘மகுடம்’ அறிமுகம்

‘மகுடம்’ காலாண்டு சஞ்சிகையின் அறிமுக விழா இன்று மாலை 3.00 மணிக்கு சுன்னாகம் பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது. கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலய அதிபர் சு.ஸ்ரீகுமரனின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அறிமுகவுரையை மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.ரி.அருள்குமரன் நிகழ்த்துவார்.

சஞ்சிகையை வலி.தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா பிரகாஷ் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் கோ.சுகிர்தன் பெற்றுக்கொள்வார்.

ஆய்வுரைகளை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் ம.பா. மகாலிங்கசிவம், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் பி.குகபரன் ஆகியோர் நிகழ்த்துவார்.

ஏற்புரையை வி.மைக்கல் கொலினும், நன்றியுரையை சுன்னாகம் பொது நூலக நூலகர் க.சௌந்தரராஜனும் நிகழ்த்தவுள்ளனர். (44)


## யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனம்

இல 92/1, சேர். பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

பதிவு இல: 15251

வங்கியியல் கற்கைகள் : CBF, DBF

சான்றுப்படுத்தப்பட்ட கணக்கியல் கற்கைகள் :
AAT, ACCA

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 09.04.2012 – 14.04.2012

மேலதிக விபரங்களிற்கு:
இயக்குனர்
யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனம்
தொ.இல: 0215670345 email: jtiedu@gmail.com
(C/1386)



## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088(C/1350)

### கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1351)

### தவறிவிட்டது

தம்பானை அச்சுவேலியைச் சேர்ந்த இராமச்சந்திரன் சிறிரூபன் என்பவரது தேசிய அடையாள அட்டை (823090544V) தம்பானையிலிருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் 23.12.2011 அன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் 0770773232 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C/1385)


# கரணவாயில் டெங்கு; கட்டுப்படுத்த பிரயத்தனம்



(யாழ்ப்பாணம்)

கரவெட்டி - கரணவாய் பகுதியில் இளைஞர் ஒருவர் டெங்கு நோய்க்கு இலக்காகியுள்ளார்.

குறித்த இளைஞர் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து அப்பகுதி சுகாதாரப் பிரிவினர் டெங்கு ஒழிப்பு மருந்துகளை பாவித்து டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு, டெங்கு நோயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு முயற்சி எடுத்து வருகின்றனர். (100)

# வெளியாகின பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் இறுதியாக நடைபெற்ற வணிகமாணி பகுதி - III பரீட்சைக்கான பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

பரீட்சார்த்திகள் பெறுபேறுகளை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பார்வையிடலாமென இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

**நல்ல குறிக்கோளை அடைவதற்காகத் தொடர்ந்து முயலும் மனிதனின் செயற்பாடே பிற்காலத்தில் அனைவரும் படிக்கும் வரலாறாக மாறுகிறது.**

**-காரல் மார்க்ஸ்**

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## கற்றதனால் ஆய பயன்!

கல்வி மிக முக்கியமானது. ஆனால் கல்வி என்பதை பரீட்சை முடிவில் தரும் ரிப்போர்ட்கள் தீர்மானிப்பதில்லை. முன்பெல்லாம் மாணவர்கள் குருவைத் தேடி அலைந்தார்கள். ஒரு குருவைக் கண்டு பிடித்தால் அந்த குருவுடனே பல ஆண்டு காலம் தங்கினார்கள். அங்கேயே அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் கல்வி கற்றார்கள். அப்போது கல்வி என்பது நல்லொழுக்கம், பணிவு எனும் இரண்டு படிகளைத் தாண்டிய பிறகே கலைகள் கற்கும் நிலைக்கு வரும்.

கல்வி என்பது ஒரு மனிதனை குணவானாக மாற்ற வேண்டும். சமூகத்தோடு இணைந்து வாழ்வதற்குரிய நல்ல பண்புகளைப் போதிக்க வேண்டும் என்பதே பால பாடம். அந்தக் கல்வி அவனுடைய வாழ்க்கைக்குத் தேவையான பொருளாதாரத்தை ஈட்டப் பயன்படுவது அடுத்த கட்டம்.

இந்த வரிசை மாறும் போதுதான் சிக்கல் உருவாகிறது. கல்வி என்பது “வேலைக்கான சாவி” என்று இன்றைய மாணவர்கள் நினைக்கிறார்கள். அதனால்தான் புள்ளிகள் குறைந்து விட்டால் கற்ற கல்வியே பயனில்லாதது என கருதி விடுகிறார்கள்.

நீங்கள் நன்றாகப் படித்து அதிக புள்ளிகள் எடுக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. காரணம் இன்றைய சமூகம் அதை எதிர்பார்க்கிறது. ஆனால் அதையே வெற்றியின் எல்லைக் கோடாகக் கருதிவிட வேண்டாம் என்பதே விஷயம்.

“வகுப்பில் நீதான் முதலாவதாக வரவேணும், கணக்கில நூற்றுக்கு நூறு வாங்கவேணும்....” இப்படிப் பரீட்சைக் காலம் முழுவதும் மாணவர்களைச் சுற்றி எப்போதும் இல்லாத அழுத்தமான சூழல் உருவாகிவிடும். பெரும்பாலும் இத்தகைய அழுத்தங்களில் விழுந்துவிடும் மாணவர்கள் தங்கள் திறமையை விடக் குறைவான புள்ளிகளையே வாங்குவார்கள என்கிறது உளவியல்.

வெற்றி என்பதை புள்ளிகள் கொண்டு அளக்காதீர்கள். குணாதிசயங்கள், இயல்புகள், அறிவு, தன்னம்பிக்கை இவற்றைக் கொண்டு அளக்க வேண்டும். தன்னம்பிக்கை உள்ள இளைஞன் பரீட்சையில் தோற்றால் கூட வாழ்க்கையில் வெற்றி பெறுவான். அவன் தன்னுடைய கல்வியின் மூலமாகப் பெற்ற மூலதனம் அவனுடைய தன்னம்பிக்கை.

கல்வியில் தோற்றதற்காகவோ, மதிப்பெண் குறைந்ததற்காகவோ ஒருவன் தற்கொலை செய்து கொள்கிறான் என்றால், அவனுடைய கல்வியால் என்ன பயன்? அவனுடைய கல்வி அவனுக்குத் தேவையான தன்னம்பிக்கையையும், மன வலிமையையும் தரவில்லை! வாழ்க்கையை எதிர்கொள்ளும் மனதைத் தரவில்லை. மொத்தத்தில் அவனை ஒரு கோழையாய் உருவாக்கியிருக்கிறது.


கல்வி, கடைசிப் பரீட்சையுடன் முடிகிறது என்று கருதுவோர் அறிவிலிகள். கல்வி வாழ்வின் கடைசி நாள் வரை தொடர்ந்து கொண்டே இருக்கும். வாழ்வின் ஒவ்வோர் அனுபவமும் நமக்கு ஒரு பாடத்தைச் சொல்லித் தரும்.

கல்வி நமது மூடநம்பிக்கைகளை அகற்றி அனைத்தையும் அறிவுபூர்வமாகவும், உணர்வுபூர்வமாகவும் அணுகும் மனநிலையைத் தரவேண்டும். கண்மூடித்தனமாக அனைத்தையும் பின்பற்றாமல், அனைத்தையும் தெளிவான மனநிலையில் கேள்வி கேட்கும் அறிவையும் அது தரவேண்டும். அது மாணவர்களிடையே பொறாமையையும், வெறுப்பையும் வளர்க்கக் கூடாது. ஒருவரை விட இன்னொருவர் சிறந்தவர், உயர்ந்தவர், வல்லவர் எனும் சிந்தனைகளை உருவாக்கும் பணியைச் செய்யவே கூடாது.

எனவே நல்ல குணாதிசயங்களையும், தன்னம்பிக்கையையும் முதலில் கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் மீது நம்பிக்கை வைத்து வாழ்க்கையை எதிர்கொள்ளுங்கள். வாழ்க்கை எல்லோருக்கும் ஆனந்தமான சாலைகளை ஆயத்தம் செய்து வைத்திருக்கிறது. நம்பிக்கையுடன் பயணியுங்கள். - **ஆசிரியர்**

# திருகோணமலையில் தளம் அமைக்கும் அமெரிக்கத் திட்டத்தை பிரபா அறிந்திருந்தார்

## – அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



(கொழும்பு)

திருகோணமலையில் தமது தளமொன்றை நிறுவுவதற்காக யுத்தத்தை நீடிக்கவும் தீவிரப்படுத்துவதற்குமாக அமெரிக்கா முயற்சிப்பது குறித்து இந்திய சஞ்சிகையொனறுக்கு வழங்கிய செவ்வியில் புலிகளின் தலைவர் பிரபாகரன் எச்சரித்திருந்ததாக மின் சக்தி வலுசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

பிலியந்தலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அமைச்சர் சம்பிக்க ரணவக்க, 23.03.1986 ஆம் திகதி இந்தியாவின் ‘த வீக்’ சஞ்சிகையில் வெளியான பிரபாகரனின் செவ்வியின் ஒரு பகுதியை வாசித்துக்காட்டினார்.

அமெரிக்காவின் நோக்கமானது இனப்பிரச்சினையை நிலைத்திருக்கவும் தீவிரப்படுத்தவும் செய்வதாகவும், இதன் மூலம் அது இத்தீவில் கால்பதிக்கவும் தனது தளமொன்றை திருகோணமலையில் நிறுவவும் முடியும். அமெரிக்க நிர்வாகமானது இப்பிராந்தியத்தில் தந்திரோபாய மற்றும் பூகோள நலன்களைக் கொண்டுள்ளது.

திருகோணமலையில் இயற்கைத் துறைமுகத்தை கொண்டுள்ள இலங்கையானது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நோக்கமானது படிப்படியாக இந்நாட்டில் ஊடுருவி, அதை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதாகும் என பிரபாகரன் அச்செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவின் டார்வின் நகரில் அமெரிக்கப் படையினர் அண்மையில் தரையிறக்கப்பட்டமையானது ஆசிய - பசுபிக்கில் அமெரிக்க விஸ்தரிப்புக் கொள்கையின் பெரும்பங்காகும்.

அப்பகுதியில் அமெரிக்கத் துருப்பினரின் எண்ணிக்கை எதிர்வரும் மாதங்களில் அதிகரிக்கும். அங்கு அமெரிக்கப் படையினர், 2014 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் நிச்சயமாக நிலை கொண்டிருப்பர் என்றார்.

# இலங்கைக்கு உச்சம் கொடுக்கும் சூரியன்; பன்னிரண்டாம் திகதி முள்ளியவளையில்!

(கொழும்பு)

சூரியன் இலங்கைக்கு மிகவும் அண்மித்து எதிர்வரும் 14ஆம் திகதி வரை காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

சூரியன் பூமியிலிருந்து 150 மில்லியன் கிலோ மீற்றர்கள் தொலைவில் நிலைகொண்டுள்ளது. எட்டு வினாடிகளில் சூரியனின் ஒளிக்கீற்றுகள் பூமியை வந்தடைகின்றன.

சூரியன் உச்சம் பெறுவது பற்றி வளிமண்டலவியல் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் எஸ். ஆர்.ஜயசேகர தெரிவிக்கையில் புவி சூரியனைச் சுற்றி வருகின்ற பாதை நீள்வட்ட பாதையாகும். இந்தச் சுற்றுப் பாதையில் 23 பாகை சரிவில் பூமி சூரியனை சுற்றி வருகின்றது. பூமி சூரியனைச் சுற்றி வரும் போது சூரியன் உச்சம் கொடுக்கும் காலப்பகுதி வேறுபடுகிறது. கடந்த மார்ச் மாதம் 21ஆம் திகதியன்று சூரியன் பூமிக்கு உச்சம். கொடுக்க ஆரம்பித்தது. பின்னர் ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் இருந்து சூரியன் இலங்கைக்கு உச்சம் கொடுக்கின்றது. இது வட திசையை நோக்கி நகர்வடைகிறது. பின்னர் மீண்டும் மறுபக்கம் நகர்வடையும் போது மீண்டும் செப்ரெம்பர் மாதத்தில் சூரியன். இலங்கைக்கு நேரே உச்சம் கொடுக்கும்.

இன்று நண்பகல் 12.13இற்கு, யட்டியந்தோட்டை, ராகமை, கொத்மலை, கரவனெல்ல, கோமாரி ஆகிய பிரதேசங்களிலும், ஏப்ரல் 8 ஆம் திகதி நண்பகல் 12.12 இற்கு கலகெதர, அக்குரண, காரைதீவு, கடுனேரிய உள்ளிட்ட பிரதேசங்களுக்கு சூரியன் உச்சம் கொடுக்கவுள்ளது.

ஒன்பதாம் திகதி பி.ப 12.12 இற்கும் சம்பூர், நிக்கவரெட்டிய, பாலமீன்பாடு பகுதியிலும் பத்தாம் திகதி பி.ப 12.12 இற்கு மரதன்கடவல, ஒட்டுமடு, மஹ இலுப்பல்லம பகுதியிலும் 11 ஆம் திகதி பி.ப 12.12சம்பூர், மஹவிலச்சிய, பளுகதுறை பகுதியிலும் 12ஆம் திகதி பி.ப 12.12 இற்கு திரியாய், ஓமந்தை, மடு பகுதியிலும் 13 ஆம் திகதி பி.ப 12.11 இற்கும் முள்ளியவளை, அம்பகாமம் பகுதியிலும் 14 ஆம் திகதி பி.ப 12.11 இற்கு வீரமலை, உடையார்துறை. ஆகிய இடங்களுக்கு நேரே உச்சம் கொடுககும் எனத் தெரிவித்துள்ளார்.

# யாழிலுள்ள நன்னீர்க் கிணறுகளில் மலசலகூட நீர் கலக்கும் அபாயம்

## வேள்ட் விசன் நிறுவன திட்ட முகாமையாளர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள நன்னீர்க் கிணறுகளில் மலசலகூட நீர் கலப்பதனால் மக்களுக்கு தொற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதாக வேள்ட் விஷன் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் றொசைஸ்றோ தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகர சபையின், மீசாலை பொதுநூலக அபிவிருத்தி ஆலோசனைச் சபையின் உதவியுடன் முன்பள்ளி மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கலும், போஷாக்குணவு பற்றிய கருத்தமர்வும் இடம்பெற்றது.

நகரபிதா இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

கிணற்று நீர் வற்றும் காலங்களில் மலசலகூடக் கழிவு நீரும் கிணற்று நீர் ஊற்றுக்களுடன் கலக்கும் அபாயமும் யாழ்.மாவட்டத்தில் காணப்படுகின்றது. நீர் பரிசோதனையில் இது ஆய்வு செய்யப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மலசல கூடத்திலிருந்து வெளியேறும் கழிவு நீரை மட்டும் வேறு தொட்டிக்குள் செலுத்தி அதனைச் சுத்திகரிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

மழை காலங்களில் நீரைச் சேமித்து வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துதல் வேண்டும். சிறு குளங்களை அமைத்து மழை நீரைக் கடல் நீருடன் சேர விடாது சேமிக்க வேண்டும்.

இதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த நகர சபைகள், பிரதேச சபைகள், சனசமூக நிலையங்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்கள் என்பன முன்வர வேண்டும் என்றார்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் போஷாக்கென்பது பெரும் பிரச்சினையான விடயமாக உள்ளது. குறிப்பாக முன்பள்ளி மாணவர்கள் மற்றும் இளம் பருவத்தினர் மத்தியில் இது அவதானிக்கப்பட்டுள்ளது.


முன்பள்ளி மாணவர்களின் போஷாக்கு, ஆசிரியரகளின் கல்வி மேம்பாடு மற்றும் முன்பள்ளிகளில் அதிகமாகக் காணப்படும் வளப்பற்றாக்குறை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான மேம்பாட்டுத் திட்டங்களை பிரதேச சபைகள், நகரசபைகள், சுகாதாரத் திணைக்களங்கள் மற்றும் கல்வித் திணைக்களங்கள் போன்றவற்றுடன் இணைந்து செயற்படுத்தவுள்ளோம்.

இத் திட்டங்களை மேம்படுத்துவற்கு பெற்றோர்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கிராம மட்ட அமைப்புக்களே மக்களை பலப்படுத்த வேண்டும்

## ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார்



(கிளிநொச்சி)

கிராம மட்ட அமைப்புக்கள் தமது கிராம அபிவிருத்தியில் காட்டும் ஆர்வமே உதவி வளங்குநர்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் என ஈபிடிபி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி-உதயநகர் கிழக்கு முன்பள்ளிக்கான புதிய கட்டடத் தொகுதியை நேற்றுமுன் தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கிராம மட்ட அமைப்புக்கள் தமது கிராம அபிவிருத்தியில் காட்டும் ஆர்வமே உதவி வளங்குநர்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும். அதன் மூலமே கிராமங்களின் அபிவிருத்திகள் மேலும் துரிதப்படும். எனவே மக்கள் தமது அமைப்புக்களை பலப்படுத்த வேண்டும். இதற்காக தூய்மையான செயற்திறன் கொண்டவர்களை அமைப்புக்களில் நியமிக்க வேண்டும். அந்தவகையில் உதயநகர் கிழக்கு கிராமத்தின் அமைப்புக்கள் சிறப்பான செயற்பாட்டைக் கொண்டுள்ளன. ஏனைய கிராம மட்ட அமைப்புக்களின் செயற்பாடுகளுக்கு இவ் அமைப்பு முன்மாதிரியாகத் திகழ்கின்றது. இந்நிலையை அவ் அமைப்பு தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

வேள்ட்விசன் நிறுவனத்தினரின் உதவியுடன் பதினான்கு இலட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட இக் கட்டடத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கரைச்சிப் பிரதேசசபையின் கௌரவ உறுப்பினர் கிருஸணசாமி, கரைச்சிப் பிரதேச செயலர் நாகேஸ்வரன், கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் முருகவேல், கிளிநொச்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் விந்தன், வேள்ட்விசன் நிறுவனத்தின் நிர்வாக அலுவலர் நிசாந்தன் ஆகியோரும் முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், முன்பள்ளி மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஒட்டுசுட்டான் பகுதியில் துரிதகதியில் வீதி அபிவிருத்தி

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பகுதியின் வீதிகள் துரித கதியில் சீர்திருத்தப்பட்டு வருகின்றன.

பல ஆண்டுகளாக திருத்தப்படாமல் குண்டும் குழியுமாக இருந்த கற்சிலைமடு சந்தியில் இருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்திற்கு புதுக்குடியிருப்பு வீதி கிரவல் மண் இடப்பட்டு தார் ஊற்றப்பட்டு தார் வீதியாக மாற்றப்பட்டுள்ளது.

அத்துடன் ஒட்டுசுட்டான் வித்தியாபுரத்தில் இருந்து புளியங்குளச் சந்தியைச் சென்றடையும் வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. இவ்வீதி சீரான முறையில் கருங்கற்கள் இடப்பட்டு செப்பனிடப்பட்டு தார் ஊற்றும் பணி இடம்பெற்று வருகின்றது.

மேலும் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோவிலுக்கு முன்புறம் அமைந்துள்ள வீதியினையும் புனரமைப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாக கற்கள் பறிக்கப்பட்டுள்ளமையினையும் அவதானிக்க முடிகிறது. (42)

# நீர்ப் பங்கு வழங்கலில் மோசடி; கிளிநொச்சி விவசாயிகள் விசனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் கிளிநொச்சி பொதுமக்களின் நெற்செய்கைக்கான பங்குவடிகால்களை இரத்துச் செய்யும் மோசடியில் ஈடுபடுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல கிராமங்களில் நெற்செய்கைக்கான நீர்ப்பங்கு வழங்கும் செயற்பாடுகள் கமக்காரர் அமைப்புக்களினூடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வமைப்புக்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்களே அங்கம் வகித்து வருகின்றனர்.

இவர்கள் தாம் அதிக நீர்ப் பங்குகளைப் பெற்றுவிட வேண்டும் என்பதற்காக பொது மக்களது நெற்செய்கைக்கான நீர்ப் பங்குகளை இரத்துச் செய்து தமது பெயருக்கு மாற்றம் செய்வதாகப் பொதுமக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

போரினால் அனைத்தையும் இழந்த அப்பாவி மக்களின் வயிற்றிலடிக்கும் செயற்பாடுகள் கிளிநொச்சியில் மனிதநேயமுள்ள அனைவரையும் கொதிப்படையச் செய்துள்ளது.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் சரியான வகையில் பகுப்பாய்வை மேற்கொண்டு அப்பாவி மக்களின் வாழ்விலும் வயிற்றிலடிக்கும் மனிதப் பண்பற்ற செயற்பாட்டை நீக்க முன்வரவேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (69)

# மோசமாகவுள்ள செங்குந்தா வீதி

(குருநகர்)

திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள செங்குந்தா வீதி போக்குவரவுக்குப் பயன்படுத்த முடியாத அளவுக்கு மிகவும் மோசமாகப் பழுதடைந்து போயுள்ளது. குறிப்பாக பூதராயர் கோவிலடிப் பகுதியின் வீதியும், மதகுப் பகுதியும் சேர்மதி இல்லாமல் பல வருடங்களாகக் கைவிடப்பட்டுள்ளது.

இதனால் மோசமான வீதியில் பயணித்து மதகு மேல் வாகனங்களை ஏற்றிப் பெரும் சிரமப்பட வேண்டி ஏற்படுகின்றது. பருத்தித்துறை வீதியில் தொடங்கி செங்குந்தா இந்துக் கல்லூரி ஊடாகக் கோவில் வீதியில் வந்தடையும் மேற்படி வீதி பல வருடங்களாக இரண்டாம் முறை தார் போடப்படாமல் பழுதடைந்து குண்டும் குழியுமாகக் காணப்படுவது சுட்டிக்காட்டத்தக்கது. (68)

# முரசின் இன்றைய பலன்

(07.04.2012 -சனிக்கிழமை)

கர வருஷம், பங்குனி மாதம் 25ஆம் திகதி, பிரதமை மு.இரவு 11.25 வரை.
நட்சத்திரம் சித்திரை, மரண யோகம் பி.இரவு 12.01 வரை.
இராகுகாலம் 9.07 -10.37 வரை, சுபநேரம் 3.07 - 4.37 வரை.
எமகண்டம் 1.37 - 3.07 வரை, குளிகை காலம் 6.07 - 7.37 வரை.

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | எதிலும் இலாபம், பொன் பொருள் சேரும், சகோதரர் ஒத்துழைப்பு, நிதானம் வேண்டும். |
| ரிஷபம் | பிரயாண நன்மை, திருமணம் கூடிவரும், சரளமான கொடுக்கல் வாங்கல், அனுசரித்துப் போதல் |
| மிதுனம் | திருப்திகரம், உறவினர் உறவு பலப்படும், அறப்பணிகளில் நாட்டம், எதிர்பாராத முன்னேற்றம் |
| கடகம் | நண்பர் உதவி, அனாவசியமான பயணங்கள், வாழ்க்கையில் போராட்டம், மனதில் குழப்பம். |
| சிம்மம் | அலைச்சல் மிகுதி, அவதூறுகள் தேடிவரும, கால்நடைகளால் நன்மை, பந்தயத்தில் வெற்றி. |
| கன்னி | மனக்கவலை, பணிகளில் மந்தநிலை, சுபகாரியம் தாமதம், மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு. |
| துலாம் | பணவரவுகள், மன உழைச்சல், உடல் ஆரோக்கியம் பாதிக்கும், உணவில் கட்டுப்பாடு. |
| விருச்சிகம் | நிதானம் நன்று, பணவரவுகளில் தடை, அனாவசிய பயண அலைச்சல், கல்வியில் மந்த நிலை. |
| தனுசு | அதிகாரிகள் உதவி, சமூகத்தில் நன் மதிப்பு, பண்டபரிமாற்றத்தில் கவனம், குடும்ப ஒற்றுமை. |
| மகரம் | காரியானுகூலம், வீண்பழிச் சொல் அகலும், இடமாற்றம் வரக்கூடும், வாக்குவாதம். |
| கும்பம் | தொட்டது துலங்கும், புது முயற்சிகளில் வெற்றி, வருவாயில் திருப்தி, பொன் பொருள் சேரும். |
| மீனம் | திடீர் இலாபம், இலட்சியம் நிறைவேறும், குடும்பத்தில் மகிழ்ச்சி பந்தயத்தில் வெற்றி. |

# ஒன்றுகூடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கிமாலயா கிரியேஷன் பிறைவட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் குறும்பட உருவாக்கத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலந்துகொளள விரும்பும் இத்துறையைச் சேர்ந்தவர்கள் 07050408566 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் வரவை உறுதிப்படுத்துமாறுஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.


# இயக்குநர் சபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் இயக்குநர் சபைக் கூட்டம் நாளைமறுதினம் பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் எஸ்.நவரட்ணம் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் தொடர்பான விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் அனைத்து இயக்குநர் சபை உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் அறிவித்துள்ளார். (எஸ்)

# பரமர் சங்கமம்



"தனிமையில் வாழ்ந்த வயோதிபப் பெண் கழுத்து நெரித்துக் கொலை! வீடுடைத்து நகைகள், பணம், கைத்தொலை பேசி கொள்ளை!"

"துர்நாற்றம்! பழுதடைந்த சடலம் பாழடைந்த வீட்டில் இருந்து மீட்பு"! "தனித்திருந்த வயோதிபர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை"!

"வீடொன்றில் நீண்ட காலமாகத் தனியே வாழ்ந்து வந்த முதியவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு"! நாளாந்தம் வெளிவருகின்ற பத்திரிகைகளில் வித்தியாசத் தலைப்புக்களில் செய்திகள் பிரசுரிக்கப் பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். மனிதர்கள் தனியாகத் தான் பிறக்கிறார்கள், இறக்கிறார்கள்.

இந்த உலகில் வாழ்கின்ற இடைப்பட்ட காலங்களில் புருசன், பெண்சாதி, பிள்ளைகள், மாமன், மாமி, மச்சான் என்னும் விதமாக உறவுகளோடு உற்றார், உறவினர், நண்பர்கள் என்ற பல்வேறு பரிவாரங்களோடும் உறவாடி வாழ்ந்து புகழ்க்கொடி கட்டித்தான் வாழ்கின்றார்கள்.

குடும்பத்தில் பிள்ளைகள் வளர்ந்து அவர்களும் தமக்குத் தமக்கெனக் குடும்பங்களை அமைத்துக் கொள்கின்ற வரையில்தான் தாய், தகப்பன், சகோதரம் என்ற கூட்டுக் குடும்ப வாழ்க்கை நீடிக்கிறது.

அதற்கும் பின்பாகக் கொஞ்சக் காலம் ஒரே வீட்டில் உறவு நீடித்தால் பேரன், பேத்தி மார்களுடன் கொஞ்சிக் குலாவி வாழக்குடுத்து வைத்தவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

அதற்குள்ளாக அப்பா, அம்மா கண்டிப்புக்களைக் கேட்டால் பாகப் பிரிவினையுடன் தனிக்குடித்தனம் அமைத்துக் கொண்டு தன்னுடைய பெண்சாதி, பிள்ளைகளெண்ட புதிய உலகம் பிறந்து விடுகிறது.

தற்காலங்களில் வெளிநாடுகளுக்குப்போய் அங்கேயே தத்தமது குடும்பங்களை அழைத்துக் கொண்டு வாழ்வதாலும், தொழில் வாய்ப்பு, உத்தியோகம் காரணங்களால் ஒரே நாட்டில் வெவ்வேறு பிரதேசங்களுக்குப் பெற்றோரை தனிக்க விட்டுப் பிள்ளைகள் செல்வதாலும், வயது முதிர்ந்த காலங்களில் தனிமரமாக முதியவர்கள் தகுந்த பராமரிப்பு எதுவுமில்லாமல் வாழ்கின்றதைப் பார்க்க காண முடிகிறது. இளமைக் காலங்களில் எல்லோரோடும் சேர்ந்து வாழ்ந்தவர்கள் முதுமைக் காலங்களில் தனிக்க விடுகையில் சகலத்தையும் இழந்து விட்டதான தாக்கத்தால் மனநோயாளிகளாகி வாழ்வதுதான் அமைந்துவிட்ட விதியாகியுள்ளது.

இவ்வாறில்லாமல் உள்ளூரில் வாழ்கின்ற போதும் பல்வேறு அற்ப சொற்ப காரணங்களுக்காகவும் பெற்றோரைத் தனிக்கவிட்டுப் போய்விடுகிற பிள்ளைகளையும் பெருவாரியாகக் காண்கிறோம்.

சிறுபிள்ளைகளில் மலசலம் எடுத்துப் பராமரித்த பெற்றோரை முதுமையில் வைத்துப் பராமரிக்கும் சிந்தனை இல்லாமல் நடந்து கொள்ளும் பிள்ளைகள் பின்னொரு காலம் தங்களுக்கும் அதுநேருமென ஏனோ எண்ணுவதில்லை? இத்தகைய நிலைமை நீடிக்கின்ற வரையில் பத்திரிகைகளில் மேற்படி விதமான செய்திகளைத்தான் பார்க்க முடியும். இல்லையோ பின்னப் பாருங்கோ...


எங்களுடன் இனிய புத்தாண்டைக்
கொண்டாடி மகிழுங்கள்
புதுவருட
வாழ்த்துக்கள்
6 COLOUR
Digital Printing
டிஜிற்றல்
பெயர்ப்பலகைகளுக்கு
50%
விலைக்கழிவு
ஏப்ரல் 30ஆம் திகதி வரை
உங்கள் பெயர்ப்பலகையை
இன்றே மாற்றுங்கள்
3
YEARS
WARRANTY
30%
விலைக்கழிவு
திருமண அழைப்பிதழ்களின்
சாம்ராட்சியம்
தேர்ந்தெடுக்கப்பட்ட டிசைனர்கள் மற்றும்
அதிநவீன ஓவியர்களால் மிகவும் துல்லியமாக
வடிவமைக்கப்பட்ட
ANDRA அழைப்பிதழ்கள்
உங்களை மட்டுமல்ல, அனைவரையும்
ஆச்சரியமடையச்செய்து உங்கள்
விழாக்கோலத்தை
மறக்கமுடியாதபடி மாற்றுகிறது.
எங்கள் வீட்டு
மகாராணிக்கு
தாய்வீட்டு சீதனம்
(C/1369)
ANDRA
DIGITAL IMAGE
379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.(உதயன் பணிமனைக்கு அருகாமையில்)
6D, உப்புமடம் சந்தி, K.K.S. வீதி, கோண்டாவில், யாழ்ப்பாணம்.
தொ.இல: 077 748 1696, 021 222 8929
யாழ்ப்பாணத்தின் ஒரே தெரிவு
மாற்றங்களில் மகிழுங்கள்

# வாகன இறக்குமதியாளர் சங்கம்; வரி அதிகரிப்பிற்கு விசனம்



## தொழிலை கைவிடவும் திட்டம்
## ஒரு மில்லியன் பேர் வேலையிழக்கும் அபாயம்

(கொழும்பு)

வாகனங்கள் மீதான அதிகரித்த இறக்குமதித் தீர்வை மற்றும் எந்த நிபந்தனைகள் தொடர்பான தீர்மானத்தை அரசாங்கம் மாற்றாவிடின் தமக்கு இந்த வியாபாரத்தை கைவிடுவது தவிர வேறு வழியில்லை என வாகன இறக்குமதியாளர்கள சங்கத்தின் தலைவர் யோகா பெரேரா தெரிவித்தார்.

வாகனங்கள் மீதான வரியை அதிகரித்தமையை விட அவற்றின் பாவனைக்காலம் குறைக்கப்பட்டமையே பெரிய பிரச்சினையாக உள்ளது. முன்னர் இரண்டு வருடங்கள் வரை பயன்படுத்தப்பட்ட கார்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது.

இப்போது ஒரு வருடம் அல்லது அதிலும் குறைந்த காலம் பயன்படுத்தப்பட்ட கார்களையே இறக்குமதி செய்ய முடியும். வான்களுக்கான அல்லது அதிலும் பெரிய வாகனங்களுக்கான பாவனைக்காலம் ஐந்து வருடங்களிலிருந்து மூன்றரை வருடங்களாக குறைக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக 120 சதவீத தீர்வை செலுத்திய கார்களுக்கு 200 சதவீத தீர்வையும் 51 சதவீத தீர்வையுடன் இறக்குமதியான முச்சக்கரவண்டிகளுக்கு 100 சதவீத தீர்வையும் செலுத்தவேண்டியுள்ளது.

2009 இல் 3421 வாகனங்களும் 2010 இல் 37134 வாகனங்களும் 2011 இல் 54285 வாகனங்களும் இறக்குமதி செய்யப்பட்டதாக திறைசேரி அறிவித்துள்ளது. முன்பு ஒரு குடும்பத்துக்கான காரின் விலை 1.2 மில்லியன் ரூபாவாக இருந்தது. இனிவரும் காலங்களில் அதுபோன்றதொரு கார் வாங்குவதற்கு 5 மில்லியன் ரூபா தேவைப்படும்.

இந்த நிலைமையில், எம்மால் தொழில் செய்ய முடியாது. எனவே இந்தத் துறையில் வேலை செய்யும் ஒரு மில்லியன் பேர் தமது தொழிலை இழக்கும் ஆபத்தில் உள்ளனர் என்று அவர் மேலும் கூறினார்.

# இறக்குமதியை கட்டுப்படுத்தவே வாகன வரி உயர்த்தப்பட்டது



(கொழும்பு)

போக்குவரத்து நெரிசலை குறைத்தல், எரிபொருள் இறக்குமதிக்கான செலவை குறைத்தல் மற்றும் வாகன இறக்குமதியை கட்டுப்படுத்தும் நோக்குடனேயே அரசாங்கம் வாகனங்களுக்கான வரியை உயர்த்தியுள்ளதாக பதில் ஊடகததுறை பேச்சாளர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதன்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கும் அவர் பதிலளித்தார்.

வாகன ஆசனப்பட்டி போக்குவரத்து விதிமுறையில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன்படி வாகன ஆசனப்பட்டி அணியாத சாரதிகளுக்கு 1000 ரூபாவும் முன் ஆசனத்தில் அமர்ந்து ஆசனப்பட்டி அணியாதவர்களுக்கு 100 ரூபாவும் தண்டப்பணம் உடனடியாக அறவிடப்படும் என புதிய விதிமுறை கொண்டுவரப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன திருத்தச் சட்டத்தின் 157 A( 4) பகுதியை திருத்தியமைக்க போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம அமைச்சரவை பத்திரத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது என்றார்.

# துமிந்த சில்வாவின் மூளையில் சத்திரசிகிச்சை

(கொழும்பு)

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து வெளிநாடொன்றில் சிகிச்சை பெற்று வரும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு அடுத்த வாரம் சத்திர சிகிச்சையொன்று மேற்கொள்ளப் படவுள்ளது. சிங்கப்பூரில் உள்ள எலிசபெத் வைத்தியசாலையில் இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.



# உருவச் சிலைகள் மீது மட்டக்களப்பில் தாக்குதல்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரிலுள்ள மகாத்மாகாந்தி மற்றும் சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் பேர்டன் பவல் ஆகியோரின் உருவச் சிலைகள் நேற்று அதிகாலை இனந் தெரியாதோரினால் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு நகரில் மிக நீண்டகாலமாக இருந்த மேற்படி சிலைகள் ஒவ்வொன்றும் 20 மீற்றருக்குட்பட்டு அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மட்டக்களப்பு - ஆனைப்பந்தி வித்தியாலயத்திலுள்ள சுவாமி விபுலானந்தர் மற்றும் மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோரின் உருவச்சிலைகளும் இனந்தெரியாதோரினால் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மட்டக்களப்பு - ஆரையம்பதி பிரதேசத்தின் பிரதான வீதியில் காணப்பட்ட சுவாமி விவேகானந்தரின் உருவச்சிலை கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் சேதப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தமிழருக்கு எதிராகப் பேச ஜெனிவாவிற்கு செல்லவில்லை

## அமைச்சர் ரவூப் ஹக்கீம்



(கொழும்பு)

தமிழர்களுக்கு எதிராக பேசுவதற்காக நான் ஜெனிவா போகவில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இந்த நாட்டின் நீதி அமைச்சர் என்ற அந்தஸ்தில் இருந்து கொண்டு எங்களுடைய அமைச்சு பொறுப்புக்கூற வேண்டிய பல விடயங்கள் உள்ளமையால் இந்தத் தூதுக்குழுவில் அங்கு போய் பல விடயங்களை கதைக்க நேரிட்டது என அவர் குறிப்பிட்டார்.

ஜெனிவா தீர்மானம் தொடர்பாக சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் இரண்டாவது நாளாகவும் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

நாட்டிலே சமாதானம் ஏற்பட, நல்லிணக்கம் ஏற்பட மற்றும் நிலையான தீர்வு ஆகியன கிடைக்க வேண்டுமாக இருந்தால் அது உள்நாட்டிலே தான் தோற்றமெடுக்க முடியும். தவிர வெளிநாட்டு தலையீடுகளினால் ஒருபோதுமே சாத்தியமாகப் போவதில்லை.

இந்த நாட்டில் அரசாங்கமும், அரசாங்கத்தைச் சார்ந்திருக்கின்ற ஏனைய சக்திகளும் ஒரு தேசிய இணக்கப்பாட்டை கொண்டுவருவதற்கு மேற்கொள்ளும் யதார்த்தமான முயற்சிகளை எப்படியாவது முறியடித்து, மீண்டும் கனவுலகிலே சஞ்சரித்துக்கொண்டு இந்நாட்டில் ஒரு தனி நாட்டை உருவாக்கலாம் என்ற நம்பிக்கையை மக்கள் மத்தியில் வளர்க்கக் கூடிய தீவிரவாத போக்கு மேலோங்குமாக இருந்தால் இந்நாட்டில் நிரந்தரமான சமாதானத்தை எட்ட முடியாது போகலாம்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முக்கியமான விதந்துரைகளை நடைமுறைப் படுத்துவதோடு நெருங்கிய தொடர்புடைய, பொறுப்புக்கூற வேண்டிய இந்நாட்டின் நீதி அமைச்சர் என்ற முறையிலும், நாட்டில் இனங்களுக்கிடை யில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை காண்பதற்கு பங்களிப்பு செய்யக்கூடிய ஒரு சமூகத்தின் உணர்வலைகளைப் பிரதிபலிக்கும் பிரதான அரசியல் கட்சியொன்றின் தலைவர் என்ற முறையிலும் இந்த விவாதத்தில் நான் பங்குபற்றியது மிகவும் பொருத்தமானது எனக் கருதுகின்றேன் எனத் தெரிவித்தார்.

# ஐ.தே.க ஆதரவாளர்கள் சஜித்துடன் இணைய வேண்டும்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சகல ஆதரவாளர்களும் அக்கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் இணைய வேண்டும் என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் வாக்காளர்களையும் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதற்கு சஜித் பிரேமதாசவுடன் இணைந்து கொள்ள வேண்டும். இல்லாவிடில் அக்கட்சி கடும் பிரச்சினைகளை எதிர்நோக்குவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

யுத்தம் நடைபெற்ற காலத்தில் அதனைக் கேலி செய்யவும், யுத்தத்தை நிறுத்துவதற்காக போராட்டத்தையுமே ஐ.தே.க. மேற்கொண்டது.

எமது நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை மேலும் தூண்டிவிடும் சூழ்ச்சிகளையே ஐ.தே.க. தற்போது மேற்கொண்டு வருகிறது.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# வகுப்புவாத சிந்தனை

(கொழும்பு)

அரசாங்கம் வகுப்பு வாதத்துடன் செயற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.


கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீம் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

பெரும்பாலானவர்களை கவனத்தில் கொள்ளாது, குறிப்பிட்ட ஒரு சிலரை மாத்திரம் கருத்தில் கொண்டு அரசாங்கம் செயற்படுகிறது.

அரசாங்கம் செயற்படுத்தியுள்ள கொள்கைகளின் அடிப்படையில் இந்த விடயம் புலப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# புத்தாண்டில் பிரதான நகரங்களில் விசம வேலைகளில் ஈடுபடவேண்டாம்

## பொலிஸார் மக்களிடம் வேண்டுகோள்



(கொழும்பு)

புத்தாண்டு சமயத்தில் கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களில் குற்றவாளிகளின் விசம நடவடிக்கைகளுக்கு ஆளாக வேண்டாமென பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் இந்தத் தினங்களில் நகரங்களில் பரவலாக நடமாடுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன குறிப்பிட்டார்.

ஏதேனும் குற்றச்செயல்கள் இடம்பெறுகின்ற பட்சத்தில் உடனடியாக அருகிலிருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கோ அல்லது 119 என்ற பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவு இலக்கத்திற்கோ அறிவிக்குமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ளதால் கொழும்பிலுள்ள பிரதான நகரங்களில் முடிச்சு மாறிகளிடமிருந்து தங்களின் பணப்பைகளையும் பொருட்களையும் பாதுகாத்துக்கொள்ளுமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வானவில் மார்ச் 15 இதழிலிருந்து

## வட மாகாணசபைத் தேர்தலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும்

“இப்பொழுது மாகாணங்கள் இரண்டும் பிரிக்கப்பட்ட, பெரியளவில் அதிகாரங்கள் எதுவுமற்ற மாகாணசபைத்தேர்தலில் போட்டியிடுவதற்கு வரிந்து கட்டிக்கொண்டிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னோடிக் கட்சியான அன்றைய தமிழர் விடுதலைக்கூட்டணி, புலிகள் பிரேமதாசவுடன் சேர்ந்து வடக்கு-கிழக்கு மாகாணசபையைக் கலைத்த போது ஒரு கண்டன வார்த்தை கூடச் சொல்லவில்லை. அது மட்டுமல்ல, மாகாண சபை முறைமை பிரயோசனமற்றது என்றே இந்தத் தமிழ் தலைமைகள் எல்லாம் பிரசாரம் செய்தும் வந்தன.”



**வட பகுதியில்** செயற்படும் பெரிய கட்சிகளில் இருந்து சிறிய கட்சிகள் வரை, விரைவில் நடைபெறப் போகும் வட மாகாணசபைத் தேர்தலை மனதில் கொண்டு தீவிர செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன. வட மாகாண சபைக்கு தேர்தல் நடந்து, அங்கும் ஒரு மாகாணசபை இயங்குமாக இருந்தால், அந்த மாகாண மக்களுக்கு பல நன்மைகள் ஏற்பட வாய்ப்புண்டு. மாகாண சபைகள் மூலம் சாதாரண மக்களின் ஏராளமான பிரச்சினைகளைத் தீர்ப்பதுடன், அபிவிருத்தி நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியும் என்பதற்கு, அரசாங்க ஆதரவுடன் இயங்கும் கிழக்கு மாகாணசபை ஒரு உதாரணமாகத் திகழ்கின்றது.

1987இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையின் கீழான இந்த மாகாணசபைகள் (குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகாணசபை) அவைஅமைக்கப்பட்ட காலத்திலிருந்து தொடர்ச்சியாகச் செயற்பட்டிருந்திருக்கு மேயானால், அதன் பின்னர் இருபது வருடங்களாக நடந்த போரினால் ஏற்பட்ட பாரிய அழிவுகளைத் தடுத்திருக்க முடிந்திருக்கும். ஆனால் பேரின வெறி கொண்ட அன்றைய ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவுடன் சேர்ந்த புலிகள், வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணசபையைக் கலைத்து செயற்பட முடியாமல் செய்ததால், தமிழ் மக்கள் எதையுமே அடைய முடியாமல் போய்விட்டதுடன், இருந்ததையும் இழந்து இன்று அனாதைகளாக நிற்கின்றனர்.

“தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனப் பிழையாக வர வேண்டும்” என்ற கோதாவில், புலிகள் அன்று பிரேமதாசவுடன் சேர்ந்து ஈடுபட்டதற்கு ஒரேயொரு காரணம், தமக்கு அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் எதிராகவிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தின் கைகளில் வடக்கு கிழக்கு மாகாணசபையின் நிர்வாகம் இருந்ததுதான்.

இப்பொழுது மாகாணங்கள் இரண்டும் பிரிக்கப்பட்ட, பெரியளவில் அதிகாரங்கள் எதுவுமற்ற மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வரிந்து கட்டிக்கொண்டிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னோடிக் கட்சியான அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணி, புலிகள் பிரேமதாசவுடன் சேர்ந்து வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைத்த போது ஒரு கண்டன வார்த்தை கூட சொல்லவில்லை. அது மட்டுமல்ல, மாகாணசபை முறைமை பிரயோசனமற்றது என்றே இந்தத் தமிழ் தலைமைகள் எல்லாம் பிரசாரம் செய்தும் வந்தன.

அதன் பின்னர் புலிகளால் தமது பினாமி அமைப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு, புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என கூட்டமைப்பு பகிரங்கமாக அறிவித்த பின்னரும், தமிழ் பகுதிகளில் மாகாண சபைகளுக்கோ உள்ளூராட்சி அமைப்புகளுக்கோ தேர்தல்கள் நடாத்த புலிகள் அனுமதிக்கவில்லை. அதுமட்டுமல்ல தமிழ் கூட்டமைப்பினர் சுதந்திரமாக தமிழ் பகுதிகளில் நடமாடவே புலிகள் அனுமதிக்கவில்லை.

எந்தவிதமான ஜனநாயக நெறிமுறைகளும் இன்றி, தனிநபர் சர்வாதிகார முறையில் புலிகள் வடக்கு கிழக்கில் நடத்திய ஆட்சியை இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்க்காதது மட்டுமின்றி, பகிரங்கமாக ஆதரித்தும் வந்தனர். அப்படியானவர்கள் “ஒன்றுமில்லாத” மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட இப்பொழுது கச்சை கட்டுவது எதற்காக என்ற கேள்வி எழுகின்றது.

1947 முதல் இந்த தமிழ் தலைமைகள் தமிழ் காங்கிரசாகவும், தமிழரசுக் கட்சியாகவும் ஏட்டிக்குப் போட்டியாக நாடாளுமன்றம் சென்றபோதும் சரி, பின்னர் இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற போர்வையில் நாடாளுமன்றம் சென்ற போதும் சரி, அதன் பின்னர் புலிகளின் காலத்திலும் அவர்கள் அழிந்த பின்னரும் தமிழ் தேசியக் கூட் டமைப்பு என்ற பெயரில் நாடாளுமன்றம் சென்ற போதும் சரி, தமிழ் மக்களுக்காக ஏதாவது ஒரு சிறு துரும்பைத் தன்னும் தூக்கிப் போட்டார்களா என்றால், ‘இல்லை’ என்ற பதி லைத் தவிர நீங்கள் வேறு எதனையும் பெற முடியாது.

ஆனால் அதே வேளையில், போர் நடைபெற்ற காலத்திலும், அதன் பின்னரும் அல்லலுற்ற மக்களுக்கு ஏதாவது உதவிகளை அரசின் மூலம் பெற்றுக் கொடுக்க முனை வோரை, ‘துரோகிகள்’ என்று முத்திரை குத்தி, புழுதி வாரித் தூற்றுவதற்கு மட்டும் இந்தத் தமிழ் தலைமைகள் என்றுமே பின் நின்றதில்லை.

அப்படியானவர்கள் இப்பொழுது மாகாணசபையைக் கைப்பற்றி என்னத்தைக் கிழிக்கப் போகிறார்கள்? எப்படிப் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் தமது சொந்தச் சுகபோக வாழ்க்கைக்குப் பயன்படுத்தி வருகிறார்களோ, அதேபோல மாகாணசபையைக் கைப்பற்றினாலும் தமது சுயலாபத்துக்கே அதைப் பயன்படுத்துவார்கள் என்பது நிச்சயம்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவிதான் மத்திய அரசு சம்பந்தமானது என ஒருபக்கம் ஒதுக்கி வைத்தாலும், மாகாண சபை அம்மாதிரியான ஒன்றல்ல. அது அந்தந்த மாகாணத்தின் நிர்வாகம், அபிவிருத்தி சம்பந்தமான ஒரு முக்கியமான அமைப்பு. அவ்வகையான அமைப்பு இரண்டு அடிப்படை விடயங்களைக் கொண்டிருக்க வேண்டும். முதலாவது, அது தனது மக்களின் நலன்களை முதன்மைப் படுத்தி மாகாண நிர்வாகத்தை நடாத்த வேண்டும். இரண்டாவது, மாகாணசபை என்பது இலங்கையில் பெரிதும் மத்திய அரசிலேயே தங்கியிருப்பதால், அதன் அதிகாரத்தை வைத்திருப்பவர்கள் பதவியில் இருக்கும் அரசாங்கத்துடன் இணக்கமான போக்கைக் கடைப்பிடிப்பவர்களாகஇருக்க வேண்டும். இது இரண்டுமே தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் அறவே கிடையாது.

30 வருட யுத்தம் முடிவடைந்த சூழலில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களை மீளக்குடியமர்த்துவதிலும், புனர்நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதிலும், முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதிலும் அரசாங்கம் பாரிய சவால்களை எதிர் நோக்கியது. புலிகளின் யுத்த முயற்சிகளுக்கு ஆதரவு அளித்து வந்த தமிழ் கூட்டமைப்பு, இந்த விடயத்தில் அரசாங்கத்துக்கு எந்தவிதமான ஒத்துழைப்பும் வழங்கவில்லை. மாறாக அரசாங்கம் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களை கொன்று குவித்து விட்டது என்றும், 3 இலட்சம் பேரை முள்கம்பி வேலிகளுக்குள் அடைத்து வைத்திருக்கின்றது என்றும் எதிர்ப்பிரசாரங்களையே செய்தது.

இப்பொழுது கூட இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பு வழங்குவதைவிடுத்து, ஜெனிவா மனித உரிமைக் கவுன்சில் கூட்டத்தில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக முன்வைத்துள்ள தீர்மானத்துக்கு வக்காலத்து வாங்குவதிலேயே காலத்தைக் கடத்துகிறது. இப்படியான ஒரு சூழலில் வட மாகாணசபைத் தேர்தலில் மக்கள் தமிழ் கூட்டமைப்பிடம் ஆட்சிஅதிகாரத்தை வழங்குவார்களானால், அது தங்கள் தலையில் தாங்களாகவே மண் அள்ளிப்போட்ட கதையாகவே முடியும்.

ஏனெனில் கூட்டமைப்பினர் மாகாணசபையைப் பயன்படுத்தி வடக்கு மக்களின் வளர்ச்சிக்கு உதவுவதைவிட, அதைப் பாவித்து அரசாங்கத்துடன் “போர்”புரிவதிலேயே காலத்தைக் கழிப்பர். அதன் மூலம் மாகாண சபையை செயலற்ற ஒரு நிலைக்குத் தள்ளி மக்களுக்கு எதுவும் கிடைக்காத படி பார்த்துக் கொள்வர்.

தமிழ் தலைமைகளின் (புலிகள் உட்பட) கடந்தகால சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால், அவர்கள் மக்களுடைய ஒரு சிறு தேவையைக்கூட (குறைந்த பட்சம் ஒரு உப தபால் கந்தோர் நிறுவுவதைக் கூட) அரசாங்கத்திடம் எடுத்துரைத்து பெற்றுக் கொடுத்தது கிடையாது. “எமக்கு சோறுஅல்ல, சுதந்திரமே முக்கியம்” எனச் சொல்லி சொல்லித் தமிழ் மக்களின் வாழ்வை குட்டிச் சுவராக்கியதுதான் அவர்கள் செய்த வேலை.

எனவே வரப்போகும் வட மாகாணசபைத் தேர்தலில் என்ன பிரயத்தனப்பட்டாவது தமிழ் தேசியக் கூட்டமைப்பு அதன் நிர்வாகத்தைக் கைப், பற்றாமல் பார்த்துக் கொள்வது, அனைத்து முற்போக்கு - ஜனநாயக சக்திகளினதும் தலையாய பணியாகும்.

அதைச் சாத்தியமாக்குவதானால் தமிழ் மக்கள் மத்தியிலுள்ள ஜனநாயக தமிழ் கட்சிகளும் இடதுசாரி சக்திகளும் இப்பொழுதிலிருந்தே அதற்கான முன்னேற்பாடுகளில் இறங்க வேண்டும். “தமிழ் கட்சிகளின் அரங்கம்” உயிர் வாழ்ந்திருக்குமாக இருந்தால், பிற்போக்கு இனவாத தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக ஒரு பலம்வாய்ந்த அணியை உருவாக்கி இருக்க முடியும். அதை உணர்ந்துதான் அதை முளையிலேயே கருகச் செய்யும் சதி நடவடிக்கையை தமிழ் கூட்டமைப்பு மேற்கொண்டது. அரங்கத்தை உடைத்துவிட்டு அதில் அங்கம் வகித்த சில கட்சிகளை செல்லாக்காசாக தன்னுடன் இப்பொழுது இணைத்து வைத்திருக்கின்றது.

தமிழ் கட்சிகளின் அரங்கத்தில் சரியான தலைமைத்துவம் இல்லாமல் இருந்தமையே இதற்குக் காரணம். அதில் அங்கம் வகித்த சிலர் கூட்டமைப்புடன் சேர்ந்தால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெறலாம் என்ற நப்பாசையில் வழி தவறிச் சென்றுள்ளனர். ஆனால் அதை நேரடியாகச் சொல்ல முடியாதபடியால், “தமிழ் மக்கள் ஓரணியில் ஒற்றுமையாக இருந்தால்தான் உரிமைகளைப் பெற முடியும்” என்ற புளித்துப்போன காரணங்களைக் கூறுகின்றனர்.

இன்னும் சிலர் தமிழ்தேசியவாத வெறியில் ஊறிய பழக்க தோசத்தில் தமது தாய்வீடான கூட்டமைப்பிடம் சரணாகதி அடைந்துள்ளனர். அந்த அரங்கத்தைக் காப்பாற்றுவதின் அவசியத்தை உணர்ந்து முன்கையெடுத்துச் செயற்பட்டிருக்க வேண்டியவர்கள், தம்மைப்பற்றிய அதீத தன்னம்பிக்கையாலும் அலட்சியத்தாலும் ஏனோ தானோ என்று இருந்து விட்டனர்.

தமிழ் கட்சிகளின் அரங்கத்தைவிட்டு வெளியேறி தமிழ் கூட்டமைப்புடன் வேண்டாப் பெண்டாட்டியாக குடித்தனம் நடத்துபவர்கள் கூட்டமைப்பு ஒருபோதும் தமிழ்மக்களின் பிரச்சினைத்தீர்வுக்காக உழைக்கப் போவதில்லை என்ற உண்மையைபட்டறிவின் மூலம் புரிந்துகொள்ள வேண்டும்.

(18ஆம் பக்கம் பார்க்க)

**கூட்டமைப்பினர் எப்படி நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் தமது சொந்த சுகபோக வாழ்க்கைக்குப் பயன்படுத்தி வருகிறார்களோ, அதேபோல மாகாண சபையைக் கைப்பற்றினாலும் தமது சுயலாபத்துக்கே அதைப் பயன்படுத்துவார்கள் என்பது நிச்சயம். மாகாணசபையைப் பயன்படுத்தி வடக்கு மக்களின் வளர்ச்சிக்கு உதவுவதைவிட, அதைப் பாவித்து அரசாங்கத்துடன் ‘போர்’ புரிவதிலேயே காலத்தைக் கழிப்பர். அதன்மூலம் மாகாண சபையை செயலற்ற ஒரு நிலைக்குத் தள்ளி மக்களுக்கு எதுவும் கிடைக்காதபடி பார்த்துக் கொள்வர்.**



நேற்று ஆரம்பமான வீரர்களின் போரின் ஆரம்ப நிகழ்வின் சில பதிவுகள்...(படம் : 44)

## 12ஆவது வீரர்களின் போர்


# ஸ்கந்தா முன்னிலை

(யாழ்ப்பாணம்)

வீரர்களின் போர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி முன்னிலை வகிக்கின்றது.

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெற்று வரும் 12ஆவது வீரர்களின் போர் நேற்று மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மகாஜனாக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக மகாஜனாக் கல்லூரி அணி ஆரம்பத்தில் சிறப்பான அடித்தளத்தையிட்டது. ஒரு கட்டத்தில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையை அடைந்திருந்தது. இருப்பினும் சிந்துஜனின் பந்து வீச்சை எதிர்கொள்ளத் திணறிய மகாஜனாக் கல்லூரி அணி, மத்திய மற்றும் பின்வரிசை வீரர்களை விரைவாக இழந்தது. இறுதியில் மகாஜனாக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அணித் தலைவர் அஜித் நான்கு பவுண்டரிகளுடன் 24, ஏ. பிரசாந் மூன்று பவுண்டரிகளுடன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஒன்பது ஓவர்கள் பந்து



வீசிய சிந்துஜன் ஆறு ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக 15 ஓட்டங்களைக் கொடுத்து ஹட்ரிக் உட்பட ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் ஜெ. ஜனக்ஷன் மூன்று, அணித் தலைவர் எஸ். சஞ்சயன் இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றிருந்தது. ஒரு கட்டத்தில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதனைத் தொடர்ந்து அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. இருப்பினும் ஒன்பதாவது விக்கெட்டுக்காக இணைந்த செந்தூரன் மற்றும் கோபிகாந் ஆகியோர் சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கி அணியை முன்னிலைப்படுத்த துணைபுரிந்தனர். ஒன்பதாவது விக்கெட்டுக்காக இவர்கள் இரு வரும் 39 ஓட்டங்களைப் பெற்றனர். இறுதியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி அதன் முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கோபிகாந் மூன்று பவுண்டரிகளுடன் 22, கே. துபீஷன் 19, செந்தூரன் ஆட்டமிழக்காது 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அணித் தலைவர் அஜித் 21 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், ஜெ. ஜனந்தன் 28 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

28 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் மகாஜனாக் கல்லூரி அணி நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டவேளை விக்கெட் இழப்பின்றி இரண்டு ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

இதேவேளை, இப்போட்டியின் ஆரம்ப நிகழ்வின பிரதம விருந்தினராக மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கனடாக் கிளைத் தலைவர் நாகமுத்து சாந்திநாதன், சிறப்பு விருந்தினராக ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் பழைய மாணவர் சுவிற்லாந்தைச் சேர்ந்த எம். குமாரறூபன், கௌரவ விருந்தினராக வலிகாமம் வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் எம். நடராஜா மற்றும் இரு கல்லூரி அதிபர்கள் ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (44, 93)

## வெற்றிபெறும் வாய்ப்பு அதிகம்



(யாழ்ப்பாணம்)

முதல் இனிங்ஸில் முன்னிலை பெற்றிருப்பதால் இப்போட்டியை வெற்றிபெறுவதற்கான அதிக வாய்ப்பு இருப்பதாக ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியின் தலைவர் எஸ். சஞ்சயன் தெரிவித்தார்.

வீரர்களின் போர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் போட்டியின் முதல் நாள் ஆட்டம் குறித்து எமது செய்தியாளர் மகாலிங்க சிவத்திடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், எமது பந்து வீச்சாளர்கள் மிகத் திறமையாகப் பந்து வீசி, மகாஜனா அணியை 104 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியது சிறப்பானதே. அதேபோன்று துடுப்பாட்டத்தில் அதிகமான ஓட்டங்களைப் பெறவேண்டும் என்று திட்டமிட்டிருந்தோம். ஆரம்பத்தில் அதிரடியாக ஆட முயன்றதே விக்கெட்டுக்கள் விரைவாகச் சரியக் காரணமாயிற்று. இருப்பினும் பின்வரிசை வீரர்கள் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி எமக்கு ஓரளவு வலுவான நிலையை ஏற்படுத்தினர். அதிலும் குறிப்பாக இறுதி விக்கெட்டுக்காக செந்தூரனும், கோபிநாத்தும் இணைந்து 39 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றமையே நாம் முதல் இனிங்ஸில் முன்னிலை பெறக் காரணம்.

முதல் இனிங்ஸில் முன்னிலை பெற்றிருப்பதால் எதிரணிக்கு அதிக அழுத்தம் ஏற்பட்டிருக்கும் அதேவேளை, எமக்கும் போட்டியில் வெற்றிபெற சாதகம் அதிகமாக இருப்பதாகவே உணர்கின்றோம்.

இந்த வகையில், இரண்டாவது இனிங்ஸிலும் மகாஜனாக் கல்லூரி அணியை குறைந்த ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தி இப்போட்டியில் வெற்றிபெறப் போராடுவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(44, 93)

## ஸ்கந்தா வீரர் முதல் ஹட்ரிக்



(யாழ்ப்பாணம்)

வீரர்களின் போரின் 12 ஆண்டு கால வரலாற்றில் முதல் ஹட்ரிக் விக்கெட் பெற்ற வீரர் என்ற சாதனையை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியின் உப தலைவர் சிந்துஜன் பெற்றுக் கொண்டார். நேற்று ஆரம்பமான வீரர்களின் போர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட போட்டியின் முதல் நாள் ஆட்டத்திலேயே அவர் இச் சாதனையைப் புரிந்தார். போட்டியின் 29ஆவது ஓவரின் இரண்டாவது பந்து வீச்சில் ரி. டிலோசன், றொபேட் றிஷானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து மூன்றாவது பந்தில் ஜே. ஜனந்தன் துவாரகனிடம் பிடிகொத்து ஆட்டமிழந்தார். இந்த நிலையில் அடுத்த பந்தில் விக்கெட்டை வீழ்த்தி ஹட்ரிக் சாதனை புரியவேண்டும் என்பதில் அணித் தலைவர் உள்ளிட்ட அனைத்து வீரர்களும் முனைப்புடன் செயற்பட்டனர். அடுத்த பந்தை எதிர்கொண்ட ஆர். மதுசன் விக்கெட் காப்பாளர் ரி. நிரோஜனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்ததன் மூலம் சிந்துஜன் ஹட்ரிக் சாதனையைப் புரிந்தார். இரு பாடசாலை அணிகளுக்குமிடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க இப்போட்டித் தொடரின் முதல் ஹட்ரிக் சாதனை புரிந்த வீரர் என்ற சிறப்பை சிந்துஜன் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (44)

## ஆட்டத்தை சாதகமாக்குவோம்

(யாழ்ப்பாணம்)



மத்திய மற்றும் பின்வரிசை வீரர்கள் சிறப்பாக ஆடத் தவறியமையே முதல் இனிங்ஸில் நாம் குறைந்த ஓட்டங்களை எடுக்கக் காரணமானது. இருப்பினும் இரண்டாவது இனிங்ஸில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொள்வோம் என மகாஜனாக் கல்லூரி அணியின் தலைவர் எஸ். அஜித் தெரிவித்தார்.

வீரர்களின் போர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் போட்டியின் முதல் நாள் ஆட்டம் குறித்து எமது செய்தியாளர் மகாலிங்கசிவத்திடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் முதல் இனிங்ஸில் 200 ஓட்டங்களுக்குள் மேல் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டிருந்தோம். அதுபோலவே எமது ஆரம்பமும் அமைந்திருந்தது. மூன்று விக்கெட்டுக்களை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்று வலுவான அடித்தளத்தை முன்னிலை வீரர்கள் பெற்றுக் கொடுத்தனர். இருப்பினும் மத்திய மற்றும் பின்வரிசை வீரர்களின் விரைவான ஆட்டமிழப்பே எமது இலக்கை அடைய முடியாமற்போனதற்குக் காரணம்.

இதனை நாம் பின்னடைவாக கருதவில்லை. அணியில் சிறந்த அனுபவம் வாய்ந்த பந்துவீச்சாளர்கள் இருக்கின்றார்கள். களத்தடுப்பிலும் சிறப்பாகச் செயற்படக்கூடிய வீரர்கள் பலர் உள்ளனர்.

எனவே, இரண்டாவது இனிங்ஸில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்று எதிரணிக்கு கடும் நெருக்கடியைக் கொடுத்து ஆட்டத்தை எமக்குச் சாதகமாக்கிக் கொள்வோம் எனத் தெரிவித்தார். (44, 93)




## புனே 29 ஓட்டங்களால் வெற்றி

ஐந்தாவது ஐ.பி.எல். ருவென்ரி - 20 போட்டித் தொடரின் மூன்றாவது போட்டியில் புனே வாரியர்ஸ் அணி 29 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

மும்பை இன்டியன்ஸ் அணிக்கும் புனே வாரியர்ஸ் அணிக்குமிடையிலான ஆட்டம் நேற்று மும்பையில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இன்டியன்ஸ் அணி முதலில் களத் தடுப் பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய புனே வாரியர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது. இதில் உத்தப்பா 36, ஸ்டிவன் ஸ்மித் 39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மலிங்க, முனாப் பட்டேல் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 130 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மும்பை இன்டியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் டினேஸ் கார்த்திக், பிராங்ளின் தலா 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அசோக் டின்டா நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் ஆட்டநாயகான் ஸ்மித் தெரிவானார்.

# பந்துவீச்சை கைவிடப்போவதில்லை

(கொழும்பு)

ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் மற்றும் ருவென்ரி போட்டிகளில் பந்து வீசுவதை ஒருபோதும்கைவிடப்போவதில்லை என அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளைப் பொறுத்தவரையில் தனது பந்து வீச்சுத் தொடர்பாக திரும்பச் சிந்திக்க வேண்டியிருப்பதை ஏற்றுக் கொண்ட மத்தியூஸ், தனது காலில் தொடர்ந்து வரும் உபாதைகள் காரணமாக இதைச் செய்ய வேண்டியிருப்பதாகத் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக தனது காலை அண்டி உபாதைகளைச் சந்தித்து வருவதற்குரிய காரணங்களைகண்டறிய முடியவில்லை. இவ்வுபாதைகளை இல்லாமற் செய்ய தன்னால் முடிந்தளவு முயற்சிப்பேன்.

மூன்று வகையான போட்டிகளிலும் விளையாடுவது, அதுவும் சகலதுறை வீரராக பங்கேற்பது உடலுக்கு மிகவும் கடினமானது.

இருப்பினும் இந்த சவால்களை வெற்றிகரமாக கையாண்டு அணிக்கு என்னாலான முழு ஒத்துழைப்பையும் வழங்குவேன். அதற்கான பயிற்சிகள் அதிகளவில் மேற்கொள்ளவேண்டும். அதனைப் படிப்படியாக செய்து வருகின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஊழல் மோசடி வீடியோவில்

(டுபாய்)

ஸ்பொட் ஸ்பிக்சிங்கில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்காக 5 வருடகாலப் போட்டித்தடையை அனுபவித்துவரும் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் ஆமிர், சர்வதேசக் கிரிக்கெட் சபையின் ஊழல் மற்றும் மோசடிகளுக்கெதிரான அறிவுறுத்தல் வீடியோவில் தோன்றியுள்ளார். ஆமிருக்கு எதிரான குற்றவியல் குற்றச்சாட்டுகளை அடுத்து சிறுவர் குற்றவாளிகளுக்கான பள்ளியில் 3 மாதகாலம் தனது தண்டனைக் காலத்தை அனுபவித்து வெளியே வந்த மொஹமட் ஆமிர், சர்வதேச கிரிக்கெட் சபையின் நடைமுறைகளின்படி தன்னை நிரூபிக்க வேண்டி உள்ளது. அவருக்கான 5 வருடகாலத் தண்டனைக் காலப்பகுதியில் அவர் ஊழல் மற்றும் மோசடிகளுக்கெதிராக சர்வதேச கிரிக்கெட் சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய கட்டாயம் உள்ளது. இதன் ஒரு கட்டமாகவே சர்வதேச கிரிக்கெட் சபையின் வீடியோ ஒன்றில் தோன்றி மொஹமட் ஆமிர் தனது அனுபவங்களைப் பகிர்ந்துள்ளார். ஸ்பொட் ஃபிக்சிங்கில் ஈடுபட்ட போட்டியில் தான் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதாகவும், ஆனால் அப்போட்டியில் தான் மிகவும் மோசமான செயலொன்றைச் செய்ததாகவும் மொஹமட் ஆமிர் அந்த வீடியோவில் குறிப்பிடுகிறார்.



# உடல் நிலையில் கவனம்



ஐபிஎல் போட்டிகளில் பங்கேற்க இந்தியாவுக்குப்பயணமாகியுள்ளதென்னாபிரிக்க அணியின் சகலதுறை வீரர் கலிஸின் உடல்நிலை தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும் என தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வைத்தியர் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் செய்திருந்த தென்னாபிரிக்க அணியில் இடம்பெற்றிருந்த கலிஸ், இறுதி ஒரு நாள் சர்வதேசப் போட்டியிலும், இறுதி டெஸ்ட் போட்டியிலும் உடல் உபாதைகள் காரணமாக இடம் பெற்றிருக்கவில்லை. ஒருநாள் சர்வதேசப் போட்டியின் போது முதுகு உபாதை காரணமாகவும், டெஸ்ட் போட்டியின் போது கழுத்து உபாதை காரணமாகவும் அவர் போட்டிகளில் பங்குபற்றியிருக்கவில்லை.

இந்நிலையில் போதிய ஓய்வில்லாமையின் காரணமாக இவ்வுபாதைகள் எதிர்கால்த்திலும் எழலாம் என்ற சந்தேகம் நிலவுகின்றது. இது குறித்துக் கருத்துத் தெரிவித்த தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வைத்தியர், ஜக்ஸ் கலிஸுக்கு இவ்வுபாதைகள் மீண்டும் எழலாம் என்ற அச்சம் காணப்படுகிறது. இவ்வுபாதைகளுக்காக அவர் தொடர்ச்சியான சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அருக்கான ஓய்வு கட்டாயம் தேவை என்ற நாம் நினைக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

# ஒழுக்கவியல் நடவடிக்கை

(கராச்சி)

பாகிஸ்தான் அணியின் சுழற் பந்து வீச்சாளர் கனேரியா மீது இங்கிலாந்துக் கிரிக்கெட் சபையால் ஒழுக்கவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஸ்பொட் ஃபிக்சிங்கில் ஈடுபட்டமைக்காகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த நடவடிக்கைகள் கனேரியாவுக்கும், தற்போது சிறையிலிடப்பட்டுள்ள முன்னாள் எசெக்ஸ் பந்து வீச்சாளர் மேர்வின் வெஸ்ட்பீல்ட் இற்கும் எதிராக மேற்கொள்ளப்படவுள்ளன.

முன்னாள் எசெக்ஸ் பந்துவீச்சாளரான மேர்வின் வெஸ்ட்பீல்ட் கடந்த ஜனவரி மாதம் ஸ்பொட் ஃபிக்சிங் குற்றத்திற்காக நான்கு மாதச் சிறையில் அடைக்கப்பட்டார். கடந்த 2009ஆம் ஆண்டு செப்டெம்பரில் இடம்பெற்ற 40 ஓவர்கள் கொண்ட போட்டியில் டுர்ஹாம் அணிக்கெதிராக வேண்டுமென்றே மோசமாகவிளையாடியதை அவர் ஒப்புக்கொண்டதை அடுத்தே அவருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.


அந்த விசாரணையின் பின்னர் தீர்ப்பின் போது நீதிபதி கனேரியாவை அந்தச் சம்பவத்தின் சூத்திரதாரி எனக் குறிப்பிட்டிருந்தார். எனினும் முன்னர் அச்சம்பவம் தொடர்பான விசாரணைகளில் கனேரியாவுக்கு எதிராக போதிய ஆதாரங்கள்கிடையாது எனத் தெரிவித்து பொலிஸ் அவரை விடுதலை செய்திருந்தது.

இந்த நிலையிலேயே வெஸ்ட்பீல்ட் மற்றும் கனேரியாவுக் கெதிராக ஒழுக்கவியல் விசாரணைகளை நடத்தவுள்ள இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.இந்த விசாரணைகளின் போது இருவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டால் உலகம் முழுவதிலும் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்ற முடியாத தடை இருவருக்கும் விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேசக் கிரிக்கெட் சபை விதிகளின்படி இங்கிலாந்துக் கிரிக்கெட் சபையால் விதிக்கப்படும் தடை அனைத்துக் கிரிக்கெட் சபைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்தந்த நாடுகளில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

எனினும் கனேரியாவின் சொந்த நாடான பாகிஸ்தானே அவரை அண்மைக்காலத்தில் சந்தேகத்தின் காரணமாகச் சர்வதேசப் போட்டிகளுக்குத் தெரிவு செய்திராத நிலையில் அந்த நடைமுறை கடினமாகஅமையாது எனக் கருதப்படுகிறது. இது குறித்து கனோரிய கருத்துத் தெரிவிக்கவில்லை.

# ஹர்பஜன் தகுதி




(புனே)

வரும் காலங்களில் இந்திய அணிக்கு கப்டனாகும் தகுதி ஹர்பஜனிடம் உள்ளது என கப்டன் சௌரவ் கங்குலி பாராட்டு தெரிவித்துள்ளார்.

மும்பை இந்தியன்ஸ் அணியின் கப்டனாக ஹர்பஜன் சிங் நியமிக்கப்பட்டது சரியான முடிவு. கடந்த ஆண்டு நடந்த சம்பியன்ஸ் லீக் தொடரில், இவரது தலைமையில் மும்பை அணி சிறப்பாக செயற்பட்டு கோப்பையை வென்றுள்ளது. கப்டனுக்கு தேவையான அனைத்துதகுதிகளும்இவரிடம் உள்ளது. வரும் காலங்களில்இவரை, இந்திய அணிக்கு கப்டனாக நியமிக்கலாம்.

சென்னை அணிக்கு எதிரான முதல் போட்டியில், இவரது கப்டன் செயற்பாடு சிறப்பாக இருந்தது எனவும் அவர் தெரிவித்தார்.



# நெருக்கடிக்குள் இலங்கை



(கொழும்பு)

இங்கிலாந்து அணிக்கெதிரான கொழும்பு டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி நெருக்கடியான கட்டத்தை அடைந்துள்ளது.

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான போட்டி கொழும்பில் நடைபெற்று வருகின்றது.

இதில் 185 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் இலங்கை அணி ஸ்வானின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது திணறி வருகின்றது.

விக்கெட்டுக்கள் ஒரு பக்கம் சாய்க்கப்பட்டபோதும் அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றார். நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை இலங்கை அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன 157 பந்துகளை எதிர்கொண்டு நான்கு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 55 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். மற்றும் சமரவீர 47, டில்சான் 35, சங்கக்கார 21 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ஸ்வான் 82 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இலங்கை அணி முதல் இனிங்ஸ் 275. இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 460.

இலங்கை அணி நான்கு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 33 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றது. இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

இரண்டு போட்டிகளைக் கொண்ட இந்த டெஸ்ட் தொடரின் காலியில் நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை அணி 75 ஓட்டங்களால் இங்கிலாந்து அணியை வெற்றிபெற்றது.

இருப்பினும் இப்போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெறும் பட்சத்தில் தொடரை சமப்படுத்துவதுடன் தொடர்ந்து தரப்படுத்தலில் முதல் நிலையைத் தக்கவைக்க முடியும்.

# 8 விக்கெட்டுக்களால் டில்லி வெற்றி

(கொல்கத்தா)

இந்தியன் பிறிமியர் லீக்கின் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் டில்லி டெயார் டெவில்ஸ் அணி எட்டு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

கொல்கத்தா ஈடன் கார்டின்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டி மழையினால் 12 ஓவர்களுக்கு மட்டுப் படுத்தப்பட்டிருந்தது.

இந்தப் போட்டியில் 98 என்ற வெற்றியிலக்கை நோக்கி, களமிறங்கிய டில்லி டெயார் டெவில்ஸ் அணி 11.1 ஓவர்களில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றுவெற்றியை தன் வசப்படுத்தியது.

டில்லி டெயார்டெவில்ஸ் அணி சார்பில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய இர்பான் பத்தான் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 12 ஓவர்களில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இந்தப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக டில்லி டெயார்டெவில்ஸ் அணியின் இர்பான் பத்தான் தெரிவானார்.

# கிரெடிட் கார்ட்: 6 புத்திசாலித்தனமான வழிகள்!

இன்று கிரெடிட் கார்ட் என்பது அந்தஸ்தின் அடையாளமாகிவிட்டது. தேவையிருக்கிறதோ, தேவையில்லையோ பலரும் கிரெடிட் கார்ட் பயன்படுத்த விரும்புகிறார்கள்.

உங்களுக்கும் அந்த ஆசையிருந்தால் கிரெடிட் கார்ட்டை பயன்படுத்தும் போதும் பின்வரும் 6 புத்திசாலித்தனமான விஷயங்களைக் கவனத்தில் வையுங்கள்...

**1. Billing cycle**

ஒவ்வொரு கிரெடிட் கார்ட்டுக்கும் ஒரு "பில்லிங் சைக்கிள்" உள்ளது. நீங்கள் எப்போதும் உங்கள் நிலுவைத் தொகையை முழுமையாகச செலுத்திவிடுவீர்கள் என்றால், இந்த சுழற்சியின் ஆரம்பத்தில் நீங்கள் வாங்கும் பொருட்களுக்கு ஓர் இலவச "கிரெடிட்" காலத்தை அனுபவிக்கலாம்.

**2. குறைந்தபட்சத் தொகை**

நீங்கள் குறைந்தபட்சத் தொகையைச் செலுத்திவிடுவது, மீதமுள்ள தொகையை கடனாகக் கருதி அதற்கு வட்டி விதியுங்கள் என்று வங்கிக்குத் தெரிவிப்பதாக அமையும். கிரெடிட் கார்ட் மீதான கடன்களுக்கான வட்டி விகிதம் பொதுவாக அதிகம் என்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

**3. உஷாராக வேண்டிய நேரம்**

கிரெடிட் கார்ட் உரிமையாளர் குறைந்தபட்சத் தொகையைச் செலுத்தாவிட்டால், அதுகுறித்து அவருக்கு ஓர் எச்சரிக்கை விடுக்கப்படும். கார்ட் வழங்கல் விதிகளின்படி, அவர் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியவராகக் கருதப்படுவார். அப்போது அவர் உஷாராகிக்கொள்ள வேண்டும்.

**4. பணம் எடுக்கும்போது...**

கிரெடிட் கார்ட்டைப் பயன்படுத்திப் பணம் எடுப்பதெல்லாம், அவ்வாறு எடுத்த நாளில் இருந்து கடனாகக் கருதப்படும். அம்மாதிரியான கடன்களுக்கு எந்த "இலவச கிரெடிட் காலமும்" இல்லை என்பது உங்கள் நினைவிருக்கட்டும்.

**5. தனிநபர் கடனாக மாற்றலாம்**

கிரெடிட் கார்ட் நிலுவைத் தொகையைத் திருப்பிச் செலுத்த



முடியாமல் அவஸ்தைப்படுகிறீர்களா? அதுபோன்ற நிலையில், உங்கள் நிலுவையை ஓரளவு குறைந்த வட்டியில் தனிநபர் கடனாக மாற்றுவதற்குச் சம்பந்தப்பட்ட வங்கி முன்வரலாம். நீங்கள் அதை வழக்கமான கடனைப் போல பல்வேறு தவணைகளில் செலுத்தி முடிக்கலாம். உங்களுக்கு அந்த முறை சரியாக வரும் என்று தோன்றினால் உடனே வங்கி நிர்வாகிகளிடம் பேசுங்கள்.

**6. கிரெடிட் அளவு**

கிரெடிட் கார்ட்டை பயன்படுத்தி நீங்கள் அதிகமாகச் செலவழிப்பது போலத் தோன்றினால் உங்கள் கார்ட்டின் கிரெடிட் அளவைக் குறைக்கும்படி கார்ட் நிறுவனத்திடம் நீங்கள் கேட்கலாம்.

கிரெடிட் கார்ட் குறித்து அலர்ஜி அடையத் தேவையில்லை. புத்திசாலித்தனமாகவும் கவனமாகவும் பயன்படுத்தினால் அது தக்க சமயத்தில் உதவும் ஒரு சிறந்த பொருளாதாரத் துணைவன் என்கிறார்கள் நிபுணர்கள்.

# Operation B71



இது ஏதோ இராணுவ நடவடிக்கையா? இல்லை. ஆனால் அந்தளவிற்குத் திட்டமும் காலமும் தேவைப்பட்ட ஒரு கணினித்துறை சம்பந்தப்பட்ட நடவடிக்கை. இணையம் மூலம் முதலில் உங்கள் தகவலையும் அதைத் தொடர்ந்து உங்கள் பணத்தையும் மிகச் சுலபமாக திருடிவிட முடியும். இதற்கென்று ஒரு பெரிய கூட்டம் இணையத்தில் இயங்குகிறது. ஒரு இலவச மென்பொருளைத் தருவதாகச் சொல்வார்கள். நீங்களும் அதை உங்கள் கணிணியில் நிறுவிவிட்டீர்கள். இப்போது, இந்த இலவச மென்பொருளில் இருக்கும் ஒரு "கள்ளன்" நீங்கள் தட்டச்சும் அனைத்தையும் ஒரு மைய கணினிக்கு அனுப்பும். உங்கள் கணினி வழியே நீங்கள் நடத்தும் அனைத்து விவரங்களும் (வங்கி கணக்கு எண், கடவுச்சொற்கள்) சேகரிக்கப்படும். இது போல் பல கணினிகளும் இயங்கினால்? குறிப்பாக ஒரு பிரவுசிங் நிலையத்தில் இப்படி ஒரு கணினி இருந்தால்?

இத்தகைய வேலையைச் செய்யும் ஒரு பெரும் வலைப்பின்னல் இணையத்தில் உண்டு. அத்தகைய ஒரு பெரும் வலைப்பின்னலை குற்றக் குழுவை மைக்ரோ சொப்ட் நிறுவனம் உடைத்திருக்கிறது. மேலும் விரிவான தகவல் இங்கே:

http://www.wired.com/threatlevel/2012/03/microsoft-botnet-takedown/

# முதல் நாவல்கள்



- வங்காளம் - 1865 பக்கிம் சந்திரரின் "துர்கேதச நந்தினி"
- தமிழ் - 1875 வேதநாயகம் பிள்ளையின் "பிரதாப முதலியார் சத்திரம்"
- தெலுங்கு - 1880 வீரகேசலிங்கம் பந்துலுவின் "ராஜசேகர சரித்திரமு".
- இந்தி - 1871 பவேரியா எழுதிய "பாக்கியவதி"
- மலையாளம் - 1881 அப்பு நெடுங்காடியின் "குண்டலதா".
- உலக மொழிகளிலேயே தமிழ் மொழியில்தான் முதன்முதலாக அகரவரிசை தோன்றியது. அதன் பெயர் அகராதி நிகண்டு. இயற்றியவர் சிதம்பர சிரேவன சித்தர். ஆண்டு 1594. அதன் பிறகே மற்ற மொழிகளில் அகர வரிசை தோன்றியது.

# நீங்கள் எந்தப் பக்கம் நிற்கிறீர்கள்?

**அய்ஜாஸ் ஸகா செயட் (துபாய்) கட்டுரையிலிருந்து.**

மூன்று வருடங்களுக்கு முன்பு, மூன்று தசாப்தங்களாக நிலவிய புலிப் பயங்கரவாதத்தை தீவிலிருந்து ஒழித்த போது, இலங்கைவாசிகள் எல்லோரும் கூட்டாக ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டு ஆறுதலடைந்திருப்பார்கள். எனது இலங்கை நண்பர்கள், இன்று நாட்டில் முழு அமைதியும் மற்றும் பாதுகாப்பும் உள்ளது, பெரிய அளவிலான உல்லாசப் பயணிகள் இங்கு வருகை தருகிறார்கள் எனச் சொல்கின்றனர்.

ஆனால் இந்த அமைதியும் பாதுகாப்பும் என்ன விலை கொடுத்து வாங்கப்பட்டது? நாடுகள் பயங்கரவாதம் மற்றும் கிளர்ச்சியினை தடுக்க முயலும் போது அதற்கான சட்டங்கள் மற்றும் நியாயமான விதிகள் என்று எதுவும் இல்லையா?

உலக சமுதாயத்திடமும் மற்றும் இலங்கைத் தலைவர்களிடமும் இத்தகைய கேள்விக்கான பதில்களை வேண்டி நிற்கிறோம். எனவே கடந்த மாதம் ஐநா மனித உரிமைப் பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம், இதற்கான செயலே.

ஆனால் என்ன குரூரமான வஞ்சனை பாருங்கள், இந்த ஐநா தீர்மானம் முன்வைக்கப்பட்டது, பலஸ்தீனியர்களுக்கு எதிராக கடந்த ஏழு தசாப்தங்களாக குற்றம் புரிந்துவரும், இஸ்ரேல் எதிர்கொள்ள வேண்டிய சகல முயற்சிகளையும் தொடர்ந்து முடக்கி வரும் ஒரு நாட்டினால். தவிரவும், இந்த நாடு ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளில் நடத்தியவற்றின் அதிர்ச்சி மற்றும் பிரமிப்புகளை தாண்டி அப்பால் பார்க்க முயலும் ஒரு சிறுவனைப்போல முடிந்தால் நீங்களும் முயற்சித்துப் பாருங்கள். மற்றும் அபு காரப், குவாண்ட்டனாமோ போர் அக்கிரமங்கள் மற்றும் தூர தேசங்களில் தொடர்ந்து இடம்பெறும் ஆளில்லா விமானத் தாக்குதல்கள் போன்றவற்றுக்கு பொறுப்பான ஒரு நாட்டினால் மனித உரிமைகள் பற்றி விரிவுரைகள் நடத்தப்படுகின்றன.

ஈராக் பற்றி சொல்லப்பட்ட ஒரு பொய்யிற்காக ஒரு மில்லியன் மக்கள் தங்கள் உயிரையே விலையாகக் கொடுத்தனர். ஆனால் உலக நாடுகள் எப்போதும் பேரரசுகள் பக்கம்தான் நிற்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

தவிரவும், பதிலாளைத் தேடும் முடிவற்ற ஐநா போர்க்களத்தில், ஐநா மனித உரிமைகள் பேரவையின் வாக்குகளை விடவும், கண்களுக்கு புலப்படாத வேறு சில விடயங்களும் உள்ளன. பீஜிங்கினை நோக்கிய இலங்கையின் நெருக்கம் மற்றும் பாரிய சீன முதலீடுகள், சுற்றுவட்டாரத்தில் வளர்ந்துவரும் சீனாவின் செல்வாக்கு என்பனவற்றையிட்டு வொஷிங்டன் அத்தனை மகிழ்ச்சியாக இல்லை.

இலங்கை, சீனாவின் அரவணைப்பை வரவேற்பதை கட்டாயப்படுத்தி விடுமோ என்கிற அச்சம் காரணமாகத்தான் ஐநா மனித உரிமைகள் பேரவையின் வாக்களிப்பில் இந்தியா அத்தனை ஆர்வம் காட்டவில்லை என்பது துல்லியமாகத் தெரிகிறது.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை நிறுவனம் மற்றும் எப்போதும் விழிப்பாக இருக்கும் ஊடக ஜாம்பவான்கள், போன்றவர்கள்கூட ஐநா வாக்களிப்பு காஷ்மீர் விடயத்திலும் அதே போன்ற அழைப்புகளுக்கான கதவுகளைத்



திறந்து விடுமோ என அதையிட்டு கலக்கமடைந்தார்கள். பாகிஸ்தான் மற்றும் பல இந்தியாவின் அயலவர்கள் கொழும்புடன் அவர்களுடைய நெருங்கிய உறவு காரணமாக இலங்கையின் பக்கமே வாக்களித்தனர். அவர்கள் சொல்வது, ஒரு மனிதனுக்கு பயங்கரவாதியாகத் தோன்றுபவன் இன்னொரு மனிதனுக்கு சுதந்திரப் போராளியாகத் தோன்றுவான் மற்றும் இதன் மறுதலையாகவும் உள்ளது என்று.

அதேவேளை மாட்டின் லூதர் கிங் வலியுறுத்துவது போல, அழிவுக்குள்ளான மக்களும் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுபான்மையினரும் எப்போதும் எதையும் பெறுவதற்கு வேண்டிய முடிவில் காத்து நிற்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும், எங்காவது நடக்கும் அநீதி, எல்லா இடத்திலும் நீதிக்கு அச்சுறுத்தலையே ஏற்படுத்தும். ஒரு நேரம் வரும் போது ஒரு தேசம், அதேபோல தனிப்பட்டவர்களின் வாழ்க்கை என்பனவற்றில் உங்கள் குறுகிய தேசிய நலன்கள் மற்றும் சிறிய கலாசார நம்பிக்கைகள் என்பனவற்றுக்கு மேலாக நீங்கள் உண்மையைப் பேசவேண்டியிருக்கும். மேலும் மிகவும் முக்கியமாக உங்கள் செயல்கள் மூலம் நீங்கள் எந்தப் பக்கம் நிற்கிறீர்கள் என்பதை வெளிக்காட்ட வேண்டியிருக்கும்.

பலஸ்தீனியர்களின் விடயத்தில் கடந்த ஏழு தசாப்தங்களாக அது தொடர்ந்து நடைபெற்று வருவதை நாம் காண்கிறோம். அமெரிக்காவினால் வழங்கப்பட்ட உரிமத்துடன் கூடிய ஆயுதத்தை வைத்துக்கொண்டு இஸ்ரேல் கொலைகளை மற்றும் தண்டனை விலக்குடன் கூடிய கொலைகளைப் புரிந்து கொண்டு முழு தேசத்தையும் சிறைப்பிடித்து மக்களை சித்திரவதை செய்கிறது. மற்றும் இந்த இனத்தவர்கள் தாங்கள் சமீபத்தில்தான் இதே போன்ற விதியினால் துன்பப்பட்டதாகச் சொல்கிறார்கள்.


சமீப காலங்களில் சர்வதேசத்தின் செயலற்ற தன்மையினால் கிட்டத்தட்ட பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் ருவாண்டாவில் அநியாயமாகக் கொல்லப்பட்டார்கள். பால்கன்சில் பதினாயிரக் கணக்கான மக்கள் அழிந்து போனார்கள். சிரியாவில் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் சில உலக சக்திகள் மௌனம் காப்பதுடன் தங்கள் பூகோள அரசியல் நலன்களைப் புறக்கணித்தும் வருவதனால் இது நடக்கிறது.

# பொய் மூலம் தொடுக்கப்பட்ட ஈராக் போர்: அதிரும் உண்மைகள்

ஈராக் மீது போர் தொடுக்கப்பட்டு சாதாம் ஷுசைன் அவர்களை தூக்கிலும் போட்டாயிற்று. ஆனால் கடந்த செவ்வாய்க்கிழமை பி.பி.சி வெளியிட்ட ஆவணப்படத்தை பார்த்தபின்பு உலகம் ஒரு நொடி அதிர்ந்துதான் போயிருக்கும். ஒரு பொய்யை மட்டும் அதாவது அப்பொய்யை உறுதியான ஒருவர் தெரிவித்ததனால் அதை உண்மை என நம்பி ஈராக் மீது போர் தொடுத்து இன்று பெரும் அவமானத்திற்குள் தள்ளப்பட்டிருக்கின்றது அமெரிக்கா.

ஈராக்கில் சதாம் ஷுசைன் ஆட்சியில் இரசாயனப் பொறியியலாளர் ஆக பணியாற்றிய ரபீட் அல் ஜனாபி என்பவர் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே ஈராக் மீது போர் தொடுக்கப்பட்டுள்ளது.

இவர் பல பொய்யான தகவல்களை அமெரிக்க அரசுக்கு வழங்கியிருக்கின்றார். ஈராக்கில் நடமாடும் இரசாயன ஆய்வுகூடம் இருப்பதாகவும் ஒரு முறை ஒன்றில் விபத்து ஏற்பட்டதில் 12 பேர் உயிர் இழந்ததாகவும் தகவல் வழங்கியிருக்கின்றார். ஒரே இடத்தில் இருந்தால் அதை எதிரிகள் கண்டுபிடித்துவிடலாம் என்பதாலும் அடிக்கடி இடம் மாற்றலால் தாக்குதலில் இருந்தும் தவிர்க்கலாம் என்பதாலும் நடமாடும்








இரசாயன ஆய்வுக்கூடங்களை ஈராக் வைத்திருப்பதாகவும், தான் அதில்தான வேலை செய்வதாகவும் இவர் அமெரிக்காவுக்கு தகவல் வழங்கியிருக்கின்றார்.

இவர் வழங்கிய தகவல்களை அடிப்படையாக வைத்து நடமாடும் ஆய்வுகூடங்களின் மாதிரிகளை அமெரிக்கா உருவாக்கியுள்ளது. அது மட்டுமல்லாது அதை ஐ.நாவின் பாதுகாப்புச் சபையிலும் சமர்ப்பித்துள்ளது. அன்றைய அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலர் கொலின் பவெல் அவர்கள் ஐ.நாவில் பொறியியலாளர் சொன்ன பொய்யை உண்மையென நம்பி அப்படியே ஒப்புவித்துள்ளார். அதையும் பொறியியலாளர் கூறிய பொய்யையும் பி.பி.சி மாற்றி மாற்றி காட்டி அதிரடித்துள்ளது.




ஜேர்மனிய உளவுத் துறையும், பிரித்தானிய உளவுத்துறையும் இத்தகவலின் நம்பகத்தன்மையில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்தும் அமெரிக்கப் பிரிவு அசட்டை செய்ததாக ஆவணம் விரிகின்றது. ஏன் பொய் சொன்னாய் என்ற கேள்விக்கு சதாமின் ஆட்சியில் மக்கள் பெரும் துன்பங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்ததாகவும் அது தொடர்ந்தால் மக்களுக்கு ஆபத்து எனவும் அதற்காகவே சர்வாதிகார ஆட்சி நடத்தும் சதாமின் ஆட்சியை ஒழிக்க, தான் பொய் சொன்னதாகவும் பி.பி.சிக்கு பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

ஆனால் போர் முடிந்த பின்பு நடமாடும் இரசாயன ஆய்வுகூடத்தை ஈராக்கையே சல்லடை போட்டு தேடியும் ஒரு துரும்பு கூட கிடைக்கவில்லை. அதன் பின்பு உளவுப்பிரிவின் பல கட்ட விசாரணைகளுக்கு பின்பே இவ் உண்மை அமெரிக்காவுக்கு தெரிய வந்துள்ளது. உண்மை அறிந்தவுடன் உறைந்துபோனது அமெரிக்கா. தற்போது அந்த பொறியியலாளர் ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரி குடியேறி பல ஆண்டுகள் ஆகின்றது.

பல நாடுகள் அழிக்கப்பட்ட வரலாறுகளை கதைகள் ஊடாகவே நாம் அறிந்திருப்போம். ஆனால் நிகழ்காலத்தில் ஒரு பொய்யினால் ஒரு நாடு வீழ்த்தப்பட்டுள்ளதை அறிகின்றோம். ஆனாலும் பெரும் வல்லரசான அமெரிக்கா விடுதலைப்புலிகளின விடயத்திலும் இதே தவறைக் கடந்த காலங்களிலும் செய்திருக்கின்றது. இப்போது மிக நிதானமாக இலங்கை விடயத்தில் கால் பதிக்கவே பிரேரணையுடன் முதலடியை எடுத்து வைததிருக்கிறது. தொடர்ந்தும் அமெரிக்கா பல அறிக்கைகள் ஆதாரங்கள் என சமர்ப்பித்து அதிர வைக்கலாம். காத்திருப்போம்.

# தனிப்பிள்ளை நோஞ்சான்!



முன்பு, "நாம் இருவர் நமக்கு இருவர்!" என்று, குடும்பக் கட்டுப்பாடு விளம்பரம் செய்தனர். இப்போது, "ஒன்று பெற்றால் ஒளிமயம்" என்கின்றனர். ஆனால், வீட்டிற்கு ஒரே குழந்தையாக பிறந்து வளர்பவர்களுக்கு மனவளர்ச்சி இருப்பதில்லை என்கிறார்கள் சமூக மருத்துவர்கள்...

சகோதர, சகோதரிகளுடன் பிறந்து வளர்ந்த குழந்தைகளிடமிருந்து, ஒரே குழந்தையாக வளர்பவர் ஏன் மாறுபடுகிறார் என்பதற்கு பல காரணங்கள் உண்டு... முதலாவதாக, வீட்டில் அக்குழந்தையின் வயதை ஒத்த குழந்தைகள் யாருமில்லை. சேர்ந்து விளையாடவும், போட்டியிடவும் யாருமில்லை. குழந்தையுடன் சரியாகப் பேசவும், விளையாடவும் பெற்றோரால் முடிவதில்லை.

குடும்பம் என்பது ஒரு சிறு உலகம். பெரியவனான பிறகு வெளி உலகத்தில் பழக வேண்டிய பொழுது, உதவக் கூடிய வாழ்க்கை அனுபவங்களை, தன் வயதை ஒத்த மற்றக் குழந்தைகளுடன் பழகுவதன் மூலம் சின்ன வயசிலேயே கற்றறிகிறது குழந்தை.

ஆனால், தனியாக வளர்ந்த குழந்தை, பெரியவனான பிறகும் கூட, மற்றவர்களுடன் ஒட்டிப் பழக முடிவதில்லை. இதனால், சமூக வாழ்வுக்கு எதிரான என்ற மனநிலை உருவாகிறது.

அவருக்குப் பிறகு தம்பி, தங்கைகள், பிறக்காததால், பெற்றோருக்கு, அவர்கள் என்றென்றும் குழந்தையாகவே இருந்து விடுகின்றனர். பத்து பன்னிரண்டு வயது ஆன பிறகுங்கூட, நாலைந்து வயசுக் குழந்தையின் பேச்சும், நடத்தையுமே அவர்களுக்கு இருக்கின்றன.

இருபது, இருபத்தைந்து வயதான பிறகும் கூட இவர்கள் தாய், தந்தையரைப் பிரிய மறுக்கின்றனர். பெற்றோரின் அளவுக்கு மிஞ்சிய கவனிப்பே, இவர்களின் மன வளர்ச்சியின்மைக்குக் காரணம்.

ஐந்தாறு குழந்தையுள்ள பெற்றோர், தம் அன்பை எல்லாக் குழந்தைகளுக்கும் சம பங்கிட்டு அளிக்கின்றனர். இப்படி ஐந்தாறு இடங்களுக்குப் பிரித்துச் செலுத்தப்பட வேண்டிய அன்பு வெள்ளம், ஒரே குழந்தை விஷயத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு மட்டுமே செல்கிறது. அளவுக்கதிகமானால் அமுதமும் விஷந்தானே?

ஆகவே, இரண்டாவதைத் தள்ளிப் போடாதீர்கள். மூன்றாவதற்கும் முயற்சி செய்க!

# 100 வருடங்களுக்குப் பிறகு...

தாதா சாகேப் பால்கே 1912- ஞூல் அரிச்சந்திரா என்ற படத்தை முதன் முதலாக இயக்கினார். இந்தியாவின் முதல் திரைப்படம். முதல் மவுனப் படம். முதல் கறுப்பு வெள்ளைப் படம் என்ற பல முதல்கள் இருந்தாலும் அந்தப் படத்துக்கு அவர் "முதல்" போட்டது தான் பெரிய விஷயம். அந்தப் படத்துக்காக அவர் முயன்று செலவிட்டார். அப்படியும் அதில் நடிப்பதற்கு நடிகர்கள் கிடைக்க வில்லை. தன் குடும்ப உறுப்பினர்களை நடிகர்களாக்கினார்.

அதன் பிறகு 100 ஆண்டுகள் கழித்து தமிழில் வெளியான ஒரு படத்துக்கும் அதே சிரமம்.

சங்ககிரி ராசுகுமார் இயக்கிய "வெங்காயம்" படம்தான் அது. படத்தில் முற்போக்குக் கருத்துகளைச் சொன்னார். சிறுவர்களை வைத்து அதைச் சாதித்திருக்கிறார் என்பதையெல்லாம்விட முக்கியமானது அவருடைய முயற்சி. பத்து கோடி, நூறு கோடி என்று பணம் வைத்திருப்பவர்கள் மட்டுமே தயங்கித் தயங்கி நுழையக்கூடிய சினிமா உலகம் ஒரு சாமானியனின் குடிசைத் தொழிலாக மாறியிருப்பது அசாதாரணமான முரண்.

படத்தைப் பார்த்துவிட்டு பாரதிராஜா, விக்கிரமன், சேரன், ஆர்.கே.செல்வமணி, ரோகிணி போன்ற பல இயக்குநர்கள் இந்த அரிய முயற்சியை மனம் திறந்து பாராட்டியதோடு, தகுந்த விளம்பரத்தோடு வெளியிடலாம் என்று படம் வெளியான இரண்டாவது நாளே படத்தை நிறுத்தச் சொல்லிவிட்டார்கள். சொல்லியபடியே இயக்குநர் சேரன் இப்படத்தை வாங்கி வெளியிட்டிருக்கிறார்.

எப்படி இந்தத் துணிச்சல் வந்தது? -சங்ககிரி ராசுகுமாரைச் சந்தித்த போது கேட்டேன்.

"துணிச்சல் என்று சொல்வதற்கு ஒன்றுமில்லை. இயலாமைதான் காரணம். என்னிடம் ஒரு கதை மட்டும் இருந்தது. அதுதான் என் மூலதனம். அதில் எந்த நடிகரையும் நடிக்க வைக்க என்னிடம் பொருளாதாரம் இல்லை. கதையில் மொத்தம் 105 பேர் நடிக்க வேண்டியிருந்தது. நாயகன், நாயகிக்கு மட்டும் இரண்டு பேரை வெளியில் இருந்து தேர்வு செய்தேன். மீதி 103 பேரும் என்னுடைய உறவினர்கள்தான்.

நானே கதை, திரைக்கதை, வசனம், இயக்கம், ஒளிப்பதிவு ஆகிய பொறுப்புகளை செய்தேன். ஒரு கேரக்டரில் நடிக்கவும் வேண்டியிருந்தது. மேக் அப், சமையல் போன்ற பொறுப்புகளும்கூட எங்கள் குடும்பத்தினரே செய்தனர்.

ஏழை விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு ஒரு போட்டோ எடுப்பதே ஆடம்பரமான விஷயமாக இருக்கும்போது ஒரு சினிமாவை எடுப்பதற்கான துணிச்சலைத் தந்தவர்கள் என் குடும்பத்தினர்தான். பத்தாயிரம், இருபதாயிரம், என்று கடன் வாங்கித்தான் படத்தை தயாரித்தேன். எப்போதெல்லாம் ரெட் ஒன் கமெராவை வாடகைக்கு எடுக்க காசு கிடைக்கிறதோ அப்போதொல்லாம் படப்பிடிப்பு நடக்கும். அன்றைக்கு வயல் வேலைகளை கொஞ்சம் நிறுத்தி வைத்துவிட்டு எனக்கு உதவி செய்ய வந்து விடுவார்கள் என் குடும்பத்தினர். எல்லோரும் அவரவர் உடையில் வந்து நடித்தனர். அவர்களுடைய லுங்கிகள், டவுசர்கள், பாவாடை சட்டைகள்தான் காஸ்ட்யூம். நடிகர் சத்யராஜை அணுகி என் முயற்சியைச் சொன்னபோது அவர், அவராகவே ஒரு பாடல் காட்சியில் தோன்றி நடிக்க சம்மதித்தார்.



குடும்பத்தினர் யாருக்கும் சினிமா அனுபவமோ, நடிப்பில் அனுபவமோ இல்லை. படத்தில் கூத்துக் கலைஞனாக நடித்து மக்களின் பாராட்டைப் பெற்றவர் என்னுடைய தந்தை" என்றார்.

படத்தில் பலரும் வெகு இயல்பாக நடித்திருந்தனர். குறிப்பாக ராசுகுமாரின் அப்பா. கண்கலங்க வைத்துவிட்டார்.

"சர்வதேச விருது பெறும் பல திரைப்படங்கள் மிகக் குறைந்த பட்ஜெட்டில் தயாரானவைதான். நியூஸிலாந்தில் பாடல் காட்சி, தேவையில்லாத பிரம்மாண்டம் போன்றவற்றில் இருந்து தமிழ் சினிமாவை மீட்க முடியும் என்பதற்கு என்னால் முடிந்த நிரூபணம் இது" என்கிறார் ராசுகுமார்.

**வெங்காயம்... உரிக்க உரிக்க பல உண்மைகளைச் சொல்லுகிறது.**

# வன்னி ஆசிரியர்களின் நலன்கருதி குடாநாட்டிலிருந்து பேருந்து சேவை

## ஆளுநரின் ஆக்கபூர்வ ஏற்பாடு

(ஒட்டுசுட்டான்)

வன்னிப் பகுதியில் கடமையாற்றும் ஆசிரியர்களின் ஒரு பகுதியினரின் போக்குவரத்து சிரமங்களினை போக்குவதற்கான சேவையில் வடக்கு மாகாண கல்வி விளையாட்டு அமைச்சின் இரண்டு பேருந்துகள் பணியில் ஈடுபட்டுள்ளன.

இந்தப் போக்குவரத்து சேவையின் ஒரு பேருந்துச் சேவை பருததித்துறைப் பகுதியிலிருந்தும், இனனொரு சேவை யாழ்ப்பாணப் பகுதியிலிருந்தும் இடம்பெறுகின்றன.

இவ் இரண்டு பேருந்து சேவையும் காலை 6 மணிக்குத் தமது பயணத்தை ஆரம்பித்து மாங்குளத்தில் இணைந்து ஒரு பேருந்துச் சேவை மல்லாவிப் பகுதிக்கும் இன்னொரு பேருந்துச சேவை ஒட்டுசுட்டான் பகுதிககும் இடம்பெறுகின்றது.

இந்தப் பேருந்து சேவைக்கான ஒழுங்கினை வடக்கு மாகாண ஆளுநர் மேற்கொண்டுள்ளார்.

எனினும் இப் பேருந்துச் சேவையிலும் சில குறைபாடுகள் காணப்படுவதாக பேருந்துகளில் பயணம் செய்யும் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பேருந்துச் சேவையினை காலை வேளைகளில் பேருந்து நிலையத்திலிருந்து ஆரம்பிக்கும் போது தனியார் பேருந்து சேவையாளர்களால் சில இடர்களினை எதிர்நோக்க நேரிடுகிறது. இதேவேளை ஒட்டுசுட்டான் பகுதிக்கு வரும் பேருந்துச் சேவை முத்தையன்கட்டுப் பகுதிக்குச் செல்லாமல் கற்சிலை மடுப்பகுதியுடன் ஆசிரியர்களை இறக்கிவிட்டுச் செல்வதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே இத்தகைய சிறப்பான பேருந்துச் சேவையினை ஏற்பாடு செய்த ஆளுநர் இக் குறைபாட்டை நிவர்த்தி செய்து தருமாறு இப்பகுதியூடாகப் பயணம் செய்யும் ஆசிரியர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (42)

# கோட்ட மட்டப் போட்டிக்கு மாணவர்களிடமிருந்து பணம் அறவீடு

## பெற்றோர் அதிருப்தி

(துணுக்காய்)

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், துணுக்காய் கல்விக்கோட்டப் பாடசாலைகளிடையே இவ்வருடம் நடைபெறவுள்ள போட்டிகளுக்கென ஒவ்வொரு மாணவர்களிடமிருந்து தலா 25 ரூபா வீதம் அறவிட்டுத் தருமாறு சம்பந்தப்பட்ட கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் தமது மேற்பார்வையில் உள்ள பாடசாலைகளின் அதிபர்களினைக் கேட்டுள்ளனர்.

இவ் அடிப்படையில் மேற்படி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை அதிபர்கள் பண அறவீட்டினை மேற்கொள்ளும் பொழுது பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

முதலாம் தவணைக்குரிய பரீட்சைக் கட்டணம், வசதிகள் சேவைகள் கட்டணம் என்பவற்றினை அறவிடும் சந்தர்ப்பத்தில் இததகைய கட்டணத்தினை வழங்க முடியாது உள்ளதாக பெற்றோர்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. (42)

# தப்பியோடிய கைதி மீண்டும் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தபோது தப்பியோடிய யாழ். சிறைச்சாலைக் கைதி ஒருவர் நான்கு நாட்களின் பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை கொக்குவில் -உப்புமடம் பகுதியில் வைத்து சிறைக்காவலர்களால் பிடிக்கப்பட்டுள்ளார்.

துவிச்சக்கர வண்டித் திருட்டுக் குற்றச்சாட்டில் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. கடந்த மூன்று வாரங்களாக யாழ். சிறைச்சாலையில் விளக்க மறியலில் அவர் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே சுகயீனம் என்று கூறியதால் அவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர்.

இதன்போதே மலசலகூடம் செல்வதாகக்கூறி அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# தமிழ்ப்பாட செயலமர்வு

(மாங்குளம்)


துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் 10 ஆம், 11 ஆம் வகுப்புக்களில் தமிழ்ப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாடசாலை மட்ட கணிப்பீட்டு வேலைத்திட்டம் (SBA) தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 16 ஆம் திகதி மாங்குளம் ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் காலை 8.30 மணிமுதல் 4.30 மணி வரையும் நடைபெறவுள்ளது.

இதேவேளை 17 ஆம் திகதி தமிழ்ப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கற்பித்தல் முறைமைகள் தொடர்பான செயலமர்வும் மாங்குளம் ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் காலை 8.30 மணி முதல் 4.30 மணி வரையும் நடைபெறவுள்ளதாகவும் இச் செயலமர்வில் குறிப்பிட்ட பாட ஆசிரியர்களினைத் தவறாது கலந்து கொள்ளுமாறு ஜெ.மாலினி ஜெனிற்றன் தெரிவித்துள்ளார். (42)

## குடிநீர்க் கிணறுகளில் மாட்டு எலும்புகள்

வடமராட்சி கிழக்கில் உள்ள குடிநீர்க் கிணறுகளில் மாட்டு எலும்புகள் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்ற னர்.

மீளக்குடியேறிய மக்கள் தமது கிணறுகளை இறைத்துத் துப்புரவு செய்தபோது இந்த மாட்டெலும்புகள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (100)



வண்ணார்பண்ணை வடமேற்கு ஜே-99 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் நடத்திய சர்வதேச மகளிர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாளரும், பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான அ.இரவீந்திரதாசன் மங்கள விளக்கேற்றுவதையும் கலந்துகொண்ட உத்தியோகத்தர்களையும் காணலாம்.

# சிறந்த தபாலகமாக காரைநகர் தெரிவு

(யாழ்.நிருபர்)

காரைநகர் தபாலகம் சிறந்த தபாலகமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த வாரம் காரைநகர் தபாலகத்தில் நடைபெற்ற கோல உடை வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண பிரதி அஞ்சல்மா நாயகம் என்.இரத்தினசிங்கம் உரையாற்றும்போது இவ்வாறு குறிப்பிட்டார்.

காரைநகர் அஞ்சல் அதிபர் எம்.ஜீவநாதன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ். மாவட்டத்தில் உள்ள தபாலகங்கள் மிகச் சிறந்த முறையில் மக்களுக்குச் சேவையை வழங்கி வருகின்றன. மிகவும் சிறப்பாகச் செயற்படும் தபாலகங்களில் காரைநகர் தபாலகமும் குறிப்பிடத்தக்கதாகும்.

இங்குள்ள உத்தியோகத்தர்களும், தபால் ஊழியர்களும் மக்களுக்குச் சிறந்த முறையில் சேவைகளை விரைவாக வழஙகி வருவது பாராட்டுக்குரியது எனவும் குறிப்பிட்டார். காரைநகர் தபாலக ஊழியர்களுக்கு வைபவ ரீதியாக கோல உடைகளும் வழங்கப்படடன. (10)

# ஐஸ்பழம் 20 ரூபா; வியாபாரிகள் கொள்ளை

(குருநகர்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் எடுத்து வரப்படுகின்ற ஐஸ்பழம், ஐஸ்கிறீம், சொக் ஆகியவற்றால் கொழும்பு வர்த்தகர்கள் கொள்ளை இலாபம் ஈட்டி வருவதாக மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஆட்டோக்களில் யாழ். நகர மற்றும் புறநகர்ப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்ற ஐஸ் வகைகளைப் பொதிகளில் பொறிக்கப்பட்ட விலைகளில் இருநதும் கூடுதல் விலைக்கு விற்பனை செய்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப காலங்களில் பொதிகளில் பொறிக்கப்பட்ட விலைகளில் இருந்து 5 ரூபா அதிகமாக விற்பனை செய்யப்பட்ட ஐஸ் வகைகள் இப்பொழுது 10 ரூபா அதிகரித்த விலையில் விற்கப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

10 ரூபா பொறிக்கப்பட்ட ஐஸ் பழமொன்று 20 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதேவேளை உள்ளூர் உறபத்தி 10 ரூபாவுக்கு விற்பனை யாவதும் குறிப்பிடத்தக்கது.(68)

# துணுக்காய் கல்வி வலயத்தில் பெறுபேற்றை உயர்த்த திட்டம்

(துணுக்காய்)

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளிலிருந்து இவ்வருடம் க.பொ.த (உயர் தரம்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அடைவு மட்டத்தினை அதிகரிப்பதற்கான விசேட செயற்திட்டங்களினை துணுக்காய் கல்விப் பணிமனை மேற்கொண்டு வருகின்றது.

இத் திட்டத்தின் ஓர் அங்கமாக விசேட பரீட்சை வினாக்கள் மூன்று வீதம் தயாரிக்கப்பட்டு அடுத்த தவணை ஆரம்பத்தில் பாடசாலைகளில் பரீட்சைகள் நடாத்தப்பட்டு மதிப்பீடுகள் செய்யப்படவுள்ளதுடன் அவற்றிற்கான கலந்துரையாடல்களும் இடம்பெறவுள்ளன.

மேலும் கோட்ட ரீதியாக வகுப்புக்கள் பாட வாரியாக ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன.

இச் செயற்திட்டத்திற்கு முன்னோடியாக இந்து நாகரீக பாடத்திற்குரிய வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இப் பாடத்தின் பகுதி ஒன்றுக்குரிய 500 இற்கும் அதிகமான வினாக்களும், விடைகளும் அடங்கிய கையேடும் தயாரிக்கப்பட்டு துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளுக்கு வழங்கப்பட உள்ளன. (42)

# யாழ். நகரில் கடைக்கொரு விலை

(குருநகர்)

யாழ்.நகர மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இயங்கும் வர்த்தக நிலையங்களில் வியாபாரிகள் பொருட்களின் விலைகளை எழுந்தமானமாகத் தத்தமது எண்ணப்படி நிர்ணயம் செய்து பொருட்களை விற்பனை செய்து வருவதாக பாவனையாளர் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

சகல பொருட்களின் விலைகளும் ஒவ்வொரு கடைகளில் ஒவ்வொரு விலைகளில் விற்பனை செய்யப்படுவதால் பாவனையாளர்கள் சுரண்டப்படுவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர். (68)

# வைமன் வீதியில் வானொலி அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் யாழ். எவ்.எம். வானொலிச் சேவை அலுவலகம் வைமன் வீதியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

யாழ். எவ்.எம். வானொலி பலாலி இராணுவ தலைமை அலுவலகத்திற்கு அருகில் இருந்து தனது சேவையினை வழங்கி வந்தது.

இந்த ஒலிபரப்பின் மூலம் யாழ் மாவட்ட மக்கள் அரச அறிவித்தல்களினை அறிந்து கொண்டது மட்டுமன்றி, யாழ். மாவட்ட விளையாட்டு வர்ணனைகள், திருவிழா நிகழ்ச்சிகளின் வர்ணனை என்பவற்றினை நேரடி அஞ்சல் மூலம் கேட்கக் கூடியதாக இருந்தது.

இச் சேவைகளுக்கு மேலாக பல சேவைகளை யாழ். மாவட்டத்திற்கு வழங்கி வருகின்ற இந்த வானொலிக்கான செயலகம் ஒன்று நல்லூர், வைமன் வீதியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

யாழ். எவ்.எம் சேவையினை மேலும் தெளிவாகக் கேட்கக் கூடியதாகவும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஏனைய சேவைகளினை மிகவும் தெளிவாகக் கேட்பதற்குமாக புத்தூர்ப் பகுதியில் தொலைத் தொடர்புக் கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (42)

# The City Mouse and the Country Mouse



Once a little mouse who lived in the country invited a little Mouse from the city to visit him. When the little City Mouse sat down to dinner he was surprised to find that the Country Mouse had nothing to eat except barley and grain.

"Really," he said, "you do not live well at all; you should see how I live! I have all sorts of fine things to eat every day. You must come to visit me and see how nice it is to live in the city."

The little Country Mouse was glad to do this, and after a while he went to the city to visit his friend.

The very first place that the City Mouse took the Country Mouse to see was the kitchen cupboard of the house where he lived. There, on the lowest shelf, behind some stone jars, stood a big paper bag of brown sugar. The little City Mouse gnawed a hole in the bag and invited his friend to nibble for himself.

The two little mice nibbled and nibbled, and the Country Mouse thought he had never tasted anything so delicious in his life. He was just thinking how lucky the City Mouse was, when suddenly the door opened with a bang, and in came the cook to get some flour.

"Run!" whispered the City Mouse. And they ran as fast as they could to the little hole where they had come in. The little Country Mouse was shaking all over when they got safely away, but the little City Mouse said, "That is nothing; she will soon go away and then we can go back."

After the cook had gone away and shut the door they stole softly back, and this time the City Mouse had something new to show: he took the little Country Mouse into a corner on the top shelf, where a big jar of dried prunes stood open. After much tugging and pulling they got a large dried prune out of the jar on to the shelf and began to nibble at it. This was even better than the brown sugar. The little Country Mouse liked the taste so much that he could hardly nibble fast enough. But all at once, in the midst of their eating, there came a scratching at the door and a sharp, loud MIAOUW!

"What is that?" said the Country Mouse. The City Mouse just whispered, "Sh!" and ran as fast as he could to the hole.



The Country Mouse ran after, you may be sure, as fast as HE could. As soon as they were out of danger the City Mouse said, "That was the old Cat; she is the best mouser in town,—if she once gets you, you are lost."


"This is very terrible," said the little Country Mouse; "let us not go back to the cupboard again."

"No," said the City Mouse, "I will take you to the cellar; there is something especial there."

So the City Mouse took his little friend down the cellar stairs and into a big cupboard where there were many shelves. On the shelves were jars of butter, and cheeses in bags and out of bags. Overhead hung bunches of sausages, and there were spicy apples in barrels standing about. It smelled so good that it went to the little Country Mouse's head. He ran along the shelf and nibbled at a cheese here, and a bit of butter there, until he saw an especially rich, very delicious-smelling piece of cheese on a queer little stand in a corner. He was just on the point of putting his teeth into the cheese when the City Mouse saw him.

"Stop! stop!" cried the City Mouse. "That is a trap!"

The little Country Mouse stopped and said, "What is a trap?"



"That thing is a trap," said the little City Mouse. "The minute you touch the cheese with your teeth something comes down on your head hard, and you're dead."

The little Country Mouse looked at the trap, and he looked at the cheese, and he looked at the little City Mouse. "If you'll excuse me," he said, "I think I will go home. I'd rather have barley and grain to eat and eat it in peace and comfort, than have brown sugar and dried prunes and cheese,—and be frightened to death all the time!"

So the little Country Mouse went back to his home, and there he stayed all the rest of his life.

---

The ball is on the floor. It is a red ball. It is a rubber ball. The baby looks at the ball. The cat looks at the ball. The cat is black. The cat walks over to the ball. The cat hits the ball with its paw. The ball rolls on the floor. The baby smiles.




---



The dog barks. It likes to bark. The bird sings. It likes to sing. The dog and bird are noisy. The cat meows. It meows when it is hungry. It meows when it is angry. The fish says nothing. The turtle says nothing. The mouse says nothing. The lizard says nothing. They are quiet.


---



She takes a cookie out of the package. She drops the cookie. It falls on the floor. The cookie breaks. It breaks into four pieces. Four pieces are on the floor. She picks up the pieces. She takes them to the kitchen. She throws them into the trashcan. She takes another cookie out of the package.


---

© Original Artist
Reproduction rights obtainable from
www.CartoonStock.com




She picks up the book. It is her favorite book. It has a red cover. It has 52 pages. It has many pictures. It has pictures of many animals. She likes animals. She has two cats. She likes her cats. Their names are Fluffy and Muffy. She shows them the pictures in the book.

# The 25 'must have' words every child should know by the age of two



Twenty five words that every toddler should use have been listed by scientists. The words and phrases, which cover toys, food, animals and, of course, include 'mummy' and 'daddy' and 'bye bye' are designed to detect youngsters who could struggle with words for years to come.

Being slow to talk can also be a sign of deeper problems from deafness to autism. The 25 'must have' words are part of a much larger list of 310 words that should be in a toddler's vocabulary and designed to be ticked off in 10 minutes by parents.

The average child will know 150 of the words in the Language Development Survey but scores of 75 to 225 are normal.

Alarm bells should start ringing if a toddler uses just 50 of the words or less, the American Association for the Advancement of Science's annual conference heard.

The 25 words listed here are among the most common and the first acquired when learning to speak.

## WHAT'S ON THE LIST?

Mummy, Daddy, baby, milk, juice, hello, ball, yes, no, dog, cat, nose, eye, banana, biscuit, car, hot, thank you, bath, shoe, hat, book, all gone, more and bye bye.

Professor Leslie Rescorla, who designed both versions of the test, said: 'If children don't use most of these words by 24 months, they may be late talkers.'

Many late-talkers are simply late bloomers, so the professor says that if a child is otherwise developing normally, parents shouldn't panic.

But if the child is still struggling for words by two and a half, they should consider help such as speech therapy, and certainly not put this off past the age of three.

The Vancouver conference heard that up to 20 per cent of all two-year-olds are behind their peers in speech. Of these, half to a three-quarters are likely to be late-bloomers, who will more or less catch up over time.

But in other cases, the child will have lasting problems with speech.

A small vocabulary at the age of two can also be a sign of other problems, from deafness to autism and dyslexia.

Even those who do catch up may always be slightly behind.

Professor Rescorla, of Bryn Mawr College in Pennsylvania, tracked the fortunes of 78 two-year-olds for 15 years.

Half had been slow to start talking but didn't have any other problems. By the time they reached the age of 17, their vocabulary was classed as at least as good as average - but still wasn't as good as those who were better talkers as toddlers.

The late-talkers fared particularly poorly in tasks that involved 'verbal memory', or listening to words, sentences, or numbers and being able to repeat them.

The conference also heard that TV and videos, also known as 'overheard speech', are no substitute for parental attention.

Real interaction with the child is particularly crucial when the child is trying to 'crack the code' of speech.

*(Daily Mail)*

## How to Use Capital Letters

1. ஒரு வாக்கியத்தின் ஆரம்பத்தின் முதல் எழுத்து எப்பொழுதும் கெப்பிட்டல் எழுத்தாகவே இருக்கவேண்டும். (Capital letters are always used at the beginning of a sentence.)

**உதாரணம்:**

The car is running
I am looking for a job.
He doesn't understand.
Do you speak in English?
Where are you going?

2. கிழமை, மாதம், பெயர், ஊர், நாடு, மொழி, மதம், போன்றவற்றை எழுதும் பொழுது அதன் முதல் எழுத்தை கட்டாயம் கெப்பிட்டல் எழுத்திலேயே எழுத வேண்டும். இவை வாக்கியத்தின் மத்தியில் வந்தாலும் அப்படித்தான்.

i) **கிழமைகள்:** Sunday, Monday, Tuesday, Wednesday, Thursday, Friday, Saturday
ii) **மாதங்கள்:** January, February, March, April, May, June, July, August, September, October, November, December.
iii) **பெயர்கள்:** Ellalan, Iravanan, Sarmilan, Kavitha, Thamilovia, Tamilnenjan, Tamilselvan
iv) **ஊர்கள், நகரங்கள்:** Jaffna, Chennai, Point Pedro, Betticola, Tricomalee, Madurai, Kilinochchi
v) **நாடுகள்:** Sri Lanka, India, America, British, France, Netherland, Norway, Japan
vi) **மொழிகள்:** Tamil, English, Chinese, Latin, French, Hindi
vii) **மதங்கள்:** Hindu, Islam, Christian, Buddhism – God, The Prophet Mohammed, Jesus

3. ஆங்கிலத்தில் 'நான்' என்று குறிப்பதற்கு எப்போழுதுமே கெப்பிட்டல் 'I' யை மட்டுமே பயன்படுத்த வேண்டும். (சிறிய 'i' பயன்படுத்துவதில்லை)

4. 'சுருக்கப் பயன்பாடுகள்' அதாவது ஒரு முழுச் சொல் அல்லது வாக்கியத்திற்குப் பதிலாக அதன் முதல் எழுத்துக்களை மட்டும் சுருக்கமாக பயன்படுத்தல். இவற்றை ஆங்கிலத்தில "Abbreviation" என்றழைப்பர்.

**உதாரணம்:** தொழில் தகமைகளின் சுருக்கம்: MBBS, LLB
சில நாடுகளின் பெயர்களுக்கான சுருக்கம்: USA, UK,UAE
சிலரது பெயர்களின் சுருக்கம்: MGR, MRR

அதேவேளை ஒரு வாக்கியத்தின் ஒவ்வொரு சொற்களின் முதலெழுத்தையும் கெப்பிட்டல் எழுத்தாக எழுதும் வழக்கம் சிலரிடம் காணப்படுகின்றன. இது இலக்கணப் பிழையானது. (தலைப்புகளை வேண்டுமானால் அப்படி எழுதலாம்.)

ஒரு சொல்லை, ஒரு வாக்கியத்தை, ஏன் ஒரு முழு ஆக்கத்தையே வேண்டுமானாலும் கெப்பிட்டல் எழுத்துக்களிலேயே (CAPITAL LETTERS) எழுதலாம். அது உங்கள் விருப்பம்.

ஆனால் ஆங்கில சிற்றெழுத்துக்களில (Simple Letters) எழுதுவதானால், ஆங்கில மொழிக்கே உரிய சிறப்பியல்புகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியது மிக முக்கியம்.

## Main source of happiness around the globe? Partners!

Nearly two-thirds of married couples and people with a significant other say their partner is the most important source of happiness in their lives, according to a new global poll released on Valentine's Day. And nearly half of all singles yearn above all else to find a sweetheart, with about 45 percent saying finding a partner would bring them the greatest happiness.

"What strikes us when we look at the data is that you have this majority of global citizens who are really looking at home for happiness," said Keren Gottfried, research manager at Ipsos Global Public Affairs, which conducted the survey in 24 countries.

South Africa reported the highest levels of domestic bliss, with 82 percent of settled South Africans saying nothing could make them happier than their partner.

Japanese and South Korean couples were at the other end of the scale. Nearly half said they would hesitate to say their partner was the single best thing in their lives, although they conceded that he or she was the source of at least some of their happiness.


For many couples, about 38 percent globally, the best thing about their relationship was the sex, according to the poll. This was especially true for Brazilians. Nearly 60 percent said that nothing could make them happier than having a good sex life.

But the Japanese, South Koreans and Britons tended to value other qualities in their partner. Only 15 percent of Japanese ranked their sex lives above all else as a source of contentment.

Single people in the same three countries also reported a resilient independence, with only a third or less of single Japanese, South Koreans and the Britons saying finding someone to settle down with was the most important step in their search for happiness.

Single Indonesians were the most preoccupied with finding a mate. Nearly 70 percent said nothing could make them happier, followed by 57 percent of Turks and 56 percent of Mexicans.

But even among couples who lived together, the poll found signs of restlessness with slightly more than a quarter of people in such relationships saying that finding someone else to be with would make them happiest of all.



Ipsos interviewed 21,248 in an online survey in Argentina, Australia, Belgium, Brazil, Canada, China, France, Germany, Great Britain, Hungary, India, Indonesia, Italy, Japan, Mexico, Poland, Russia, Saudi Arabia, South Africa, South Korea, Spain, Sweden, Turkey and the United States.

Fifty-nine percent of the people surveyed said they were married or living with their partner, while 41 percent said they were not.

*(Reuters)*

# வாசிப்பை மேம்படுத்த "முப்பரிமாண நூலகம்"

வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் நோக்குடன், உருக்கள், ஆவணங்கள், தகவல்கள் ஆகிய மூன்று மூலகங்களை உள்ளடக்கிய 'முப்பரிமாண நூலகம்' ஒன்று சுன்னாகம் பொது நூலகத்தில் செயற்பட்டுவருகின்றது.

நூலக விழிப்புணர்வு நிறுவகத்தினராலேயே இந்த முப்பரிமாண நூலகம் உருவாக்கப்பட்டதாக சுன்னாகம் பொது நூலக நூலகர் க.சௌந்தரராஜன் கூறினார்.


முப்பரிமாண நூலகமானது ஒன்றுக்கொன்று தொடர்புடைய படிநிலைத்தன்மை வாய்ந்த மூன்று கூறுகளைக் கொண்டது. இந்த மூன்று கூறுகளும் 'பிரமிட்' வடிவக் கட்டமைப்பில் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

முதலாவது பரிமாணம்(உருவும் அதன் பொருளும்), உருக்கள் சார்ந்தவையாகவும், இரண்டாவது பரிமாணம் (நூலும் அதன் வகைகளும்), உருக்கள் சார்ந்து வெளியிடப்படும் எழுத்து வடிவம் சார்ந்தவையாகவும், மூன்றாவது பரிமாணம் (தகவலும் அதன் தரமும்) உருக்களிலிருந்து நேரடியாக உருவாக்கப்படுவதாகவோ அல்லது நூல்களிலிருந்து முக்கிய அம்சங்களை சாரமாக பிரித்தெடுப்பதாகவோ காணப்படும் என்றார்.

எந்தவொரு நூலகமும் இத்தகையை காட்சிப்படுத்தலை பின்பற்ற முடியும் என்றும், வாசகரது கவனத்தை ஈர்க்கக்கூடிய ஒரு சிறிய இடம் இத்தகைய காட்சிப்படுத்தலுக்கு போதுமானது என்றும் நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் தலைவர் அ.ஸ்ரீகாந்தலட்சுமி குறிப்பிட்டுள்ளார்.

சுயகற்றல் செயற்பாட்டை இலக்கு வைத்து தற்போதுள்ள நூலக முறைமைகளூடாக சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் வாசிப்புப் பழக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடன் நூலக விழிப்புணர்வு நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட பல தரப்பட்ட செயற்திட்டங்களில் இந்த முப்பரிமாண நூலகமும் ஒன்று என சுன்னாகம் பொது நூலகத்தின் நூலகர் க.சௌந்தரராஜன் மேலும் குறிப்பிட்டார். (சி)

## வெயிலுகந்த விநாயகருக்கு தேர்



நாயன்மார்க்கட்டு-வெயிலுகந்த விநாயகப் பெருமானுக்கு கடந்த புதன்கிழமை நடை பெற்ற தேர்த் திருவிழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இவ் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த மார்ச் 27ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நேற்று முன்தினம் புதன்கிழமை தேர்த் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. காலை 9.00 மணியளவில் வசந்தமண்டப பூசையினைத் தொடர்ந்து காலை 10.00 மணிக்குத் தேர் வீதியுலா வந்தது.

இந்த தேர்த் திருவிழாவில் ஏராளமான பக்தர்கள், காவடி, பாற்செம்பு, அங்கப் பிரதட்சணம் என தமது நேர்த்திக் கடன்களை நிறுவேற்றினர். மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழா நடைபெற்றது. (சி)

## கோப்பாய் வீரமாகாளி ஆலயத்தில் நூற்றுக்கணக்கானோர் தீ மிதிப்பு



(சாந்)

மூன்றாம் பங்குனித்திங்களை முன்னிட்டு கோப்பாய் தெற்கு, தென்கோவையூர் வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் கடந்த திங்கட்கிழமை நூற்றுக்கணக்கான பக்தர்கள் தீ மிதித்து தமது நேர்த்திக் கடன்களை நிறை வேற்றினர்.

காலை 9.00 மணிக்கு பொங்கல் பூசை, வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து மாலை 5.00 மணியளவில் அம்பாள் துணைநிற்க தீ மிதித்தல் நடைபெற்று விஷேட அபிசேகமும் நடைபெற்றது.

ஆறாவது முறையாகவும் நடைபெறும் இந்த தீ மிதித்தல் வைபவத்தில் குழந்தைகள், பெண்கள் உட்பட பலர் தீ மிதித்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.

பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (சி)

# பரவைக்குளம் சிவனுக்கு எண்ணெய்க் காப்பு

(கிருசானந்)

திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாட்சி அம்பிகா சமேத ஸ்ரீ காயாரோகண சுவாமி கோயில் என அழைக்கப்படும் பரவைக்குளம் சிவன் கோயிலில் எண்ணெய்காப்பு சாத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை நடைபெற்றது.

எண்ணெய்க்காப்பினைத் தொடர்ந்து நேற்றுக் காலை 8.27 மணி தொடக்கம் 10.27 வரை ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

மகா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து ஆலயத்தின் மண்டலாபிஷேகம் 15 நாட்கள் நடைபெறவுள்ளன. (சி)




## இளநீரின் மருத்துவ குணங்கள்

- தீ சுட்ட புண், நீரிழிவு, வாந்தி முதலியவற்றுக்கு உபயோகிக்கலாம்.
- அதிகமான உடல் தளர்ச்சி, கொலரா, பேதி நோய் உள்ளவர்களுக்கு இளநீரை ஆகாரமாக வழங்கச் சிறந்தது.
- செயற்கை குளுக்கோஸ் கிடைக்காத இடங்களில் உடனடி நிவாரணியாக இளநீர் செயற்படுகிறது.
- அதிகமான பொட்டாசியச் சத்துள்ளது.
- இளநீரை வாரத்தில் மூன்று நாட்கள் தொடர்ந்து கர்ப்பிணிகளுக்கு கொடுத்து வந்தால் குழந்தை நல்ல நிறத்துடன் பிறக்கும்
- உணவு ஜீரணமாவதற்கு குடிக்கலாம்.

——— பகீ

# மெய்தான் பாருங்கோ...

## மனிதர்கள்...?



நான் இதால வாற நேரங்களில எங்கட ஊர்ப்புதினங்களையும், பிரச்சினைகளையும் பற்றித்தான் கூடுதலாகக் கதைக்கிறனான். அரசியலைப் பற்றி அலட்டக்கூடாது... எண்டு கொஞ்சம் 'அலேட்டாக' இருந்தாலும், சில பேருடைய செய்கை காரியங்கள்... பேச்சு நடப்புகளைப் பாக்க என்னையறியாமலே என்ர வாயைத் திறக்க வேண்டிக் கிடக்குது பாருங்கோ!

"வீணாப் பொல்லைக்குடுத்து அடி வேண்டப்போறியள்! பேசாமல் உங்கட பாடும் வேலையுமா இருக்க வேண்டியதுதானே..." எண்டு என்ர மனிசி அடிக்கடி புறு புறுக்கிறவள் பாருங்கோ! நம்பிக்கெட்ட தமிழிச்சியள்ள அவளும் ஒருத்தி எண்டதால அவளின்ர கோபம் நியாயமான தெண்டது எனக்குப்புரியாத தொன்றல்ல.

உளத்தாக்கங்கள் எல்லோருக்கும் இருக்குதெண்டது உண்மைதான். ஆனா, அதை வெளிக்காட்டாம, விரும்பினபடி நடிச்சு வாழ எத்தனை பேரால முடியுதெண்டதுதான் இப்ப கேள்வி. நான் ஏன் இதைச் சொல்ல வாறன் எண்டால், வெளிநாட்டு வசதியுள்ளவைக்கு ஏதோ ஒரு விதத்தில கையில பணம் புரளுது. ஆனா, நாட்கூலியா அண்டுழைச்சு அண்டு தின்னுற ஆட்கள்... குடும்பத்தலைவனை இழந்த குடும்பங்கள்... இப்பிடி எத்தனை பேர் இன்னமும் அதற்கான அனுசரணை உதவியள் இல்லாமல் உளத்தாக்கத்தோட வாழுகினம் எண்டது எத்தனை பேருக்குத் தெரிஞ்சிருக்குது?

சரி! நடந்தது நடந்து போச்சுது. இனி நல்லதை நினைச்சு நல்ல வழியில நடப்பம்... எண்டு ஒருத் தர் ரண்டுபேர் மட்டும் நினைச்சால் போதுமே? போரால பாதிக்கப்பட்ட எல்லாருமல்லோ அதை நினைச்சு நடக்க வேணும். சமுதாயத்தில எல்லா மனிசரும் ஒரேமாதிரியில்லை எண்டதும் எனக்குத் தெரியும்.

அட! உதவியள் செய்யாட்டிலும் அடுத்தவனுக்கு ஆக்கினையள்... அரியண்டங்களைக் குடுக்காமல் அவரவர் ஒதுங்கிப் போக வேண்டியதுதானே!

வன்னியில நடந்து முடிஞ்ச போர் எண்டது உயிர்தப்பிப் பிழைச்ச ஒவ்வொருத்தருடைய மன நிலையளையும், முன்னைய அவர்களுக்கான வழியளையும் நல்லாத்தான் மாற்றியமைச்சுப் போட்டுது பாருங்கோ!

'போருக்கு முன்' - 'போருக்குப்பின்'... எண்டு நாங்கள் வாழ்ந்த காலத்தை இப்ப ரண்டாப் பிரிச்சுப் பாக்க வேண்டிக் கிடக்குது.

போருக்கு முன்னைய காலங்களில சனத்திட்ட இருந்த துடிப்பும், விவேகமும் மனிதத்தன்மையும் மற்றவைக்கு உதவி செய்யிற மனப்பாங்கும் இப்பபோருக்குப் பின்னைய நாட்களில பெரும்பாலான ஆட்களில காணக்கிடைக்காதாம் பாருங்கோ.

அவனவன் தவிச்சமுயல் அடிக்கிறதிலையும், தங்கள் குடும்பம் மட்டும் முன்னேறினால் போதுமெண்ட மனப்பான்மையிலும் வாழுறதைத்தான் பாக்கக்கூடியதாக இருக்குது.

நேர்மையாக் கஷ்டப்பட்டு உழைச்சதெல்லாம் சண்டையோடை போயிட்டுது. இனி அப்பிடி எங்களால உழைச்சத் தேட ஏலாது... எண்ட எண்ணம்கொண்டு, சிலபேர் அடுத்தவன்ர பொருள்பண்டங்களை அம்பாளிச்சுச் சீவியம் நடத்துகினம்.

வேறுசில ஆட்கள்... இந்தப் போரால பட்ட கஷ்டங்கள்... பசிபட்டினி துயரங்கள்... சொந்த பந்தங்களின்ர இழப்புகள்... உடம்பு அங்கவீனமாப்போன நிலையால " இந்தக்காயமே பொய்யடா எல்லாம் காற்றடைத்த பையடா... "எண்ட ஞான உணர்வோட வாழ்க கையில பட்டும் படாமலும் ஒட்டினபடி வாழ்ந்து கொண்டிருக்கினம்.

இப்ப இதில நான் முதலாவதாச் சொன்ன ஆட்களாலதான் பிரச்சினையாக கிடக்குது பாருங்கோ!

சங்கக்கடையில ரேசன் சாமான் குடுக்கேக்கை அதைப் போய் எடுக்காமல் வீடுவீடாத் தெரிஞ்ச ஆட்களிட்டை இரவல் அரிசி வாங்கி சோறுகாய்ச்சித்திண்டு போட்டு, பிறகு வாங்கின அரிசியைக் குடுக்காமல் மறந்து போயிட்டம்... எண்டு சொல்லித்திரியுற ஆட்கள்...

பக்கத்து ஊரால வரரேக்கை சந்திக்கடையில அரைறாத்தல் பாணை வாங்கிக்கொண்டு வராமல், வீட்டுக்குள்ளவந்து நிண்டுகொண்டு "எனக்குப்பசிக்குது! பாண் வேண்டித்தாங்கோ..." எண்டு வாய் கூசாமல் கேட்கிற உறவுமுறையள்!

ஊருக்குள்ள மீள்குடியேற்றம் செய்யப்படாத இடங்களுக்குப் போய், அங்கை கிடக்கிற சாமான் சங்கட்டுக்களைக் களவெடுத்துக்கொண்டு வந்து, வித்துக்காசாக்கி, அதை முதல்பணமாப் போட்டு வியாபாரம் செய்து பிழைக்கிற ஆட்கள்...

இப்பிடி எத்தனையோ ரகங்கள்... தோலிருக்கச் சுளையை விழுங்கிக்கொண்டு சுகபோக சீவியம் நடத்த முனையினம் கண்டியளே!

பட்டுத்தெளிஞ்ச ஞானமும் ; கெட்டும் அழியாச் சுயநலமுமாக ஒவ்வொருவருடைய வாழ்க்கை போருக்குப்பின்னைய காலங்களில ஏதோ போய்க்கொண்டிருக்குது. இந்தப் போக்குக்குள்ள வல்லான் வலிமைபெறுகிறான் ; வலிசுமந்தோன் நலிவடைகிறான் இதுதான் இப்போதைய யதார்த்தமாக்கிடக்குது பாருங்கோ!

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கனிமொழி மேடையில்?



(சென்னை)


அலைக்கற்றை ஒதுக்கீடு ஊழல் வழக்கில் சிறைவாசம் கண்டு, பிணையில் வெளிவந்துள்ள கனிமொழி, எதிர்வரும் 15ஆம் திகதி மின் கட்டண உயர்வைக் கண்டித்து, சிதம்பரத்தில் நடக்கக்கவிருக்கும் தி.மு.க.வின் கண்டன பொதுக் கூட்டத்தில் பேச இருக்கிறார் என்ற தகவல் வெளியில் கசிந் துள்ளது. நீண்ட இடைவெளிக்குப்பின், அரசியல் ரீதியில் கனிமொழி கலந்து கொள்ளும் முதல் பொதுக் கூட்டம் என்பதால், தி.மு.க. பொருளாளரும், அண்ணனுமாகிய ஸ்டாலின் ஆதரவாளர்கள் மத்தியில் முணு முணுப்பு கிளம்பியுள்ளது.

நடக்கவிருக்கும் ஆர்ப்பாட்டத்தில் யார், யார்? எந்தெந்த மாவட்டங்களில் பங்கேற்றுப் பேசுவர் என்ற பட்டியலும் கட்சியில் தயாராகி வருகிறது. அதன்படி, சிதம்பரத்தில் நடக்கும் பொதுக்கூட்டத்தில் கனிமொழி பேசுகிறார் என்றும், அவரது பெயர், சிறப்பு பேச்சாளர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளது என்ற தகவல் திடீரெனக் கசிந்துள்ளது. அலைக்கற்றை ஒதுக்கீடு ஊழல் வழக்கு தொடர்பாக டில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டு, பிணையில் வெளிவந்த கனிமொழிக்கு, சென்னை விமான நிலையத்தில் தி.மு.க.வினர் சிறப்பான வரவேற்பு அளித்தனர். அந்த வரவேற்பு நிகழ்ச்சியை, தி.மு.க. பொருளாளர் ஸ்டாலின் ஆதரவாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தநிலையில் கனிமொழிக்கு கட்சியில் முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது என ஸ்டாலின் ஆதரவாளர்கள் போர்க் கொடி தூக்கியுள்ளனர். தி.மு.க. பொதுக்குழுவில் கனிமொழிக்கு பதவி வழங்க விடாமலும் ஸ்டாலின் ஆதரவாளர்கள் பார்த்துக் கொண்டனர். கனிமொழிக்கு கட்சியில் துணை பொதுச் செயலர் பதவி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்து, தி.மு.க. தலைவர் கருணாநிதியிடம் ராஜாத்தி வலியுறுத்தி வருகிறார். முன்னாள் அமைச்சர் சற்குண பாண்டியன் தனது துணைப் பொதுச் செயலர் பதவியை, கனிமொழிக்குத் தாரை வார்ப்பதற்காகவே ராஜினாமா செய்தார். பிணையில் கனிமொழி வெளியே வந்தபின், பொங்கல் பண்டிகையையொட்டி, சென்னை சி.ஐ.டி. கொலனியில் ஏழைகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சியில் மட்டும் அவர் பங்கேற்றார். மேலும், தி.மு.க. பொதுக்குழுவிலும் அவர கலந்து கொண்டார். ஆனால், கட்சி தொடர்பான பொதுக் கூட்டங்களில் பங்கேற்காமல் இருந்தார்:


# இராணுவத்திற்கும் அரசுக்குமிடையில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி?



இரண்டு இராணுவப் படைகள் கடந்த ஜனவரி மாதத்தில் டில்லியை நோக்கி நகர்த்தப்பட்டதாக தகவல் வெளியாயின. இது குறித்து அரசிற்கு எந்த தகவலும தரப்பட வில்லை எனவும் அத்தகவலில் தெரிவித்திருந்தன. இந் நிலையில் பிரதமர் மன்மோகன் சிங்கும் இத்தகவல்கள் குறித்து விளக்கம் அளித்திருந்தார். அதில் இந்த இராணுவக் குவிப்பு ஒரு எச்சரிக்கை நடவடிக்கை என்றும் இதற்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவித்திருந்தார். மேலும் இது போன்று இராணுவ படைக குவிப்பு நடத்தப்படுவது வாடிக்கையான விடயம் என தெளிவாக விளக்கம் கொடுத்திருந்தார். இந்த விடயம்பற்றி செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், இது போன்று இராணுவ தலைமைக்கு எதிராக கதை அளப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை மன்னிக்கக் கூடாது எனவும் இவ்வாறு அரசிற்கும் இராணுவத்திற்குமிடையே குழப்பத்தை ஏற்படுத்த முயலுபவர்கள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் வி.கே. சிங் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோணியும் இத்தகவல்கள் அடிப்படை, ஆதாரமற்றது என்று தெரிவித்திருந்தார்.




# தனக்கு எதிரி தனது கட்சிக்குள்ளேயே என்கிறார் கர்நாடக முதலமைச்சர்




அரசியலில் 'இருந்து தன்னை ஒழித்துக்கட்ட பா.ஜனதா தலைவர்களே சதித்திட்டம் தீட்டி வருகிறார்கள் என்று எடியூரப்பா பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார். இதுகுறித்து தெரிவித்த கர்நாடக மாநில முன்னாள் முதல அமைச்சர் எடியூரப்பா, என்னை அரசியலில் இருந்து ஒழித்துக் கட்ட சதித்திட்டம் தீட்டப்படுகிறது. அரசியலில் எடியூரப்பா புகழ்பெற்று விளங்குகிறார். நமக்கு அரசியல் எதிர்காலம் இல்லை என்பதனை தெரிந்து கொண்ட எங்கள் கட்சியின் சில தலைவர்கள் மற்றும் எதிர்க்கட்சி தலைவர்கள் எப்போதும் எடியூரப்பா எடியூரப்பா என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். எடியூரப்பாவை மட்டம் தட்டுவது எப்படி என்பது குறித்து தூக்கத்தில் கூட யோசிக்கிறார்கள். சி.இ.சி. அறிக்கையில் எனது பெயர் இல்லை என்றாலும் அதில் என்னைச் சேர்க்க எங்கள் கட்சியின் சில தலைவர்களே முயற்சி செய்துள்ளனர். ஒட்டுமொத்தமாக எதிர்க்கட்சிகளை விட எங்கள் கட்சியினரின் சதித்திட்டமே அதிகமாக உள்ளது. யார் இந்த சதித்திட்டம் செய்கிறார்கள் என்பதனை பகிரங்கமாக வெளியிட மாட்டேன் என்றார்.

# தோல்விக்குப் பின்னர் ஆய்வு செய்தார் ராகுல்

(புதுடில்லி)

உத்தரப் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி அடைந்த தோல்வி குறித்து கட்சியின் அனைத்து நிலைத் தொண்டர்கள், நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்களுடன் காங்கிரஸ் பொதுச் செயலர ராகுல் காந்தி நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினார்.

டில்லி காங்கிரஸ் தலைமையகத்தில் நடத்தாது, காங்கிரஸ் கட்சிக்காக ஒதுக்கப்பட்ட அரசு மாளிகையில் இந்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.



உத்தரப் பிரதேச மாநில சட்டப் பேரவை தேர்தலில் மொத்தம் உள்ள 403 தொகுதிகளில் 28 இடங்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. கட்சிக்காக அயராது உழைத்தபோதும் வெற்றிபெற முடியாமல் போனதற்குக் கட்சியின் அமைப்பு பலவீனமாக இருந்ததே காரணம் என்று ஆய்வுக கூட்டத்துக்கு வந்தவர்களிடம் தெரிவித்தார் ராகுல் காந்தி. இதேவேளை அடிமட்ட அளவில் காங்கிரஸ் பலவீனமாக இருந்தது, மேல் மட்டத் தலைவர்கள் பிரசாரத்தின்போது நடத்திய போட்டி அரசியல், உத்தரப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களுக்கும் மாநிலக் குழு நிர்வாகிகளுக்கும் இடையே ஒத்துழைப்பு இல்லாதது போன்றவை தோல்விக்கான முக்கிய காரணங்கள் என தோல்வி அடைந்த வேட்பாளர்கள் பட்டியலிட்டதாகத் தெரிகிறது. இதில் உத்தரப் பிரதேச தேர்தலுக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த மூத்த தலைவர், தேர்தலில் போட்டியிட ஆசனங்களை ஒதுக்கிய பணியை மேற்பார்வையிட்ட நியமிக்கப்பட்டவர் ஆகிய இருவரும் பங்கேற்க வில்லையாம்.

# சபரிமலை ஐயப்பன் அதிருப்தியிலாம் கோவில் நிர்வாக அதிகாரி இடைநிறுத்தம்



(சபரிமலை)

சபரிமலை ஐயப்பன் கோவில் சன்னதி சாஸ்திர முறைப்படி அமைக்கப்படவில்லை. பழங்காலத்தில் இருந்த அளவு பூஜைப் பொருட்களே கோவில் வளர்ச்சி அடைந்த பிறகும் பயன்படுத்தப் படுகின்றன. இதனால் தெய்வம் அதிருப்தியில் உள்ளதாக தேவ பிரசன்னம் பார்த்த ஜோதிடர்கள் தெரிவித்துள்ளனர்.


கேரளா பத்தனம்திட்டா மாவட்டம் சபரிமலை ஐய்யப்பன் கோவிலில் அன்னதான மண்டபம் அமைப்பது குறித்து தேவபிரசன்னம் மற்றும் இராசி பொருத்தம் பார்க்கும் நிகழ்ச்சி கோவிலின் சன்னதி முன் உள்ள மண்டபத்தில் நடந்தது. கோவில் தந்திரி கண்டரரு மகேஸ்வரரு முன்னிலையில் கடுப்பசேரி பத்மநாப சர்மா தலைமையில் ஜோதிடர்கள் தேவபிரசன்னம் மற்றும் இராசி பொருத்தம் கணித்தனர். அதில் தெரியவந்ததாக ஜோதிடர்கள் தெரிவித்தாவது, கோவிலின் சன்னதி சாஸ்திர முறைப்படி அமைக்கப்படவில்லை. உற்சவ மூர்த்தி சிலையில் சில குறைபாடுகள் இருந்துள்ளன. புதிய மேல்சாந்தி பொறுப்பேற்ற பின் அதை தன் செலவில் சரிசெய்துள்ளார். இருப்பினும் குறைபாடுகள் முழுமையாக சரி செய்யப்படவில்லை. அன்னதான மண்டபம் அமைப்பதற்காக தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தில் சிறிய மாற்றங்கள் செய்ய வேண்டும். மண்டபம் அமைப்பதற்கு முன் தெய்வத்தின் அதிருப்தியை களைய தேவையான பரிகாரங்களை மேற்கொண்ட பிறகே பணிகளை ஆரம்பிக்க வேண்டும்.

ஐயப்பன் கோவில் அருகேயுள்ள மாளிகைப்புறத்தம்மன் கோவிலில் ஆரம்பித்த பணிகள் நிறைவடையாமல் உள்ளன. இதுவும் அம்மனை அதிருப்திக்கு ஆளாக்கியுள்ளது. இராசி பொருத்தம் பார்த்ததில் ஐந்து இராசிகள் தெய்வத்திற்கு அனுகூலமாகவும் ஒரு இராசி மட்டும் பாதகமாக வந்ததால் பெரிய பிரச்னைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இவ்வாறு ஜோதிடர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை கேரளாவில் கோவில்களில் தேவ பிரசன்னம் நடத்த வேண்டுமானால் கோவில் தந்திரியின் அனுமதிக் கடிதத்துடன் கோவில் செயல் அலுவலரின் பரிந்துரையுடன் சம்பந்தப்பட்ட கோவில் ஆணையாளருக்கு விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டும் என்பது தான் சட்டம். ஆனால் அதை மீறி சபரிமலை ஐயப்பன் கோவிலில் தேவ பிரசன்னம் நடத்தப்பட்டது. இதனால் சபரிமலை கோவில் நிர்வாக அதிகாரி எம்.ராஜன் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இந்தியச் செய்திகள்

# அம்மாவிற்கு இராசியான எண் - 7



தமிழக அரசின் தொலைநோக்குத் திட்டம் - 2023 சமீபத்தில் வெளியிடப் பட்டது. 2023 தமிழகம் எப்படியிருக்கும்? எந்தெந்த துறைகளில் என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று இதில் சொல்லப் பட்டுள்ளன. மத்திய அரசிற்கு இந்த தொலைநோக்குத் திட்டம் வழங்கப் பட்டுள்ளது. இதைப் பெற்றுக்கொண்ட அனைவரும் கேட்ட ஒரே கேள்வி, எதற்கு, 2023 வருடம் என்று போட்டிருக்கின்றனர் என்பதுதானாம். அதன் பின்னர் நடந்த இரகசிய விசாரணையில், ஜெயலலிதாவின் ராசியான எண் 2023 இதைக் கூட்டினால் கிடைக்கும் எண் 7. இதுதான் அம்மாவின் ராசி எண் என்கின்றனர் அ.தி.மு.க.வினர். சட்டசபை தேர்தல் நடக்கும் போது, வேட்பாளர் பட்டியலில் உள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, வெளியான திகதி என அனைத்திலுமே 7ஆம் எண்தான். எனவேதான், 2023 என்று தொலைநோக்குத் திட்டத்திலும் போடப்பட்டுள்ளது என்று சொல்லப்படுகிறது. முன்பு, 9ஆம் எண் இராசியாக இருந்ததே... அது என்னாயிற்று என்கின்றனர் டில்லி அரசியல்வாதிகள்.

# சிரியாவிலிருந்து தப்பி ஓடும் மக்கள்




சிரியாவில் இருந்து தப்பி ஓடும் பொதுமக்களின் எண்ணிக்கை நேற்றுமுன்தினம் மட்டும் மிகவும் வேகமாக அதிகரித்துள்ளதாக தெரியவருகின்றது. துருக்கியின் எல்லை நகரங்களில் ஒன்றான ரெய்கன்லியில் இருந்து வரும் தகவலின்படி, சுமார் 1000 அகதிகள் துருக்கியை சென்றடைந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இது கடந்த மாதங்களை விட மிக அதிகமாகும். இதுவரை 24,000இற்கும் அதிகமான மக்கள் துருக்கியில் தஞ்சமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அமைதி உடன்படிக்கை ஒன்றை அமுல்படுத்த விளையும் நிலையில், ஐ.நா- அரபு லீக்கின் சிரியாவுக்கான தூதுவரான கோபி அனான் சிரிய அரசாங்கத்தின் முக்கிய நட்பு நாடான ஈரானுக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# பிரான்ஸ் அனுமின் நிலையத்தில் திடீர் தீ



பிரான்ஸ் நாட்டில் செயல்பட்டு வரும் அணு மின் நிலையம் ஒன்றில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

பிரான்சில் டையிப்பி நகரில் அணு மின் நிலையம் ஒன்று அமைந்துள்ளது. இந்த அணு மின் நிலையத்தில் உள்ள இரண்டு உற்பத்தி பிரிவுகளில் திடீரென தீ விபத்து ஏறபட்டது. தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

மேலும் இந்த விபத்தால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும், சுற்றுச்சூழலில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் அணு மின் நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பிரான்சில் மொத்தம் 58க்கும் மேற்பட்ட அணு மின் நிலையங்கள் செயற்பட்டு வருகிறது. உலகில் அணு மின் நிலையம் செயற்படுத்தும் நாடுகளின் வரிசையில் பிரான்ஸ் முன்னிலை வகிக்கிறது. பிரான்ஸ் தன்னுடைய மின் தேவையில் 75 சதவிகிதம் வரையில் அணு மின் நிலையத்தையே நம்பி உள்ளமை குறிப்பிடத்தக்கது.


# ஐஸ்கிரீமின் விலை அதிகரிக்கும்?



சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை மக்களால் விரும்பி உண்ணப்படும் ஐஸ்கிரீமின் விலை அதிகரித்துள்ளது. உலகில் மெக்சிகோ, மடகாஸ்கர் மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் வாழும் மக்கள் வனிலா வகை ஐஸ்கிரீமையே விரும்பி உண்ணுகின்றனர். இந்த வகை ஐஸ்கிரீம்கள் தயாரிப்பதற்கு பயன்படும் மூலப்பொருட்களின் உற்பத்தி குறைந்து காணப்படுவதால் விலை இந்தாண்டு கிலோ ஒன்றிற்கு 25 டொலர் முதல் 30 டொலர் அளவிற்கு அதிகரித்துள்ளது.

மடகாஸ்கர் நாட்டில் மட்டும் ஆண்டு ஒன்றிற்கு 2 ஆயிரம் தொன் அளவிற்கு வனிலா மூலப்பொருள் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் இந்த வகை மூலப்பொருட்கள் மருத்துவ பயன்பாட்டிற்கும், வாசனைத் திரவியங்கள் தயாரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.


# சயீது மீது நடவழக்கை எடுக்க முடியாது – பாகிஸ்தான்



(இஸ்லாமாபாத்)

வலுவான ஆதாரங்கள் ஏதும் இல்லாமல் ஜமாத் உத் தாவா தலைவர் சயீது மீது நடவடிக்கை எடுக்க முடியாது என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. மும்பையில் கடந்த 2008ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி நடந்த பயங்கரவாத தாக்குதலில் 166 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு சதித்திட்டம் தீட்டி கொடுத்தவர் பாகிஸ்தானை சேர்ந்த ஜமாத் உத்தாவா அமைபபின் தலைவர் ஹபீஸ் சயீது. பயங்கரவாத இயக்கத்தின் தலைவரான சயீது பாகிஸ்தானில் சர்வ சாதாரணமாக நடமாடி வருகிறார். இவரைப்பிடித்து கொடுப்போருக்கு அல்லது இவரது இடத்தை பற்றி தகவல் தெரிவிப்போருக்கு அமெரிக்கா 50 கோடி ரூபாய் வெகுமதி அறிவித்துள்ளது. இந்த அறிவிப்புக்கு பின்னரும் சயீது, ராவல்பிண்டியில் இராணுவ தலைமையகத்திற்கு அருகே உள்ள ஹொட்டலில் நிருபர்களை சந்தித்தார். இது குறித்து பாகிஸ்தானிய வெளியுறவுத் துறை தகவல் தொடர்பாளர் அப்துல் பசீத் குறிப்பிடுகையில், மும்பை தாக்குதலில் சயீது சம்பந்தப்பட்டுள்ளதற்கான வலுவான ஆதாரங்கள் ஏதும் இல்லாத நிலையில் அவர் மீது நாங்கள் நடவடிக்கை எடுக்க முடியாது. இதை நாங்கள் அமெரிக்காவிடம் தெளிவு படுத்தியுள்ளோம். போதிய ஆதாரங்கள் இல்லாமல் எதன் அடிப்படையில் அவரது தலைக்கு அமெரிக்கா, 50 கோடி ரூபாய் வெகுமதி அறிவித்தது என்பது தெரியவில்லை. சயீது மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் உரிய ஆதாரங்களை அளிக்கும்படி கேட்டுள்ளோம் என்றார். இதேவேளை அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரி மார்க் டோனர் குறிப்பிடுகையில், சயீது எங்கேயிருக்கிறார் என்ற விடயம் எங்களுக்கும் தெரியும், பாகிஸ்தானில் உள்ள பத்திரிகையாளர்களுக்கும் தெரியும். ஆனால், அவர் மீது உரிய குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட வேண்டும் என்ற நோக்கில் தான் அவர் தலைக்கு வெகுமதி அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பாகிஸ்தானுக்கு நாங்கள் எந்த நெருக்கடியையும் கொடுக்கவில்லை எனத் தெரிவித்தார்.

# ஆயுத கடத்தல்காரனுக்கு சிறைத்தண்டனை



சர்வதேசத்தின் முக்கிய ஆயுத கடத்தல்காரராக விளங்கிய விக்டர் போட்டுக்கு அமெரிக்க நீதிமன்றத்தால் 25 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்த இவர் அமெரிக்கர்களைக் கொல்வதற்கு ஆயுதங்களை விநியோகித்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

45 வயதான இவர் கொலம்பியாவின் ஆயுதக்குழு ஒன்றுக்கு கனரக ஆயுதங்களை விநியோகிக்கும்போது கைது செய்யப்பட்டார். 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட இவர் தொடர்ந்தும் அமெரிக்க நீதிமன்றத்தால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். எனினும் இந்தக்குற்றச்சாட்டுக்களை அவர் நிராகரிததுள்ளதுடன், இதற்கு எதிராக மேன்முறையீடு செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

# துபாயில் 24 மணிநேரமும் இணையத்தளங்கள் கண்காணிப்பில்

துபாய் நாட்டில் 24 மணி நேரமும் இளைய சமுதாயம் பயன்படுத்தும் பேஸ்புக், டுவிட்டர் இணையத்தளங்களை பொலிஸார் கண்காணித்து வருகின்றனர்.

உலகம் முழுவதும் பல நாடுகளில் அரசியல்வாதிகளுக்கு எதிரான கருத்துகளை இலட்சக் கணக்கான மக்கள் பேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக இணையத்தளங்கள் வழியாக பரிமாறிக கொள்கின்றனர்.

இதனால் எகிப்து, லிபியா போன்ற நாடுகளில் புரட்சி வெடித்தது. சீனாவிலும் இதுபோன்ற விமர்சனங்கள் இணையத்தளங்களில் பரவலாக வெளியானதால், பல இணையத்தளங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் பேஸ்புக், டுவிட்டர் போன்ற இணையத்தளங்களை 24 மணி நேரமும் கண்காணிக்கும் பணியில் துபாய் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து துபாய் சைபர் கிரைம் துணை இயக்குநர் சலீம் ஒபய்த் சல்மீன் கூறுகையில், சமூக இணையத்தளங்களில் குற்றங்களைத் தடுக்க 24 மணி நேரமும் அதிகாரிகள் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். விதிகளை மீறுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

# பிரித்தானிய மாணவர் வீசாவில் மாற்றம்

பிரித்தானியாவில் வெளிநாட்டு மாணவர்கள் தங்களது படிப்பை முடித்த பின், இரண்டு ஆண்டுகள் வரை வேலை பார்க்க வழி செயயும் வீசா சலுகை நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளது. மேற்கத்திய நாடுகளைச் சேராத மாணவர்கள் பிரித்தானியாவில் படிக்க ஆர்வம் காட்டி வந்தனர். அவர்கள் தங்களது படிப்பை முடித்த பிறகு, அங்கேயே தங்கி இரண்டு ஆண்டுகள் வரை வேலை பார்க்க மாணவர் வீசாவில் வழி செய்யப்பட்டு வந்தது.

பிரித்தானியாவின் குடியேற்றச் சட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டதை தொடர்ந்து, மாணவர்கள் படிப்பை முடித்த பிறகு தங்கியிருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த புதிய விதிமுறை நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது. அரசின் இந்த திட்டத்தை பிரிட்டிஷ் சபை எதிர்த்துள்ளது. இந்தப் புதிய வீசா சட்டத்தால் வரும் செப்டெம்பர் மாதம் ஆரம்பிக்கவுள்ள படிப்புகளுக்கு சேரும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்து விட்டதாகவும், இந்தச் சட்டத்தால் வெளிநாட்டு மாணவர்கள் மூலம் கிடைக்கும் அன்னியச் செலாவணி கணிசமாகக் குறையும் எனவும் பிரிட்டிஷ் சபை தெரிவித்துள்ளது.

# கடாபியின் மகனுக்கு சிறைக்குள் அடி

லிபியாவின் முன்னாள் அதிபர் கேணல் கடாபியின் புதல்வாரன சைவ் அல் இஸ்லாம் கடாபி, கிளர்ச்சியாளர்களால் தடுத்துவைக்கப்பட்ட நிலையில் தாக்கப்பட்டுள்ளதாக அவரின் சார்பான, சர்வதேச நீதிமன்ற வழக்குரைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

கடாபியின் செல்வாக்கு மிக்க புதல்வாரன சைவ் அல் இஸ்லாம் கடந்த நவம்பர் மாதம் கிளர்ச்சியாளர்களால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அங்கு அவர் முறை யற்ற விதமாக நடத்தப்படுவதாகவும், தனிமைப் படுத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை சர்வதேச நீதிமன்றத்தில் அல் இஸ்லாம் மீது ஒட்டக அனுமதிப்பத்திரம் மற்றும் மீன் பண்ணை ஒழுங்கீனங்கள் போன்ற சிறிய குற்றங்களுக்காகவே வழக்குத் தொடுக்கப்படும் என வழக்குத் தொடுநர்கள் முன்னர் கூறியிருந்ததாகவும் சைவ் அல் இஸ்லாமின் வழக்குரைஞர்கள் தெரிவித்தனர்.

சைவ்அல் இஸ்லாமை விசாரிப்பது யார் என்பது தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கும் லிபியாவுக்கும் இடையில் இழுபறி நிலவுகிறது. அவர் லிபியாவிலேயே விசாரிக்கப்பட வேண்டும் எனவும் இதற்காக விசேட நீதிமன்றமொன்று அமைக்கப்படுவதாகவும் லிபியாவின் தேசிய இடைக்கால சபை தெரிவித்துள்ளது.




புனித வாரத்தை முன்னிட்டு, பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் முகத்தை துணியால் மூடியபடி, உடலில் கத்திபோட்டபடி நடைப்பயணம் இடம்பெற்றுள்ளது. கத்தோலிக்க முறைப்படி, இம்முறைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## இடபம்



# நந்தன வருட இராசி பலன்கள்



கார்த்திகை 2, 3, 4 பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 பாதங்கள் வரை.

(பெயரின் முதல் எழுத்துக்கள்: இ, உ, ஏ, ஓ, வ, வி, வு, வே, வோ உள்ளவர்களுக்கும்)

ஜென்ம கேது மாறியதும் செல்வ வளர்ச்சி அதிகரிக்கும்!

நம்பியவர்களுக்கு நாளும் கை கொடுத்து உதவும் இடப ராசி நேயர்களே!

'கர' வருடம் முடிந்து 'நந்தன' வருடம் தொடங்க போகிறது. வரும் புதிய ஆண்டு நமக்கு வளர்ச்சி தருமா? வருமானம் திருப்தியாக இருக்குமா? என்றெல்லாம் உங்கள் சிந்தனை அலைபாயும். உங்களைப் பொறுத்த வரை இந்தப் புத்தாண்டு, பொருளாதாரத்தின் உச்சநிலையை அடையும் ஆண்டு என்றே சொல்லலாம்.

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன், உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கிறார். அஷ்டம இலாபாதிபதி குரு பன்னிரெண்டில் சஞ்சரிக்கிறார். எட்டுக்கு அதிபதி பன்னிரெண்டில் சஞ்சரிக்கும் பொழுது, 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கேற்ப, திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். திடீர் திடீரென நல்ல மாற்றங்கள் உருவாகும்.

ஜென்ம ராசியிலுள்ள கேதுவும், ஏழில் உள்ள ராகுவும் விலகிய பின்னால், நீங்கள் கேட்ட இடத்தில் எல்லாம் உதவிகள் கிடைக்கும், வளர்ச்சி கூடும். சப்தமாதிபதியும், விரயாதிபதியுமான செவ்வாய், சனியோடு இணைந்து ஐந்தில் சஞ்சரிக்கும் ஒரு சில மாதங்களில் பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் உருவாகாமல் பார்த்து கொள்வது நல்லது. பூர்வீக சொத்துக்களில் உங்கள் அணுகுமுறை அன்போடு கூடியதாக இருந்தால் வெற்றி உங்கள் பக்கமே வரும்.

நன்றி மறக்காத நல்ல குணம் உள்ளவர்கள்!

உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் நீங்கள். உலகச்செய்திகளை எல்லாம் அறிந்து கொள்ள ஆசைப்படுவீர்கள். நன்றி மறக்காத தன்மை உங்களிடம் இருப்பதால் தான், நட்பு வட்டம் உங்களைச் சுற்றிக் கொண்டேயிருக்கிறது.

இந்தப் புத்தாண்டு நந்தன வருடம் உங்களுக்கு எப்படி இருக்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**ஆண்டின் தொடக்கம் முதல் வைகாசி 3 வரை.**

ஆண்டின் தொடக்க நாளில் அஷ்டமத்தில் சந்திரன் உலா வந்தாலும், சுக்ரபலம் கூடுதலாக இருப்பதால், செலவிற்கேற்ற வரவு வந்து கொண்டேயிருக்கும். பொன், பொருள் சேர்க்கைக்கு அஸ்திவாரம் இடும் விதத்திலும், வீடு கட்டி குடியேற இடம் வாங்கும் விதத்திலும் விரய குருவின் பார்வை பலம் தருகிறது. சித்திரை 17இற்கு மேல் மேஷ புதனின் சஞ்சாரத்தில் ஒருசிலருக்கு வீடுமாற்றங்கள், பிள்ளைகளின் உத்யோக வாய்ப்புகள் அரங்கேறலாம்.

ஜென்ம கேது ஆன்மீக நாட்டத்தை அதிகரிக்கச் செய்யும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். வக்ர சனியின் இயக்கத்தால் தொழில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு ஓரளவு குறையலாம். எனவே, வேலைப்பளு அதிகரிக்கும்.

**குருப்பெயர்ச்சி தரும் மாற்றங்கள்**

நவகிரகங்களில் சுபகிரகமான குரு பகவான் தற்சமயம் உங்கள் ராசிக்கும் பனிரெண்டாமிடத்தில் சஞ்சரித்து கொண்டிருக்கிறார். இனி வைகாசி 4இல் உங்கள் ராசிக்குள் அடியெடுத்து வைக்கப் போகிறார். உங்கள் ராசிநாதனோ சுக்ரன், அவருக்கு பகைவனான குரு பகவான் உங்கள் ராசிக்கு வரும் பொழுது, எப்படி நன்மை செய்வார்? என்று நீங்கள் நினைக்க வேண்டாம்.

குரு பார்த்தாலும், குரு சேர்ந்தாலும் கோடி நன்மை அல்லவா? எனவே, கொடுக்கும் தெய்வம் கூரையைப் பிளந்து கொண்டு கொடுக்கும் என்பதைப் போல், தேடி வந்த குரு உங்களை கோடீஸ்வரராகவும் ஆக்கலாம். கொடி கட்டிப் பறக்கும் வாழ்க்கையையும் அமைத்துக் கொடுக்கலாம்.

இல்லம் தேடி வரும் குருவை வருவதற்கு முன்னதாகவே, நாம் தேடிச் சென்று வழிபடுவதும், வரும் நாளில் வரவேற்று கொண்டாடுவதும் நந்தன வருடத்தை நல்ல வருடமாக உங்களுக்கு மாற்றி அமைத்துக் கொடுக்கும். 'வானவர்க்கு அரசனான வளம் தரும் குருவே' என்ற குரு கவசப் பாடலை தினமும் ஒரு முறையும், வியாழன் தோறும் மூன்று முறையும் குரு முன்னிலையில் நீங்கள் படித்து வழிபட்டால், அதன் அருட்பார்வையால் உங்களுக்கு அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும்.

உங்கள் ராசியில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடத்து ஆதிபத்யங்கள் எல்லாம் உடனுக்குடன் நடைபெற்று உற்சாகத்தை வரவழைத்துக் கொடுக்கும்.

'ஜென்மத்தில் குரு வந்தால் செலவுகளே அதிகரிக்கும்!' என்றாலும், சுபச் செலவுகளே உங்களுக்கு உருவாகும்.

இடம் வாங்க போட்ட திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சி கைகூடும். வாரிசுகளுக்கு வெளிநாட்டு வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொடுப்பீர்கள்.

அந்நிய தேசத்திலிருந்து அனுகூலச் செய்தி வந்து சேரும். பூர்வீக சொத்துக்களில் இதுவரை இருந்த இழுபறியான பஞ்சாயத்துக்கள் இனிநல்ல முடிவுக்கு வரலாம். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் உருவாகும்.

**செவ்வாய் - சனி சேர்க்கை காலம்!**

செவ்வாய், சனி சேர்க்கை ஏற்படும் பொழுது, உலகில் பல பிரச்சினைகள் உருவாகின்றன. உங்கள் ராசியைப் பொறுத்தவரை ஐந்தாமிடத்தில் அதன் சேர்க்கை இருப்பதால், பிள்ளைகள் வழியில் கொஞ்சம் முன்னெச்சரிக்கை தேவை. அவர்கள் உங்களைக்கேட்காமலேயே தன்னிச் சையாக ஒருசில முடிவுகளை எடுக்கலாம்.

பூர்வீக சொத்துப் பிரச்சினை மீண்டும் தலைதூக்கலாம். ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் போது யோசித்து செய்வது நல்லது. ஆனி 9 முதல் ஆடி 29 வரை கூடுதல் கவனம் தேவை.

**துயரங்களைப் போக்குமா துலாம் ராசிச்சனி!**

வருடத் தொடக்கத்தில் கன்னி ராசிக்குள் சஞ்சரித்த சனி துலாம் ராசிக்குள் ஆவணி 27ஆம் திகதி வருகிறார். உச்ச சனி அச்சமில்லாத வாழ்க்கைக்கு அடித்தளமிடும். 6இல் சனி உலாவரும் பொழுது, சீரும், சிறப்பும், செல்வாக்கும் மேலோங்கும். பேரும், புகழும் வந்து சேரும். எதிரிகள் விலகுவர். உதிரி வருமானங்கள் மலை போல் குவியும். வழக்குகள் ஓயும். வாய்ப்புகள் வாசற்கதவைத் தட்டும்.

**வக்ர குரு தரும் பலன்கள் என்ன?**

புரட்டாசி 26ஆம் திகதி முதல் தை 24ஆம் திகதி வரை உங்கள் ராசிக்குள்ளேயே குரு வக்ரமடையப் போகிறார். அஷ்டமாதிபதி வக்ரம் பெறும் பொழுது, ஆச்சரியப்படத்தக்க வகையில் நல்ல பலன்களையும் நீங்கள் சந்திக்க நேரிடும். அரசு வழியில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்த கடனுதவிகள் கிடைக்கும். ஆயினும், ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கி சங்கிலித் தொடர் போல, கடனகளை வரவழைத்து கொள்வீர்கள்.

பதினோராமிடத்திற்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால், கடல் பயண வாய்ப்புகளில் மாற்றம் உருவாகும். மூத்த சகோதரர் உங்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடலாம். குருவுக்கு ப்ரீதி செய்வதன் மூலம் உங்கள் குழப்பங்கள் அகலும்.

**பாம்பு - கிரக பெயர்ச்சி பக்கபலமாக இருக்குமா?**

கார்த்திகை 17ஆம் திகதி துலாம் ராசியில் ராகுவும், மேஷ ராசியில் கேதுவும் சஞ்சரிக்கப்போகிறார்கள். இந்தப் பெயர்ச்சி உங்களுக்கு யோகம் தரும் விதத்திலேயே அமைகிறது.

கடந்த சில மாதங்களாக கேதுவின் ஆதிக்கத்தால் நிறைய காரிய தடைகளைச் சந்தித்து வந்திருக்கலாம். கேது பெயர்ச்சிக்குப் பிறகு தாமதப்பட்ட காரியங்கள் அனைத்தும் தானாகவே தடையின்றி நடந்து வரும்.

ஆறாமிடத்து ராகுவும், ஜென்ம குருவும் முறையாக சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் அஷ்டலட்சுமி யோகம் செயல்படப்போகிறது. எனவே, காலாவதியான கடன்கள் கூட உங்கள் கைக்கு வந்து சேரலாம். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் உருவாகும்.

சர்ப்ப சாந்தியை முறையாகச் செய்தால், சகல பாக்கியங்களும் ராகு - கேதுக்களின் ஆதிக்கத்தால் வந்து சேரும்.

**வக்ர சனியால் வளர்ச்சி ஏற்படுமா?**

சித்திரை 1ஆம் திகதி முதல் ஆனி 6ஆம் திகதி வரையிலும், பிறகு மாசி 4ஆம் திகதி முதல் பங்குனி 31ஆம் திகதி வரையிலும் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் ராசி அடிப்படையில் 9, 10இற்கு அதிபதியாக விளங்குபவர் சனி பகவான். இக்காலத்தில் முன்னோர் சொத்துக்களை விற்பனை செய்ய வேண்டிய சூழ்நிலை ஒருசிலருக்கு உருவாகலாம். உடன்பிறப்புகளை அனுசரித்து செல்வதன் மூலமே ஆதாயத்தைப் பெற முடியும்.

தொழில் கூட்டாளிகள் தொகைகளை ஒழுங்காக கொண்டு வந்து சேர்ப்பார்களா? என்பது சந்தேகம் தான். ஆதாயம் ஏட்டில் இருக்குமே தவிர, எதிரில் இருக்காது. சில வாய்ப்புகள் கைகூடுவதுபோல தோன்றி, நழுவிச் செல்லலாம். எனவே, இக்காலத்தில் சனீஸ்வரருக்கு எள்தீபம் ஏற்றி, வழிபாடு செய்வதோடு 'கருநிறக்காகம் ஏறி, காசினி தன்னைக் காக்கும்' என்ற சனி கவசத்தைப் பாடி காக வாகனத்தானை கைகூப்பி வழிபடுவதன் மூலம் கவலைகளிலிருந்து விடுபடலாம்.

வெள்ளிக்கிழமை தோறும் அருகில் உள்ள ஆலயத்திற்குச் சென்று அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சிறப்பு வழிபாடாக, பிரதோஷ நாளில் நந்தியை வழிபட்டு வாருங்கள்.

**மங்கையர்களுக்கான மகத்தான பலன்கள்!**

நந்தன வருடத்தில் ரிஷப ராசியில் பிறந்த பெண்களுக்கு, குருப் பெயர்ச்சிக்கு பிறகு இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றங்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை உண்டு. குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் ஒவ்வொன்றாக வெற்றி பெறும். சுக்ர பலத்தோடு ஆண்டு தொடங்குவதால் ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் கனிவு கூடும். உங்கள் பெயரிலேயே ஒரு புதிய தொழில் தொடங்க, குடும்ப உறுப்பினர்கள் முன் வருவர். ராகு - கேது பெயர்ச்சிக்கு பின்னால் பயணங்கள் அதிகரிக்கும். கடல் கடந்து வரும் செய்தி காதினிக்க வைக்கும். ஆனி 9 முதல் 29 வரை செவ்வாய் - சனி சேர்க்கை காலத்தில் பிள்ளைகள் வழியில் அதிக கவனம் செலுத்துவது நல்லது. சுய ஜாதக அடிப்படை மேற்கொண்டால், மன நிம்மதியும், மகிழ்ச்சியும் குடிகொள்ளும்.

(தொடரும்...)

## வடமாகாண சபை....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் கூட்டமைப்பு அரசியல்ரீதியாக பிற்போக்கானது, சுயலாப நோக்குடையது, இனவாத ஐக்கிய தேசியக் கட்சியுடன் கள்ள உறவைக் கொண்டது, ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவானது என்ற அடிப்படை விடயத்தை, உண்மையாகவே தமிழ் மக்களின் விமோசனத்துக்காக உழைப்பவர்கள் உணர வேண்டும்.

எனவே கடும் பிரயத்தனம் எடுத்தாவது, மீண்டும் ஜனநாயக தமிழ் கட்சிகளின் அரங்கத்தை உருவாக்குவதற்கு அனைத்து முற்போக்கு - ஜனநாயக சக்திகளும் உழைக்க வேண்டும். அதை இப்பொழுதே உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். அதை விடுத்துவிட்டு 'வெள்ளம் வந்த பின்னர் அணை கட்டுவது போல' வட மாகாணசபை தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் கூட்டணி அமைக்க ஓடித்திரிவதால் எந்தப் பிரயோசனமும் ஏற்படப்போவது இல்லை.

அவ்வாறான ஒரு சூழ்நிலை ஏற்படுமாக இருந்தால், அது தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கே சாதகமாகப் போய்முடியும் என்பதை, இதில் அக்கறையுள்ள அனைவரும் புரிந்துகொண்டு செயற்படுவது காலத்தின் தேவையாகும்.

# யாழ். கருக்கலைப்பு நிலையம் முற்றுகை கைது செய்யப்பட்டவர்களுக்குச் சிறை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சட்ட விரோத கருக்கலைப்பு நிலையத்தை முற்றுகையிட்டபோது பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இருவரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கும்படி யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோத கருக்கலைப்பில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்ட மேற்படி பெண்ணும், கருக்கலைப்பு செய்த நபரையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த பெண் ஒருவர் சட்டவிரோத கருக்கலைப்பில் ஈடுபட்டு அதிக இரத்தப்போக்கு காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட வேளை, யாழ். பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவ்வழக்குத் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இரு சந்தேக நபர்கள் சார்பிலும் நேற்று முன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் சட்டத்தரணி மு.ரெமீடியஸ் மூலம் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மேற்படி வழக்கினை விசாரணைக்கு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி எடுத்துக்கொண்டபோது, சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி இருவரையும் பிணையில் விடுமாறு கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து, பொலிஸ் தரப்பில் ஆஜராகிய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவிக்கையில், கருக்கலைப்பு நிலையத்தில் பிறந்த குழந்தை கொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் என தாம சந்தேகிக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

இது தொடர்பில் பல்வேறு விசாரணைகள் மேற்கொண்டு வருவதாகவும், தெரிவித்ததைத் தொடர்ந்து யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா இருவரையும் விளக்கமறியலில் வைககுமாறு உத்தரவிட்டார். (எஸ்)

# விசாரணைக்கு அழைப்பு

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த - கணவனை இழந்த பெண் ஒருவர் பயங்கரவாத தடுப்பு பொலிஸாரால் விசாரணைக்காக் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

கல்முனையைச் சேர்ந்த இரத்தினம் பூங்கோதை என்ற பெண்ணை, இன்று விசாரணைக்கு கொழும்பு பயங்கரவாத தடுப்புப் பிரிவு, கல்முனை பொலிஸ் ஊடாக அறிவித்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்னரும் இவரை குற்றப் புலனாய்வுத்துறையினர் விசாரணைக்காக கொழும்புக்கு அழைத்திருந்தனர்.

ஆனால் அவர் அங்கு செல்ல மறுப்புத் தெரிவித்திருந்துடன், அதுபற்றி நல்லிணக்க ஆணைக் குழுவிடமும் முறையிட்டிருந்தார்.

இதையடுத்து, கல்முனையில் வாக்குமூலம் அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று நல்லிணக்க ஆணைக்குழு அறிவித்திருந்ததுடன், குற்றப் புல னாய்வுப் பிரிவினரும் கல்முனையில் வாக்குமூலம் பெறப்படும் என்று தெரிவித்திருந்தனர்.

இந்தநிலையில், கொழும்பு பயங்கரவாத தடுப்பு பிரிவு அவருக்கு இப்போது அழைப்புவிடுத்துள்ளது.

இதுதொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதாக பூங்கோதை தெரிவித்தார்.

தற்போது கொழும்புக்குச் சென்று வரக்கூடிய பாதுகாப்பான சூழ்நிலை தனக்கு இல்லை என்பதால் தன்னால் அங்கு செல்ல முடியாதிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

# கூட்டமைப்பின் தலைமையில் எதிர்க்கட்சிகளின் மே தினம்

## யாழில் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் எதிர்க்கட்சிகளின் மே தினம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் நடைபெறவுள்ளதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில், யாழ்ப்பாணத்தில் மே தினம் நடத்துவது குறித்து நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

இப்பேச்சுவார்த்தையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கலந்துகொண்டது. இதில், மே தினக் கூட்டமானது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் நடைபெறவும், அதற்கான ஏற்பாடுகள் யாவையும் கூட்டமைப்பே மேற்கொள்ளவும் முடிவு எட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பொதுக்கூட்டத்திற்காக போடப்படும் மேடையில் தனியொரு கட்சியை பிரதிபலிக்காது, பங்குகொள்ளும் அனைத்துக் கட்சிகளையும் பிரதிபலிக்கும் வண்ணம் கொடிகள் நாட்டப்படுவதாகவும், பேரணியிலும் அதேபோன்று நடைமுறைகளைக் கடைபிடிப்பதாகவும் முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் மேதினக் கூட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமயில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்முடிவு கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களின் முடிவேயாகும்.

இதன்படி மே தினத்துக்கான அனைத்து ஏற்பாடுகளையும் கூட்டமைப்பே மேற்கொள்ளும் என தெரிவித்துள்ளார். அத்துடன், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தவும் அடிப்படைச் சம்பளம் 12, 500 ரூபாவாக வழங்கவேண்டும் எனவும், மீள்குடியேற்றம் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவுறுத்த வேண்டும் எனவும் அரசிற்கு கோரிக்கை விடுத்து கோஷம் எழுப்புவதாகவும் முடிவு செய்யப்பட்டது.

### மனம்மாறும்...

வேண்டி வரும்போது, ஐக்கிய இராச்சியத்தில் காலத்தை விரயமாக்குவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்கள் அமைக கப்படுகின்றன. ஆனால், இலங்கையில், இது செயற்படு வதற்கான காலமாகும் என அவர் கூறினார்.

இலங்கையின் வடபகுதிக்கான தனது விஜயத்தை முடித்துக்கொண்டுவந்த நேஸ்பி பிரபு, அங்கு நடைபெறும் கண்ணிவெடி அகற்றும் பணிகள், மீள்குடியேற்ற நடவடிக்கைகளை வியந்து பேசினார். இந்த செயற்பாடுகளின் கடினத்தன்மையை சர்வதேச சமூகம் அறியாதுள்ளது என அவர் கூறினார்.


இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவேன் . உலகத் தமிழர் பேரவை, பிரித்தானிய தமிழர் பேரவை என்பவற்றின் செல்வாக்கு மண்டலத்துக்கு அப்பால் த.தே.கூட்டமைப்பு இருப்பதாக தான் கருதுவதாக நேஸ்பி பிரபு கூறினார்.

சனல் 4 வீடியோ குறித்து அவர் கருத்துக் கூறிபோது, பகுதியளவில் அரசாங்கத்துக்குச் சொந்தமான ஒரு தொலைக் காட்சி இவ்வாறான உண்மைக்குப் புறம்பான விடயங்களை கொண்ட ஆவணத்தை வெளியிட்டமை சரியானது அல்ல என அவர் கூறினார். இலங்கையில், நடைபெறும் இலங்கை - இந்திய போட்டிகள் பி.பி.சி. ஒளிபரப்புவதை தடுக்க சனல் 4 முயன்றமை தொடர்பான பிரச்சினையை தான் கருத்திலெடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

தனது இலங்கை விஜயத்தின்போது அமைச்சர்கள் ஜீ.எல். பீரிஸ், ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன், வாசுதேவ நாணயக்கார, பசில் ராஜபக்ஷ, கோத்தாபய ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை அவர் சந்தித்தார்.

யாழ்ப்பாணம், வவுனியா, ஹம்பாந்தோட்டை, காலி ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் செய்த அவர், யாழ் ஆயர், வடமாகாண ஆளுநர், யாழ். கிளிநொச்சி அரசாங்க அதிபர்கள், வர்த்தக - கைத்தொழில் சம்மேளனம், பிரித்தானிய உயர் ஸ்தானிகர் ஆகியோரையும் சந்தித்தார்.

# ரஹானேயின் அதிரடியால் ராஜஸ்தான் வென்றது



ஐ.பி.எல். போட்டித் தொடரில் நேற்று நடைபெற்ற நான்காவது போட்டியில் ராவிட் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் 31 ஓட்டங்களால் இல்சிறிஸ்ட் தலைமையிலான கிங்ஸ்லெவன் பஞ்சாபைத் தோற்கடித்தது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிங்ஸ்லெவின் பஞ்சாப் களத்தடுப்பைத் தேர்வு செய்ய, ராஜஸ்தான் றோயல்ஸ் துடுப்பெடுத்தாடியது. நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்த அவ்வணி 191 ஓட்டங்களைக் குவித்தது. இதில் ரஹானே 98, ராவிட் 28, பிரட்ஹாஜ்ட் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் போல்க்கனர் 2, சால்வா, ஹார்மீற்சிங் இருவரும் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். பதிலுக்கு 192 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய கிங்ஸ்லெவின் பஞ்சாப் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை மட்டுமே பெற்றது. அவ்வணி சரியாக இல்கிறிஸ்ட் 27, மண்டீப்சிங் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் கூப்பர் 4, சவான் 2, திரிவேதி, சிங் இருவரும் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ரஷானே தெரிவானார்.

# மின்தடை பற்றிய தகவல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர்அழுத்த மற்றும் தாழ்அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்யவேண்டியிருப்பதாலும் 09.04.2012 திங்கட்கிழமை, 11.04.2012 புதன்கிழமை மற்றும் 14.04.2012 சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்சசெழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், தொட்டிலடி முதல் சங்கானை வரையான பிரதேசம், கந்தரோடையிலிருந்து மாகியப்பிட்டி வரையான பிரதேசம், சங்கானை சந்தியிலிருந்து சித்தங்கேணியூடாக வட்டுகோட்டை ஏ.ஊ வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### 17 தொண்டர் நிறுவன...

இந்த விசாரணைகளுக்கு நடந்தவை பற்றி, பிரெஞ்சு தூதுவர் சட்டமா அதிபரிடம் பல கேள்விகளைக் கேட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. திருகோணமலையில் ஐந்து மாணவர்களும் மூதூரில் 17 உதவி நிறுவன பணியாளர் களும் கொலை செய்யப்பட்டமை தொடர்பான விசாரணைகள் மீண்டும் தொடங்கப்படும் என முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் கடந்த பெப்ரவரி மாதம ஜெனிவாவில் இலங்கை பற்றி அறிய ஆர்வம் கொண்டிருந்த நாடுகளின் பிரதிநிதிகளுடன் பேசியபோது உறுதியளித்திருந்தார்.

இந்த விசாரணைகளுக்கு என்ன நடந்ததென அறிவதில் சர்வதேச மன்னிப்புச் சபை மிகுந்த ஆர்வமாக இருந்தது. இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை ஏன் வெளியிடப்படவில்லை எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### காணாமற்போன விநாயகர்...

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக ஆலய நிர்வாக சபையினர் உடனடியாக பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். சரித்திரப் பிரசித்திபெற்ற கௌத்தந்துறைப் பிள்ளையார் ஆலயம், இறுதிக்கட்ட யுத்தத்தின்போது முழுமையாக சேதமடைந்துள்ள நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தான் பாலஸ்தாபனம் செய்யப்பெற்று பூஜை நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### புலிகளின் நடவடிக்கை...

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய கூறுகையில், புலிகளின் செயற்பாடுகள் வட, கிழக்கில் காணப்படுவதாக ஊட கங்களில் செய்திகள் வெளிவந்தன. இச்செய்திகளுக்கான ஆதாரங்கள் இல்லை. கிழக்கில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி செய்திகளை ஏற்றுக் கொள்ள முடியாது. எவ்வாறாயினும் நாட்டின் உள்ளார்ந்த பாதுகாப்புகளில் இராணுவம் உஷார் நிலையில் செயற்படுவதுடன் பொலிஸாருக்கு உதவும் நோக்கில் பல விடயங்களையும் மேற்கொள்கின்றோம் என்றார்.

### யாழ். நகரச் சூழலில்...

பகுதியாக இந்தப் பகுதியிருந்தமையினால் கொள்ளை தொடர்பில் அயலில் இருந்தவர்களுக்கும் தெரியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இதேபோல் அரியாலைப பகுதியிலும் கடையொன்றை உடைத்த கொள்ளையர்கள் அங்கிருந்த பெறுமதியான பொருட்க ளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதுடன். கடையின் சில பகுதி களை உடைத்துச் சென்றுள்ளனர்.

# வாகன வரி அதிகரிப்பு தெளிவுபடுத்த வேண்டும்

## அரசைக் கோருகிறது ஜே.வி.பி.

வாகனங்கள் மீதான வரி அதிகரிக்கப்பட்டமைக்கான காரணங்களை உரிய முறையில் தெளிவுபடுத்துமாறு நிதி அமைச்சின் செயலாளரிடம் மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் அதிகரிக்கப்பட்ட வரிகள் எத்தகைய தாக்கத்தைச் செலுத்தும் என்பதையும் இதன் தாக்கத்தை எதிர்நோக்க நேரிடும் தரப்பினர் தொடர்பாகவும் விளக்கமளிக்குமாறு நிதி அமைச்சின் செயலாளருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வாகன இறக்குமதி நிறுவனங்களுக்கு முற்பணம் செலுத்திய வர்கள், வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான ஏற்பாடுகளை செய்தவர்களுக்கு, வாகனங்களுக்கு விண்ணப்பித்து அவை கப்பல்களுக்கு ஏற்றப்பட்டுள்ளவர்களுக்கு, ஏற்கனவே துறைமுகத்தை வந்தடைந்துள்ள வாகனங்களை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இந்த வரி அதிகரிப்பு எத்தகைய தாக்கத்தைச் செலுத்தும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக உரிய விளக்கம் இதுவரை வழங்கப்படவில்லை என்பதால் அதிக விலைகளுக்கு வாகனங்களை விற்பனை செய்து வாகன கொள்வனவாளர்களை ஏமாற்றி பணத்தை மோசடி செய்யும் நடவடிக்கையையும் காணமுடிகிறது.

வரையரையற்ற முறையில் வரிகள் விதிக்கப்படுவதால் மக்களும் வர்த்தக சமூகத்தினரும் அசௌகரியத்தை எதிர்நோக்கியுள்ளனர். அதிகரிக்கப்பட்ட வரியின் தாக்கம் தொடர்பில் உரிய தெளிவின்மையால் மக்கள் சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் வாகனங்கள் மீதான வரி அதிகரிக்கப்பட்டமை ஒவ்வொரு தரப்பினருக்கும் எத்தகைய தாக்கத்தை செலுத்தும் என்பதை தனித்தனியாக தெளிவுபடுத்துமாறு அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தலையிடாது வாழ வேண்டும் தன்னிறைவு



(கொழும்பு)

எந்த நாடும் தலையிடாது வாழ வேண்டுமாயின் நாடு அனைத்துத் துறைகளிலும் தன்னிறைவு அடைய வேண்டும் எனவும் இதில் மக்களுக்கு முக்கிய பொறுப்பு இருப்பதாகவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்தனகல்ல பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நாட்டின் வரலாற்றில், நடைபெற்ற பல சம்பவங்களையும் அச்சுறுத்தல்களையும் இலங்கை எதிர்கொண்டது, நாடு தன்னிறைவு அடைந்திருந்தன் மூலம் பண்டைய காலத்தில் அவற்றை வெற்றிகொள்ள முடிந்தது.

எனினும் பிளவுபட்ட சமூகமாக இலங்கைச் சமூகம் இருந்த போது, இலங்கை பலவேறு வகையில் வெளிநாடுகளுக்கு அடிபணிந்திருந்தது. இதனால் அனைத்து குடும்பங்களும், கிராமங்களும், பிரதேசங்கள், மாகாணங்கள் நாடு என்ற வகையில் அனைத்துத் துறைகளிலும் தன்னிறைவு பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# சன் சீ கப்பலின் சூத்திரதாரி பிரான்ஸில் கைதானார்



(கொழும்பு)

சன் சீ கப்பலில் 492 தமிழர்களை அகதிகளாக கனடாவுக்கு சட்டவிரோதமாக அனுப்பி வைத்ததாக, பிரான்சில் கைது செய்யப்பட்ட தமிழர் ஒருவரையே குற்றவாளி என கனேடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

தயாகரன் மார்க்கண்டு என்பவரே கனடாவில் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளார்.

இவர் அண்மையில் பிரான்சில் நடத்தப்பட்ட தேடுதல் ஒன்றின் போது கைது செய்யப்பட்டார்.

இவருக்கு எதிராக கனேடிய சமஷ்டி பொலிஸ், கடந்தமாதம் அனைத்துலக பிடியாணையை பிறப்பித்துள்ளது.

தயாகரன் மார்க்கண்டு தற்போது பிரான்சில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும், அவரை கனடாவிடம் ஒப்படைக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விக் ரொவ்ஸ் மற்றும் குடிவரவு அமைச்சர் ஜாசென் கென்னி ஆகியோர் இணைந்து வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியுள்ளனர்.

# ஆக்கபூர்வமானவர்களெனின் கோட்டாக்களில் தங்கியிருக்காதீர்

## பட்டதாரிகளுக்கு கூறுகிறார் அமைச்சர் எஸ்.பி.



(கொழும்பு)

பட்டதாரிகள் தாங்கள் ஆக்கபூர்வமானவர்கள் என எண்ணுவார்களாயின், அரசாங்கத்தின் கோட்டா முறையிலான தொழிலை எதிர்பார்க்கக்கூடாது என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 12 ஆவது பட்டமளிப்பு விழா, உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த பட்டமளிப்பு விழாவின் போது, 547 பட்டதாரிகளுக்கு பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ஏ.வி.சுரவீர பட்டங்களை வழங்கினார். இங்கு உரையாற்றிய அமைச்சர்,

அரசாங்க தொழில்களை தொடங்கியதன் நிறைவில் பட்டதாரிகள் அநாதைகளாகி விடுவர்.

திறந்த பொருளாதார சந்தையின் சவால்களை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாயின், அதிகையவர்கள் சரியான தொழிலை நாடவேண்டும்.

அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், கச்சேரிகள் மூலவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் என்பனவற்றில் பட்டதாரிகளே சேவையில் உள்ளனர்.

ஆனால் அவர்கள் ஒருவரினாலும் பயனில்லை. தாம் ஆக்கபூர்வமானவர்கள் என எண்ணுவார்களாயின் கோட்டாக்களில் தங்கியிருக்கக்கூடாது என்று மேலும் கூறினார்.

# மீனவர்கள் விடுவிப்பு

(கொழும்பு)

எல்லை தாண்டி இந்திய பகுதிக்குள் நுழைந்து பிடிபட்ட இலங்கை மீனவர்கள் மூன்று பேர் விடுவிக்கப்பட்டுஇலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்

நீர் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் பகுதியை சேர்ந்த பெல்டின், ரவிகரன், விக்னேஸ்வரன் ஆகியோர் மார்ச், 29ம் திகதி, நீர்கொழும்பிலிருந்து விசைப்படகில், யாழ்ப்பாணம் செல்லும் வழியில், திசை மாறி, இந்திய எல்லையான, மூன்றாம் மணல்திட்டுப் பகுதிக்குள் நுழைந்தனர்.

அப்பகுதியில் ரோந்து வந்த, இந்திய கடலோர காவல் படையினர், இவர்களைப் பிடித்து மண்டபம் நிலையத்திற்கு கொண்டு வந்தனர். மூவர் மீதும் எவ்வித வழக்கும் பதியப்படாமல் தனியார் விடுதியில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களை விடுவிக்குமாறு உயரதிகாரிகள் விடுத்த உத்தரவுப்படி மூன்று மீனவர்களும் விசைப்படகில் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணிக்கு இந்திய கடலோர காவல்படையின் வழிகாட்டுதலில் மண்டபத்திலிருந்து இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்

# முல்லை மாவட்டத்தில் உட்கட்டுமான செயற்திட்டங்கள்

## அமைச்சர் றிசாட் பதியுதீன் திறந்துவைத்தார்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பலவேறு உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டு நேற்று பொதுமக்களின் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பல மில்லியன் ரூபா செலவில் பூர்த்தியாக்கப்பட்ட மேற்படி செயற்திட்டங்களை வணிக மற்றும் கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன் வைபவரீதியாக திறந்துவைத்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பழம்பாசி என்ற கிராமத்தில் முன்பள்ளி கட்டடம் ஒன்றை நேற்றுக்காலை 8.30 மணியளவில் அமைச்சர் திறந்து வைத்தார்.

தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்ட அமைச்சர் குழுவினர் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குச் சென்றனர். அங்கு 60 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டடத்தை அமைச்சர் திறந்து வைத்தார்.

தொடர்ந்து கள்ளப்பாடு தெற்குப் பகுதியில் பாடசாலைக் கட்டடம் ஒன்றையும், வற்றாப்பளையில் பொதுச் சந்தைக் கட்டடத்தையும் ஹிஜ்ராபுரம் பகுதியில் பொதுமண்டபம் ஒன்றையும் குமுழமுனை, செம்மலை ஆகிய பகுதிகளில் பொதுச்சந்தைக் கட்டடங்களையும் அமைச்சர் திறந்து வைத்து பொதுமக்களின் பாவனைக்காக கையளித்தார்.

மேலும் நேற்று மாலை 6.00 மணியளவில் கொக்கிளாயில் அமைக்கப்பட்ட முன்பள்ளி கட்டடத்தையும் அமைச்சர் திறந்து வைத்தார்.

இவ்வைபவங்களில் அதிகளவில் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (04)

# சீனாவுடன் கலாசார உறவு அதிகரிக்க அரசு முடிவு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் சீனாவுடன் கலாசார உறவுகளை அதிகரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு நாடுகளுக்கும் இடையே நட்புறவை வலுப்படுத்த, சீன அரசாங்கத்துடன் புரிந்துணர்வின் அடிப்படையில் உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட அமைச்சர் டி.பி.ஏக்கநாயக்க யோசனை ஒன்றை முன்வைத்துள்ளதாக அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் ஒரு சீன கலாசார மையத்தை அமைக்கவுள்ளதாகவும் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

# மதுபான நிலையத்தில் திருட்டு ஊர்காவற்றுறையில் சம்பவம்

ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிலையம் உடைத்து பல இலட்சம் ரூபா பெறுமதியான மது பானத்தினை நாசம் செய்துள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் இரவு வேளையில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான கிளை நிலையம் இலக்கம் 96 நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் முன் கதவினை உடைத்து கிளையின் உள் சேமித்து வைக்கப்பட்டிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான மதுபானத்தை விஷமிகள் நிலத்தில் ஊற்றியதுடன், களவாடியும் சென்றுள்ளனர்.

மேற்படி செயற்பாடு தொடர்ச்சியாக பல வாரங்களாக இடம்பெற்று வருவதாகவும் ஒவ்வொரு தடவையும் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டு வருகின்ற போதும் எவ்வித பயனும் எட்டவில்லை என பனம்தொழில் உற்பத்தியாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும் மேற்படி சம்பவங்களில் ஈடுபடும் விஷமிகள் பகல் வேளைகளில் கிளை நிலையங்களுக்கு வந்து கூரிய ஆயுதங்களைக் காட்டி கிளை முகாமையாளர்களை மிரட்டி வருவதுடன், சுதந்திரமாக ஊர்காவற்றுறைப் பகுதியில் நடமாடி வருகின்றபோதும் இவர்களுக்கு யாரும் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என பனம்தொழில் உற்பத்தியாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும் தமது வாழ்வாதாரத்தினை திட்டமிட்டு சிதைக்கும் செயற்பாடாகவே இத்தொடர் நடவடிக்கையினை தாம் கருதுவதாகவும், கிளை நிலையங்கள் தொடர்ந்து உடைக்கப்பட்டு வருவது மட்டுமல்லாது கள் உற்பத்தி செய்யும் பனை மரங்களினை இரவு வேளைகளில் இவ்விஷமிகள் பாளைகளை முறித்து எறிவதுடன் உற்பத்தி கலன்களையும் உடைத்து நாசம் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஏப்ரல் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.